விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 தை 06 ஞாயிற்றுக்கிழமை (19.01.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 031

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## வடக்கிலிருந்து இராணுவம் திரும்பப்பெறமாட்டாது

### அமெரிக்காவின் கோரிக்கையை நிராகரித்தது இலங்கை

(கொழும்பு)

வடக்கில் நிலைக்கொண்டுள்ள இராணுவத்தினரை திரும்ப அழைககப்போவதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

வடக்கில் நிலைக்கொண்டுள்ள இராணுவத்தினரை திரும்ப பெறுதல் உட்பட ஆறு விடயங்களை நிறைவேற்றினால், எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட உள்ள யோசனைகள் சிலவற்றை விலக்கிக்கொள்வதாக அமெரிக்கா விடுத்த கோரிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

அமெரிக்காவின் இலங்கைக்கு

23-ம் பக்கம் பார்க்க

### பௌத்த தீவிரவாதத்தை தடைசெய்யுங்கள்



(கொழும்பு)

கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மதத்தலங்களை தாக்கி வரும் தீவிரவாத பௌத்த அமைப்புக்களை அரசாங்கம் தடைசெய்ய வேண்டும் என்று

24-ம் பக்கம் பார்க்க

## மன்னாரில் குவியும் மனித எலும்புக் கூடுகள்

### நேற்றும் 3 மீட்பு



(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் உள்ள மனித புதைகுழி 9வது தடவையாக நேற்று சனிக்கிழமை மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் தோண்டப்பட்டபோது மேலும் மூன்று மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நீதவான் ஆனந்தி

02-ம் பக்கம் பார்க்க

# இராணுவ முற்றுகைக்கு பின்பே உறவுகள் காணாமல் போயினர்!

### ஜனாதிபதி விசேட ஆணைக்குழுவிடம் நேரடி சாட்சி



(கிளிநொச்சி)

இறுதிக் கட்டப்போரில் இராணுவம் பொக்ஸ் (இராணுவ முற்றுகை) அடித்து பிடித்த பின்பே எமது உறவினர்கள் காணாமல் போனார்கள் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக்குழுவிடம் காணாமல் போனோரின் உறவுகள் மீண்டும் ஒரு முறை நேரடியாக சாட்சியமளித்துள்ளனர்.

(23ஆம் பக்கம் பார்க்க...)



### வடக்கில் இன்னும் ஊடக அடக்குமுறை



செய்திகள் பக்கம் 03

### நாட்டின் அபிவிருத்திக்கே கடன் பெறுகின்றேன்



செய்திகள் பக்கம் 13

### காணாமல் போனவர்கள் உயிருடன் உள்ளனரா?

செய்திகள் பக்கம் 06

### அரசியல் தீர்வை அரசு தராது



செய்திகள் பக்கம் 07

### உள்ளகப் பாதுகாப்பை அலட்சியம் செய்யாதீர்கள்

ஆசிரியர் தலையங்கம்

செய்திகள் பக்கம் 21

### சென் பற்றிக்ஸ் சம்பியன்



விளையாட்டு பக்கம் 22

### தமிழக - இலங்கை மீனவர் பேச்சுவார்த்தை 27-ம் திகதி ஒத்திவைப்பு

(சென்னை)

இலங்கை-தமிழக மீனவர்களுக்கிடையே ஜனவரி 20 ஆம் திகதி நடைபெறவிருந்த பேச்சுவார்த்தையை தமிழக முதல்வர் ஜெயலலிதா ஒத்திவைத்துள்ளார்.

இதனால், இலங்கை - தமிழக மீனவர்களிடையேயான பேச்சுவார்த்தை எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் இலங்கை பிரதிநிதிகளை தேர்வு செய்ய மத்திய அரசிடம் இலங்கை கால அவகாசம் கோரியதைத் தொடர்ந்தே பேச்சு வார்த்தை ஒத்திவைக்கப்பட்டுள்ளது (செ-11)

## இலங்கை மீதான மதிப்பீட்டை ஐ.நா அறிக்கை வெளிப்படுத்தும் - பிரிட்டன்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் அறிக்கையைக் கொண்டு இலங்கை குறித்த மதிப்பீடுகளை மேற்கொள்ள முடியும் என பிரித்தானியா தெரிவித்துள்ளது. எதிர்வரும மார்ச் மாதம் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 26-ம் திகதி ஆணைக்குழுவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பில் விசேட அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க உள்ளார். அதன் மதிப்பீட்டை வைத்து யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் நம்பகமான சுயாதீன உள்ளக விசாரணைகள் நடத்தப்படாவிட்டால், சர்வதேச விசாரணைகளுக்காக பிரித்தானியா வலியுறுத்தும் என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஹியூகோ ஸ்வாயர் தெரிவித்துள்ளார்.

மனித உரி

23-ம் பக்கம் பார்க்க

## இலங்கை மீனவர்கள் 61 பேர் சிறையிலிருந்து நேற்று விடுதலை

(சென்னை)

தமிழ்நாடு, புழல் சிறையில் இருந்து நேற்றுச் சனிக்கிழமை மேலும் 61 இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரம் மற்றும் சென்னையில் இந்திய கடல் பகுதியில் அத்துமீறி வந்து மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் 179 பேரை கடந்த 3 மாதத்துக்கு முன்பு இந்திய கடலோர காவல் படையினர் பிடித்தனர்.

பின்னர் அவர்கள் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர். பொலிஸார் அவர்களை கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தி புழல் ஜெயிலில் அடைத்தனர்.

இந்தநிலையில் இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்களை விடுதலை செய்ய பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.


இதன்பிரகாரம் இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இதையடுத்து தமிழக சிறையில் உள்ள இலங்கை மீன

02-ம் பக்கம் பார்க்க

## புலிகள் வெற்றி பெற்றிருந்தால் போர்க்குற்றம் சுமத்தப்பட்டிருக்காது

### இப்படிக் கூறுகிறார் அமைச்சர் விமல்



(கொழும்பு)

யுத்தத்தில் விடுதலைப் புலிகள் வெற்றி பெற்றிருந்தால் அந்த அமைப்புக்கு எதிராக எவ்விதமான போர்க் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டிருக்காது என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும்

23-ம் பக்கம் பார்க்க

## அரச நிறுவனங்களில் பேஸ்புக் பாவனை

(கொழும்பு)

இலங்கையில் அரச நிறுவனங்களில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் முகநூல் (போஸ்புக்) உள்ளிட்ட சமூக வலைத்தளங்களை அதிகளவில் பயன்படுத்தி வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

பஹாலகம பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் அவர் இதனை குறிப்பிட்டார்.

அரச பணிகளை செய்வதற்காகவே அரச அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு கணனிகள் வழங்கப்பட்டுள்ளன.

02-ம் பக்கம் பார்க்க




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

வர்களை விடுவிக்கும் நடவடிக்கைகளை தொடங்குமாறு முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.

அதன் அடிப்படையில் புழல் சிறையில் இருந்து கடந்த 13-ந் தேதி 52 இலங்கை மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்றுச் சனிக்கிழமை மேலும் 61 இலங்கை மீனவர்கள் புழல் சிறையில் இருந்து விடுவிக்கப் பட்டனர்.

அவர்கள் ஒரு பஸ் மற்றும் ஒரு வானில் ஏற்றப்பட்டு எழும்பூரில் உள்ள புத்த மடத்துக்கு இலங்கை செல்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டனர். (செ-11)

## அரச...

ஆனால் கணனிகளை பயன்படுத்தி இந்த அதிகாரிகளும் ஊழியர்களும் சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி வருகின்றனர் என ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

நாங்கள் இதற்கான மாற்று வழிகள் குறித்து ஆராய்ந்து வருகின்றோம்.

அரச ஊழியர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் அவாகள் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும் என அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (செ-11)

## மன்னாரில்...

கனகரட்ணத்தின் உத்தரவிற்கமைவாக நேற்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மு.ப 11 மணிவரை குறித்த மனித புதைகுழி மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் மற்றும் அனுராதபுர சட்ட வைத்திய நிபுணர் டி.எல்.வைத்தியரெட்ண ஆகியோர் முன்னிலையில் தோண்டப்பட்டது.

இதன்போது முதலில் இரண்டு மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதோடு மேலும் ஒரு மனித எலும்புக்கூடு உள்ளமை அடையாளம் காணப்பட்டது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வரை 37 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்றுடன் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் தொகை 40 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று சனிக்கிழமை காலை 11 மணிவரை 3 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. இதன்போது மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப் ஆண்டகை மற்றும் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அன்ரனி விக்டர் சோசை ஆகியோர் மனித புதைகுழி உள்ள இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

மீண்டும் நாளை திங்கட்கிழமை 20-ம் திகதி மன்னார் நீதவான் முன்னிலையில் குறித்த மனித புதைகுழி தோண்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# கைதிகள் தொடர்பான அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

சகல சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள மரண தண்டனை மற்றும ஆயுள்தண்டனை கைதிகள் தொடர்பான அறிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்ததாக சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு அமைச்சு குறிப்பிடுகின்றது.

குறித்த அறிக்கையின் பிரகாரம் 424 மரண தண்டனைக் கைதிகளும் ஆயுள் தண்டனை கைதிகள் 223 பேரும் சிறைகளில் காணப்படுவதாக சிறைச்சாலைகள்மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் ஜீ.எஸ். விதானகே தெரிவித்தார்.

மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த கைதிகள் சிலர் அண்மையில் தமக்கான தண்டனையை நிறைவேற்ற வேண்டும் அல்லது தளர்த்துமாறு வலியுறுத்தி போகம்பரை சிறைச்சாலையின் கூரை மீதேறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதனையடுத்தே மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் விபரங்கள் திரட்டப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த கைதிகள் தொடர்பில் எதிர்காலத்தில் ஜனாதிபதியினால் தீர்மானமொன்று எடுக்கப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# வறுமையை ஒழிக்கவே சுற்றுலாத்துறை அபிவிருத்தி

(கொழும்பு)

நாட்டில் வாழும் சகல வறிய மக்களின் முன்னேற்றத்தை இலக்காக கொண்டு சுற்றுலாத்துறை மற்றும் அபிவிருத்தியை மேற்கொள்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில ராஜபக்ஷ தெரிவித்தார்.

உலகில் அபிவிருத்தியடைந்துவரும் பல நாடுகள் வறுமையை ஒழிக்க சுற்றுலாத்துறையை பயன்படுத்தி வருவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

2016 ஆம் ஆண்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக 50 ஆயிரம் ஹோட்டல் அறைகளை நிர்மாணிக்கும திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட சீகிரியின் யானை (சீகிரியே அலியா) என்ற ஹோட்டலை நேற்று திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

20 ஏக்கர் நிலத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சீகிரியின் யானை ஹோட்டல் மூலமாக பிரதேச மக்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் 720 பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் எனவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (செ-11)

# போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை தொழிற்பயிற்சி போதனாசிரியர்களை இணைத்துக்கொள்வதற்காகத் தகுதியான விண்ணப்பத்தாரிகளுடமிருந்து விண்ணப்பங்கள் கோருவதாக இவ் அதிகாரசபையின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார்.

இதற்கான கல்வித் தகைமையாக க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ், கணிதம், ஆங்கிலம உட்பட நான்கு திறமை சித்திகளுடன் 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

தொழில்சார் தகைமையாக அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவகத்தில் NVQ-4 மட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட தகைமை அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவகத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 3 வருடகாலத்திற்கு மேல தொழிற்பயிற்சி சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் டிப்ளோமா அல்லது சம்பந்தப்பட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இளமாணிப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன சம்பந்தப்பட்ட துறையில் இரண்டு வருடத்திற்கு மேலான அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

எனவே ஆர்வமுடையவர்கள் தாங்கள் விண்ணப்பிக்கும் துறையைக் குறிப்பிட்டு சுயவிபரக்கோவையை தலைவர், இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை, நிபுணத்தாபியச 4 ஆம் மாடி, இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை, நாரகேண்பிட்டி, கொழும்பு - 05 எனும் முகவரிக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளனர். (அ-2)


**SOLAR**

Solar panel with battery and light. Cost effective package for the studying children without electricity access. (10 w panel, 7A UPS battery, Charge controller, 9 w LED bulb) Rs 8500.00

மின்சார வசதியில்லாத பிரதேசங்களில் வாழும் கல்வி கற்கும் மாணவர்களிற்கான தீர்வு. சூரிய மின்கலத்துடன் மின்குமிழ், மின்கலம் மற்றும் தேவையான உதிரிப்பாகங்களுடன். ரூ.8500.00

தொடர்புகளிற்கு: 0779688330

(4971)



**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்

☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-6266)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532


# 5 - ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 1941 . 11 . 20

இறப்பு 2009 . 01 . 28

அமரர்

## பிள்ளையினார் சிவபாதம்

(தலைவர்-கொற்றாவத்தை கிராம அபிவிருத்தி சங்கம்)

வைகறைக்காக நாம் காத்திருக்க
வானத்தில் எங்கள் கறுப்புச் சூரியன் அன்று
வரவேயில்லை
காரிருள் பூமியில் மட்டுமல்ல
நம் இதயங்களிலும்தான்
ஒரு நல்ல நடிகனை நாடு இழந்தது பற்றியும்
ஒரு பேச்சாளனின் பிரிவு பற்றியும்
பேசியது உலகு
நாமோ
பேச்சிழந்தோம்..... மூச்சிழந்தோம்.....

"ராஜினி இல்லம்"
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்

(சி-6274)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



உள்ளமெங்கும் உம் நினைவு
கண்முன்னே உமது விம்பம்
அள்ளி அணைத்த காலங்களும்
அரவணைத்த நேரங்களும்
எம் வாழ்வின் வசந்தமிங்கு
பொய்யாகி போனதின்று
எம் வாழ்வின் நம் தாயே
எப்போதும் உமை மறவோம்!

மண்ணில் 13.08.1948

விண்ணில் 20.12.2013

வீமன்காமம் தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் பத்திரகாளி கோயிலடி, சுழிபுரத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட

எமது குடும்பத் தலைவி

அமரர்

## சண்முகநாதன் கமலாதேவி

அவர்களின் வீட்டுக்கிருத்தியமும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று 19.01.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானதீபம்,
22/12, பத்திரகாளி கோவிலடி,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்

(4974)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எட்டு இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருட்டுப் போயின

(மானிப்பாய்)

உடுவில் பகுதியில் 8 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கூரை பிரித்து களவாடப்பட்டுள்ளன.

உடுவில் சோமரந்தோட்டப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் வீட்டின் கூரையினைப் பிரித்து நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 8 இலட்சம் ரூபா பெறுமதியுடைய 16 பவுண் தங்க நகைகளைத் கொள்ளையிட்டு சென்றுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.


சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வீட்டிலிருந்த கணவன், மனைவி இருவரும் நிகழ்வுக்குச் செல்வதற்காக வீட்டினைப் பூட்டிவிட்டுச் சென்றுள்ளனர். இதனை சாதகமாகப் பயன்படுத்திய திருடர்கள் வீட்டின் கூரை ஓடுகளைக் கழற்றி உள்நுழைந்த வீட்டின் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

சில மணி நேரம் கழித்து மீண்டும் வீட்டிற்கு வந்த கணவனும் மனைவியும் தங்கள் வீட்டின் கதவு திறந்திருப்பதனை அவதானித்து வீட்டினுள்ளே பார்த்துள்ளனர்.

இதன் போது கூரையின் ஓடுகள் விலக்கப்பட்டு வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அலுமாரியிலிருந்த தங்க நகைகள் திருடியுள்ளமை தெரியவந்துள்ளது.

தொடர்ந்து இது தொடர்பாக வீட்டு உரிமையாளர்கள் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-9-23)




# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வட்டு. மேற்கு உலக்கைப்பளச்சி அருள் மிகு பத்திரகாளி அம்பிகா சமேத வீரபத்திர சுவாமி தேவஸ்தானத்தில் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.10 மணி தொடக்கம் 10 மணிவரை நடைபெறும்.

இதில் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிக்கு எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று இரவு 7 மணிக்கு பூஜை, திருக்கல்யாணம் நிகழப்பெற்று பூந்தண்டிகையில் சுவாமி வீதியுலா வருகை தந்து அடியவர்களுக்கு அருள் பாலிப்பார். (அ-2)

# இனம் தெரியாத நபரொருவர் தம்பதியரை தாக்கினார்

## படுகாயமடைந்த இருவரும் வைத்தியசாலையில்

(மிருசுவில்)

மிருசுவில் பகுதியிலுள்ள வீடொன்றினுள் புகுந்த இனந்தெரியாத நபரொருவர் தம்பதியினரைத் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சம்பவ தினம் ஓய்வு பெற்று பொலிஸ் அதிகாரியின் வீட்டினுள் கறுப்புத் துணியினால் முகத்தை மறைத்துக் கொண்டு புகுந்த இனந்தெரியாத நபர் முட்கம்பிகள் போன்ற கூரிய பொருட்களைப் பயன்படுத்தி பொலிஸ் உத்தியோகத்தரையும் மனைவியையும் தாக்கியுள்ளார்.

இவர்கள் குரல் எழுப்பியதனால் அயலவர்கள் வந்ததைக் கண்ட அந் நபர் தப்பியோடியுள்ளார்.

இதில் ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தரான எஸ்.பி.அந்தோனிப்பிள்ளை (வயது-82), அவரின் மனைவியான பிலோமினா கிருபாராணி (வயது-77) ஆகிய இருவரும் தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மனைவி மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

அத்தோடு தாக்குதலை மேற்கொண்ட இனந்தெரியாத நபரின் கையில் கிரனைட் இருந்ததாக தாக்குதலுக்குள்ளான தம்பதியர் தெரிவித்துள்ளனர்.

வீட்டார் இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதால் திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதா என்பது அறிய முடியாதுள்ளது.

கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-9-85)

# இளைஞர் பரிமாற்றுத்திட்டம்

(மானிப்பாய்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கும், களுத்துறை மாவட்ட இளைஞர் யுவதிகளுக்குமிடையே இளைஞர் பரிமாற்றுத்திட்டம் இடம்பெறவுள்ளது.


இதற்காக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 50 இளைஞர் யுவதிகள் களுத்துறை மாவட்டத்திற்கு நேற்று பயணமாகியுள்ள நிலையில், இந்நிகழ்ச்சித்திட்டம் இன்று முதல் 24ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வின் ஆரம்ப வைபவம் பண்டாரகம் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள யட்டகல ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

முன்னதாக இரண்டு மாதங்களிற்கு முன்னர் களுத்துறை மாவட்ட இளைஞர் யுவதிகள் யாழ்.மாவட்டத்திற்கு வந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (அ-9-23)





யாழ்.மீடியா கிளப் திறப்பு விழா நேற்று நல்லூர் கோவில் வீதியில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மீடியா கிளப்பினை விருந்தினர்கள் திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம். இதில் ஊடகவியலாளர்களின் சந்திப்பும் இடம் பெற்றது.

(படங்கள்:-உ.சாளின்)

# வடக்கில் இன்றும் ஊடக அடக்குமுறை தொடர்கின்றது- சுரேஷ் எம்.பி தெரிவிப்பு

சர்வதேசமே கண்டிக்கும் அளவில் இலங்கையில் ஊடக சுதந்திரம் மோசமடைந்துள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் கோவில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள யாழ். மீடியா கிளப் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

இலங்கையில் குறிப்பாக வடக்கில் இன்றும் ஊடக அடக்கு முறைகள் காணப் படுகின்றமையோடு ஊடகவியலாளர்களுக்கு அச்ச நிலையும் காணப்படுகின்றது.

நாட்டில் பல எண்ணிக்கையிலான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளதோடு பல ஊடகபணியாளர்களும் கொல்லப்பட்டிருந்தனர்.

2009 இற்கு முன்னர் இவ் அபாய நிலை காணப்பட்டபோதிலும் அவ் அபாய நிலை தற்போதும் நீடித்தே வருகின்றது.

ஊடக அபாய நிலையை அரசும் அரசினை பின்னணியாக கொண்டியங்கும் சிலரே மேற்கொண்டு வருகின்றனர்.

ஊடக தர்மம் என்பது மிக முக்கியமான தாகும். குறிப்பாக ஒரு தமிழன் கொல்லப்பட்டால் அதனை தமிழ் ஊடகங்கள் தமிழர் ஒருவரே கொல்லப்பட்டார் என செய்தி பிரசுரிக்கின்றதே.

அதே செய்தியை ஆங்கிலப் பத்திரிகை புலிச் சந்தேகநபர் என செய்தி வெளியிடுகின்றது. ஆனால் சிங்களப் பத்திரிகைகள் புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டு விட்டார் என்றே செய்தி வெளியிடுகின்றது.

குறிப்பாக அரசைப் பொறுத்தவரையில் வடக்கில் இராணுவத்திற்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

பொதுமக்களின் வாழ்விடங்களை அழித்து அக்காணிகளை இராணுவத்தினருக்கு வழங்கி வருகின்றது.

இந்தியாவில் ஊடக சுதந்திரம் மேம்பட்டிருப்பதுடன் ஊடகவியலாளர்களும் சுதந்திரமாக செயற்பட்டு வருகின்றனர்.

நேற்றுக்கூட (நேற்று முன்தினம்) யாழ்.நீதிமன்றிற்கு முன்னால் யாழ்.ஊடகவியலாளர்கள் ஐவருக்கு இங்குள்ள காடையர்களால் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனை நீதித்துறையும் பொலிஸாரும் கண்டும் காணாமலும் இருந்துவிடாது இவர்களை கைது செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

சமூகம் திருத்தப்படல்வேண்டுமாயின் ஊடகப் பணி அவசியம். ஆகவே அதனைச் சுதந்திரமாக செயற்படுத்துவதற்கு அரசு அனுமதிக்க வேண்டும்.

பொதுமக்களின் பிரச்சினைகளை எந்த அரசியல் பின்னணி இன்றியும் பக்கச் சார்பின்றியும் ஊடகங்கள் வெளிக்கொணர வேண்டும் என்றார்.

இதேவேளை இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்த கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிறிநிக ஜெயக்கொடி ஆவா குழுவை கைது செய்து சிறப்பாக செயற்பட்டு வருகின்றார் என பாராட்டு தெரிவித்ததோடு வடக்கில் இடம்பெறுகின்ற அச்சுறுத்தல்கள், காணி அபகரிப்புக்கள் தொடர்பிலும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவிடம் நேரடியாகவே கேள்வியெழுப்பியிருந்தார். (அ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்கள் அத்துமீறி நுழைவதை நிறுத்த வேண்டும்

## மீனவர் சங்க தலைவர்கள் டில்லியில் தெரிவிப்பு

**இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடிப்பதை நிறுத்துமாறு, தமிழக மீனவர்களை மன்றாடிக் கேட்போம். அதனை அவர்கள் ஏற்க மறுத்தால் தமிழக மீனவர்களின் வருகையைத் தடுக்க கடுமையான சட்டங்களை முன்னெடுக்குமாறு எமது இலங்கை அரசை வலியுறுத்துவோம் என இலங்கையிலிருந்து புதுடில்லி சென்றுள்ள மீனவர்கள் சங்க தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.**

தமிழகத்தில் நாளைய தினம் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைக்குச் செல்வதற்கு முன்னர் புது டில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த இலங்கை மீனவர்கள் சங்கத் தலைவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

30 வருடகால யுத்தத்தின் பின்னர் புதிய வாழ்க்கையை வாழத்தொடங்கும் வட பகுதி மீனவர்களை வாழ விடுங்கள் என்று மன்றாடிக் கேட்போம்.

எமது கோரிக்கையை ஏற்க மறுத்தால், இது தொடர்பில் கடுமையான சட்டத்தை இயற்றுமாறு எமது இலங்கை அரசை கோருவோம் என்றும் இலங்கை மீனவர் சங்க தலைவர்கள் திட்டவட்டமாக புதுடில்லியில் அறிவித்துள்ளனர்.

இலங்கையில் வாழும் வட கிழக்கு பகுதி தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையிலான தமிழக மீனவர்களின் எந்த ஒரு கோரிக்கையையும் ஏற்க மாட்டோம் என்றும் இலங்கை மீனவர் பிரதிநிதி குழு அறிவித்துள்ளது.

வடக்கில் யுத்தம் நிறைவடைந்துள்ளதால் அகதிகளாக வாழ்ந்து வந்த இப்பகுதி மீனவர்கள் சொந்த இடங்களுக்கு திரும்பி உள்ளதாகவும், அவர்களின் வாழ்வாதாரம் தமிழக மீனவர்களின் அத்துமீறல் காரணமாக பாதிப்புக்கு உள்ளாவதாகவும் அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையே பாரம்பரிய உறவு உள்ளபோதும் தற்போது வாழ்க்கையை இழந்து வாடும் இலங்கை தமிழ் மீனவர்களின் நலனை காக்க வேண்டிய பொறுப்பு தமிழக தமிழ் மீனவர்களுக்கும் உள்ளதால், அவர்கள் தேவையான ஒத்துழைப்பை கொடுக்கவேண்டும் என்றும் இலங்கை மீனவர்கள் கோரியுள்ளனர்.

அத்துடன் இந்திய மீனவர்கள் தடை செய்யப்பட்ட மீன்வலைகளை பயன்படுத்தி கேடு விளைவிப்பதாகவும், இயற்கை வளங்களை சூறையாடி நாச செயல்களில் ஈடுபடுவது சகித்துக்கொள்ள முடியாது என்றும் குற்றம்சாட்டியுள்ளனர்.

இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினை குறித்து பேச்சு நடத்துவதற்காக இந்தியா சென்றுள்ள இலங்கை மீனவர் சங்க பிரதிநிதிகள் ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தினர். விரைவில் தமிழகத்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையின்போது நிரந்தர தீர்வு எட்டப்படும் என நம்பிக்கை தெரிவித்துள்ள இந்த குழு, தமிழக முதல்வர் இந்த பிரச்சினையில் தீவிரம் காட்டவில்லை என்று வருத்தம் தெரிவித்தனர்.

இலங்கையில் வட மாகாணத்தில் பொறுப்பேற்றுள்ள புதிய முதல்வர் விக்னேஸ்வரனும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் இவ்விவகாரத்தில் பேச்சுவார்த்தை நடத்தினால் பிரச்சினைக்கு விரைவான தீர்வு கிடைக்கும் என நம்புவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த மன்னார் பகுதி மீனவர் அமைப்பு குழு தலைவர் ஜஸ்டின் ஆல்பர்ட் சொய்சா,

இருநாட்டு மீனவர்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபடும்போது எங்களது கோரிக்கையை தமிழக மீனவர்கள் ஏற்க மறுத்தால், அவர்களில் ஒரு பத்துபேரை கொண்ட குழுவை அமைக்க கூறி இலங்கை மீனவர்கள் வாழும் வாழ்க்கையை காண அழைத்துச் செல்வோம் என்றும் கூறினார். (அ-2)

## இராசி பலன்

19.01.2014

(தை 06, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு
திருதியை பின்னிரவு 4.33 மணிவரை
மகம் முன்னிரவு 8.47 மணிவரை
இராகுகாலம் 5.05 - 6.35 மணிவரை
சுபநேரம் 9.35 - 11.05 மணிவரை

**மேடம்** பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம். வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டியநாள். காரிய இடையூறுகள் ஏற்படலாம். பிறர் உதவியுண்டு.

**இடபம்** வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும், தாய் வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கண்ணன் வழிபாடு பாரிய வெற்றி தரும். விருந்தினர் வருகை உண்டு.

**மிதுனம்** நல்லவர்கள் தொடர்பால் நலம் காணும் நாள். உள்ளொன்று வைத்து புறம் ஒன்ற பேசு பவர்களை இனம்கண்டு கொள்வீர்கள். பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம். புதிய பொருட்சேர்க்கையுண்டு. புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**சிங்கம்** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள். நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பெரிய மனிதர்களின் தொடர்புகள் ஏற்படும்.

**கன்னி** வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் சிறு ஆதாயமும் பெறுவீர்கள். சயனசுகக் குறைவான நாள். பிதா வழி நன்மையுண்டு.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவார். வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள். முயற்சிகள் எளிதில் கை கூடும். போசன நன்மை உண்டு.

**விருச்சிகம்** சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும். எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள். சுக நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்பு உண்டு.

**தனுசு** உதாசீனப்படுத்தியவர்கள் உங்களிடம் உதவி கேட்டு வரலாம். சாமர்த்தியமாக பேசி சாதனை படைப்பீர்கள். குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும்.

**மகரம்** குடும்பத்தில் சில விவாதங்கள் ஏற்படும் வாய்ப்பு உண்டு. முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம். பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள். நண்பர்கள் சந்திப்பு உண்டு. இனிய அனுபவங்கள் கை கூடும் நாள். போசன நன்மை உண்டு.

**மீனம்** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள். காணாமல் போன பொருளொன்று மீண்டும் கைக்குக் கிடைக்கும். தேக நலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும்.

வளவன்

## மணவாளக்கோல விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை, ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் மணவாளக்கோல திருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணிக்கு திருப்பள்ளியெழுச்சியுடன் ஆரம்பமாகவுள்ளது.

அதனைத் தொடர்ந்து பூசைகள் இடம்பெற்று மாலை 5 மணிக்கு வசந்த மண்டப பூசை, திருவூஞ்சல் நடைபெறும். மாலை 6 மணிக்கு அம்பாள் பூந்தண்டிகையில் எழுந்தருளி வெளிவீதியுலா வரும் காட்சி இடம்பெறும். (அ-2)

## வாரம் ஒரு தகவல்

### அடையாளம்

“சேர் உங்களுக்கு என்னை அடையாளம் தெரியுதா?”

“என்னப்பா இப்படிக் கேட்கிறாய்... என்னிடம் படித்த பையன் தானே நீ...?”

“ஆமாம் சேர் !அ... அது... வந்து... ஒரு விடயம் சேர்...!”

“என்னப்பா...இது வார்த்தை திக்திக் வருகுது... உடம்பும் நடுங்குது ... நீ ஏதோ தப்பு பண்ணியிருக்கிறாய்!”

“எப்படி சேர் சொல்றீங்க?”

“நான் சொல்லவில்லை... பஞ்சதந்திரம் சொல்கிறது. ஒரு குற்றவாளி எப்படி இருப்பான் என்பதற்கு சில அடையாளம் உண்டு என்று சொல்கிறது”

“அப்படியா சேர்!”

“ஆமாம் ... குற்றம் செய்து விட்டு பயந்து போய் இருப்பவனுக்கு முகம் வெளிறுமாம் .. பேச்சுக் குளறுமாம் ... மிரண்டபார்வை ... ஒடுங்கிய கர்வம் ...தள்ளாடித் தள்ளாடி நடப்பான் ... முகம் வெளுத்துப் போகும் ...நெற்றியில் வியர்த்துக் கொட்டும் ... வார்த்தைகள் திக்கும்... உடல் நடுங்கிக் கொண்டிருக்கும் ... பார்வை கீழ் நோக்கிச் செல்லும் ... இந்த வெளிப்படையான அடையாளங்களைக் கொண்டு குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று சொல்கிறது. பஞ்சதந்திரம் ! இந்த அறிகுறியெல்லாம் இப்பொழுது உன்னிடம் இருக்கிறது.என்ன விடயம் சொல்... எதற்காக என்னைத் தேடி வந்தாய் ?”

“ப...ப... பத்திரிகை கொடுக்க ...”

“என்ன பத்திரிகை?”

“கல்யாணப்பத்திரிகை!”

“யாருக்குக் கல்யாணம் ?”

“எனக்குத்தான் சேர்!”

“அடப்பாவி ... அதற்காகவா இப்படி நடுங்குகிறாய்? சந்தோஷப் படவேண்டிய விடயமல்லவா இது. பத்திரிகையைக் கொண்டு வா இப்படி...! பொண்ணு யாரு?”

“உ...உங்க மகள் தான் சேர்...!”

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 60 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 100 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 80 | 80 |
| தக்காளி | 40 | 60 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 30 | 20 | 60 | 50 |
| கரட் | 60 | 40 | 80 | 80 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 |
| புடோல் | 30 | 60 | 40 | 60 |
| வாழைக்காய் | 30 | 30 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 100-120 | 180 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 90 | 100 |
| பாகற்காய் | 100 | 100 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 30 | 60 |
| கருணைக் கிழங்கு | 20 | 20 | 50 | 40 |
| பயற்றங்காய் | 150 | 120 | 70 | 120 |
| லீக்ஸ் | 60 | 80 | 90 | 100 |
| பீற்றூட் | 60 | 70 | 30 | 80 |
| கறிமிளகாய் | 120 | 140 | -- | 120 |
| போஞ்சி | 50 | 60 | 90 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | -- | -- | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 25 | 40 |
| தேசிக்காய் | 30 | 40 | 70 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40-50 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 90 | 80 | 90 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தில் 40 ஆயிரம் மக்கள் பலியானமைக்கு ஆதாரமில்லை அரசாங்கம் தெரிவிப்பு

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட டுவிட்டர் தகவல் தவறானது என அரசாங்கம் அறி வித்துள்ளது.

இறுதிக் கட்ட போரின் போது இராணுவத்தினர் நடத்திய தாக்கு தல்களில் ஆயிரக் கணக்கான பொதுமக்கள் உயிரிழந்த இடம் என குறிப்பிட்டு அமெரிக்கத் தூதரகம் புகைப்படத்துடன் டுவிட்டர் தகவல் வெளியிட்டிருந்தது.

எனினும், இந்த டுவிட்டர் தகவல் பிழையானது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சர்வதேச நாடுகளுக்கு அரசாங்கம் தெளிவுபடுத் தும் பணிகளை ஆரம்பித்துள்ளது.

புனித அந்தோனியார் விளையாட்டரங்கில் அப்பாவி பொதுமக் கள் பெரும் எண்ணிக்கையில் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தனர் என அமெரிக்கா வெளியிட்டுள்ள தகவல் பொய்யானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் தொடர்பிலான தகவல்களை மன்னார் ஆயர் வெளியிட்டுள்ளார்.

எனினும், அந்தக் காலத்தில் குறித்த பகுதியில் மதிப்பீடுகளை செய்யக் கூடிய சாத்தியம் காணப்படவில்லை.

எனவே, சம்பவத்தில் 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டதாக வெளியான தகவல்கள் எவ்வித ஆதாரமும் இன்றி சுமத்தப்பட்ட குறறச் சாட்டாகும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. (அ-2)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 19.10.1949

உதிர்வு: 29.01.2013

திருமதி சிவஞானசுந்தரம் பரமேஸ்வரி (பேபி)

ஆண்டொன்று ஆனபோதும் ஆறவில்லை எம்மனது
தூண்டுசுடரொளியாய் எமைக்காத்து வாழ்ந்தவரே
ஆண்டவன் தாழ் சேர்ந்திட்ட அன்புருவமானவரே
நீண்ட வழிநோக்கி நித்தமும் ஏங்குகிறோம்.

பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.

மகன் சி.சிறீகாந்தன் குடும்பம்.

(சி/6264)

## உங்களுக்குத் தேவையான காணிகள் வீடுகளை வாங்கவும் விற்கவும் முதன் முதலாக வட பகுதியில் உதயமாகின்றது.



## றியல் எஸ்ரேற் Real Estate

இல. 50, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்திக்கும் நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கும் இடையில்) எனும் முகவரியில்

(சி/6259)

## AFTER GCE A/L STUDY IN UK

2013 இல் வெற்றிகரமாக UK பயணமான மாணவர்களில் சிலர்



Krishanth Colombo · Tharmika Jaffna · Maduka Colombo · Saraniya Colombo · Usha Gowry Jaffna · Venuluxmy Colombo · Parija Vavuniya · Gowrykanthan Point Pedro

Viththagan Kokuvil · Bamini Valvettithurai · Rajeevan Jaffna · Niththiya Valvettithurai · Luxon Jaffna · Abiram Jaffna · Senisda Jaffna · Aravanthan Jaffna

Sutharmini Jaffna · Priyanthan Urumparai · Jerin Jaffna · Kavery Thirunelveli · Nivethan Kokuvil · Suthakan Kondavil · Amalajelan Delft · May be you

Exponet (Pvt) Ltd 2001 14 YEARS 2014 EXCELLENCE

### Spot Admission 2014

### நீங்கள் ஏன் Exponet இனை தெரிவுசெய்ய வேண்டும்

- கடந்த 14 வருட காலமாக ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களின் UK உயர் கல்வி கனவை நனவாக்கி வெற்றி நடை போடுகின்ற ஸ்தாபனம்
- எமது நிறுவனம் எண்பதிற்கு மேற்பட்ட முன்னிலை வகிக்கின்ற கல்லூரிகள், பல்கலைக்கழகங்களிற்கு மிகத் தெளிவான ஆலோசனைகளையும், பகுதி நேர வேலை வாய்ப்புக்களுடன் கூடிய விசாக்களையும் பெற்றுக்கொடுக்கின்றது
- நீங்கள் தெரிவு செய்வது கல்லூரியாயின் 2-3 வருடகாலமும், பல்கலைக்கழகம் ஆயின் குறைந்தது 4 வருட விசாவினையும் பெற்றுக்கொள்ள முடியும்
- எம்மிடம் Student Visa அனுமதிக்காக இணைவோருக்கு IELTS வகுப்புக்கள் ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது
- சகல ஆவணங்களும் மிகத் திருத்தமாக சமர்ப்பிக்கப்படின் இரு மாதகாலங்களில் உங்கள் UK பயணத்தினை உறுதிப்படுத்தி கொள்ள முடியும்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் visa தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.
- Student Visa தொடர்பான வழிகாட்டலில் யாழ் மாணவர்களின் அதிஉயர் நம்பிக்கையை பெற்ற எமது நிறுவனத்துடன் இணைந்து உங்கள் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ளுங்கள்

உயர்தர கல்லூரிகளையும், பல்கலைக்கழகங்களையும் தன்னகத்தே கொண்ட London நகரில் நீங்களும் கல்விகற்க ஓர் அரிய சந்தர்ப்பம்

| | |
|---|---|
| TIME | 19th (Sunday) January 2014 : 09.00 AM - 02.00 PM |
| CONDUCTOR | Director of Exponet Overseas Consultants |
| VENUE | Jaffna Branch (Exponet) |
| INTAKE | February/ March |

EXPONET Overseas Consultants

(சி/6270)

Head Office : 379 - ½, Galle Road, Colombo 06.
Jaffna Branch : 197, Arasady Road, Jaffna. (Between Kantharmadam Junction & Hindu Ladies College)
London Branch : 56, The Gardens Harrow Middlesex, HA1 4EY, UK.

Colombo: 011 7 555511/ 14/ 18
Jaffna: 021 7538395 / 021 2227230
Email: inquiry@expogroup.lk
Web: www.expogroup.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் காணாமற் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை ஆரம்பம்





கடந்த 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குவின விசாரணை வடக்கில் கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுக்காலை 9.30 மணியளவில ஸ்கந்தபுரம் அ.த.க.பாடசாலையில் ஆரம்பமானது.

காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குவின் தலைவர் மக்வெல் பராக்ரம பரனஹம (Maxwell parakrama paranagama) ஆணைக்குழுவின் ஆணையாளர்களான சுரண்யனா வித்யவத்னே, மனோ ராமநாதன் ஆகியோர் முன்னிலையில் இந்த விசாரணை ஆரம்பமானது.

நேற்றுக்காலை ஆரம்பமான இந்த விசாரணைக்கு ஸ்கந்தபுரம், அக்கராயன்குளம், கண்ணகைபுரம் ஆகிய மூன்று கிராமசேவையாளர் பிரிவைச்சேர்ந்த 35 பேர் அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால் இந்த விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்களைவிட மேலதிகமானவர்கள் வருகைதந்ததனால் திருப்பி அனுப்பும் நிலைக்கு ஆணைக்குழுவினைச் சேர்ந்த அதிகாரிகள் தள்ளப்பட்டனர்.

வடக்கில் யுத்த காலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பில் பகிரங்கப்படுத்த வேண்டும் என கற்றுக்கொண்டபாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழ மற்றும ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானங்களிலும் வலியுறுத்தபட்டிருந்தது.

இந்நிலையில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக எதிர்வரும் மார்ச்மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் அமெரிக்காவினால் மீண்டுமொரு தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை யுத்தகாலத்தில் வடக்கில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் தொடர்போராட்டங்களில ஈடுபட்டுவருவதனால் அது தொடர்பில் பொறுப்புகூறும் வகையிலும் காணாமல போனவர்கள் தொடர்பான உண்மை நிலையினை வெளியுலகிற்கு தெரியப்படுத்தும் நோக்கிலும் கடந்த 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இந்த ஆணைக்குழ நியமிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# காணாமற்போனவர்கள் உயிரோடுதான் உள்ளனர் என்று நம்புகின்றீர்களா?

## ஆணைக்குழுவின் கேள்வி இது

யுத்தகாலத்தில் காணாமல் போன உங்கள் உறவினர்கள் தற்பொழுது உயிரோடுதான் உள்ளனர் என்று நீங்கள் நம்புகின்றீர்களா என காணாமல்போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குவின் தலைவர் மக்வெல பராக்ரம பரனஹம (Maxwell parakrama paranagama) கேள்வியெழுப்பியுள்ளார்.

கடந்த 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்ஆக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குவின் விசாரணை வடக்கில கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுக்காலை 9.30 மணியளவில ஸ்கந்தபுரம் அ.த.க.பாடசாலையில் ஆரம்பமானது.



காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குவின் தலைவர் மக்வெல் பராக்ரம பரனஹம ஆணைக்குழுவின் ஆணையாளர்களான சுரண்யனா வித்யவத்னே ,மனோ ராமநாதன் ஆகியோர் முன்னிலையில் இந்த விசாரணை ஆரம்பமானது.

இந்தவிசாரணைக்கென காணாமல்போனவர்களின் உறவினர்கள் 35பேர்ஆணைக்குழுவினாலஅழைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் சுமார் 70 பேருக்கு மேற்பட்டவர்கள் வருகை தந்ததோடு நண்பகல் 12 மணிக்குள் பதிவுகளையும் மேற்கொண்டு ஆணைக்குழுவின் அதிகாரிகளை செய்வதறியாது சங்கடப்படுத்தினர்.

இதனால் அழைக்கப்பட்ட 35 பேர்தவிர்ந்த ஏனையவர்கள் திருப்பி அனுப்பப்பட்டதோடு கிளிநொச்சி தவிர்ந்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு அந்தந்த மாவட்டத்தில் விசாரணை நடத்தப்படும் என்று உத்தரவாதமளிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இந்நிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்களிடம் காணாமல் போனவர்களின் பெயர், முகவரி காணாமறபோன ஆண்டு, இடம் போன்ற பல்வேறு விடயங்கள் கேட்டறியப்பட்டதோடுமிகவும்முக்கிய கேள்வியாக காணாமற்போன உங்கள் உறவினர்கள் உயிரோடுதான் உள்ளனர் என்று நீங்கள் நம்புகின்றீர்களா என்ற கேள்வி ஆணைக்குழுவின் தலைவரினால் எழுப்பப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை காணாமல் போனவர்கள் உயிரோடு இருந்தால் அவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதற்கான விசாரணையே தற்போது மேற்கொளளப்படுகின்றது எனவும் காணாமற் போனவர்களின் உறவினர்களிடம் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இதனைவிட காணாமற் போனவர்களின் குடும்பங்களின் வருமானம் தொடர்பிலும் ஏனைய குடும்ப அங்கத்தவர்களின் விபரங்களும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவினர் கேட்டறிநது கொண்டனர். (அ-6)

# மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணுங்கள்

இந்திய-இலங்கை மீனவர்களிடையே நீடித்து வரும் பிரச்சினைக்கு அரசியலைக் கடந்து தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காங்கிரஸை சேர்ந்த விருதுநகர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் மாணிக்கம் தாகூர். வலியுறுத்தினார்.

டில்லியில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் குழுக்கூட்டத்தில் அவர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது,

இலங்கை- இந்திய மீனவர்களிடையே நீண்ட காலமாக இரு தரப்பு கடல் பகுதியில் மீன் பிடித் தொழிலில் ஈடுபடுவது தொடர்பாக பிரச்சினை நீடித்துவருகிறது.

இரு தரப்பிலும்சிறைகளில் உள்ள மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கை பாராட்டுக குரியது. இரு நாட்டு மீனவர்களிடையே சுமுக தீர்வு ஏற்பட மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுவரை இலங்கை கடற்படையினர் நமது மீனவர்களைத்தாக்கவோ, கைது செய்யவோ கூடாது. இந்த விடயத்தில் அரசியலைக் கடந்து நிரந்தர தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாணிக்கம் தாகூர் கேட்டுக் கொண்டார. (அ-2)

# 600 கிலோ வெங்காய விதைகள் மீட்பு

(கொழும்பு)

நாட்டிற்கு சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 600 கிலோ கிராம் பெரியவெங்காய விதைகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தியாவின் பெங்களூரில் இருந்து இலங்கைப் பிரஜை யொருவர் இவற்றினை நாட்டிற்கு கொண்டு வந்துள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

கைப்பற்றப்பட்ட பெரிய வெங்காய விதைகளின் பெறுமதி 18 இலட்சம் ரூபாவெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றை நாட்டிற்கு கொண்டு வருவதற்கு, விதைகள் சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமெனவும் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப் பிரிவினர் முன்னெடுத்துள்ளதாகவும் பேச்சாளர் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வை அரசுதராது என்ற எண்ணமே நாம் சர்வதேசத்தை எதிர்பார்க்கக் காரணம்

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு






மூன்று தசாப்த காலயுத்தத்தின் கொடிய் விளைவுகளை வடுக்களாக சுமந்துநிற்கும் எமது மக்களுக்கு செய்ய வேண்டிய கட்டாயக் கடமைகளில் ஒன்றை இன்று நாங்கள் ஆரம்பித்திருக்கின்றோம்.

வடமாகாண சபை நிறுவப்பட்ட பின்னர் முதலாவது முள்ளந்தண்டு வடம் பாதிப்படைந்தவர்களுக்கான சுகாதார பராமரிப்பு நிலையம் **வைகறை** என்று பெயர் சூட்டி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தேவைக்கேற்றவாறு வேறு மாவட்டங்களிலும் இது போன்ற பராமரிப்பு நிலையங்களைத் திறந்து வைக்க நவடிக்கையெடுப்போம் என வட மாகாண முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந் நிலையம் நேற்றுமுன்தினம் காலை வவுனியா பம்பைமடு ஆயுர்வேத மருத்துவமனை வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அண்மைய கொடிய யுத்தத்தினால் உயிரை இழந்தவர்களைவிட அதன் வடுக்களை **ரணங்களாகச்** சுமந்துதங்களைத் தாங்களே சுமைகளாக எண்ணுமளவிற்கு வேதனைப்படும் உறவுகளுக்காக இந்த நிலையம் திறக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

ஒரு மனிதனின் இயக்கத்திற்கு முள்ளந்தண்டு வடம் என்பது முதன்மையானது. அவனின் முழுசெயற்பாடுகளுக்கும் அதுவே உறுதுணையாகவுள்ளது.

எனவே தான் இது பாதிப்படையும் போது நாம் சுயமாக இயங்க முடியாதவர்களாக மாறுகின்றோம்.

எமது நாட்டை பொறுத்தவரை முள்ளந்தண்டு வடம் செயலிழக்க பின்வரும் காரணங்களைப் பிரதானமாகக் கூறுவர்.

அவையாவன:-


* யுத்தத்தின் போது நேரடித்தாக்குதல்களுக்கு உள்ளாகி செயலிழக்கப்படுகின்றமை.
* விபத்துக்களால் குறிப்பாக வீதி விபத்துக்களின் போது ஏற்படும் பாதிப்புக்களால் செயலிழக்கின்றமை.
* நோய்களின் தாக்கத்தினால் செயலிழக்கின்றமை ஆகியவையாகும்.

குறிப்பாக மக்களுக்காகத் தங்களை அர்ப்பணித்தவர்களும் பொதுமக்களுமாகச் சேர்ந்து பெரும்பாலாக இளம் வயதினரே இவ்வாறாக பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

மேலும் குடும்பத்தலைவர்களும் இதனுள் அடங்குகின்றனர். இதனால் இவர்களின் உழைப்பில் தங்கியிருந்த குடும்ப அங்கத்தவர்களின் வருமானம் இல்லாதுபோனதுடன், சுயமாக இயங்கமுடியாத இவர்களை குடும்பத்தின் ஏனையவர்கள் பராமரிக்க வேண்டியுள்ளதால் மொத்தத்தில் இவர்களின் குடும்பச் சுமையைச் சுமக்க முடியாது அவர்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர்.

மீள்குடியேற்றப் பகுதியில் வசிக்கும் இவர்களுக்கு இதற்கான போக்குவரத்து வசதிகளும் இல்லை. பொருளாதார வசதிகளும் இல்லை. எனவே தான் இவ்வாறான ஒரு நிலையம் அமைக்கப்பட்டிருப்பது இவர்களுக்குப் பேருதவியாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

எமது நாட்டில் தற்போது காணப்படும் சுகாதார சேவையில் இவ்வாறான பராமரிப்பு நிலையங்கள் இல்லை. இவற்றை அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடும் அமைச்சிடம் இல்லை.



எனினும் எமது வடமாகாண சபையானது காலத்தின் அவசியத் தேவை கருதி இவ்வாறான நிலையமொன்றைத் திறப்பதற்கு முதல் முயற்சி எடுத்துள்ளது.

சிலர் கேட்கலாம் ஏன் இந்த நிலையம் வவுனியாவில் திறக்கப்படுகின்-றது என்று, நான் ஏற்கனவே கூறியது போன்று இதற்கான நிதிவளம் இல்லாத நிலையில் ஏற்கனவே இருந்த வளங்களைப் பயன்படுத்தியே இந்நிலையத்தை முதற்கட்டமாக இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்

இந்தநிலையத்திற்கு வைகறை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. வைகறை என்பது அதிகாலை விடியலைக்குறிக்கும் வாழ்வில் நம்பிக்கை இழந்து இருட்டடைந்த வாழ்க்கையில் விடியலை எதிர்பார்த்து நிற்கும் இவர்களுக்கு நம்பிக்கை கொடுக்கும் விதத்திலேயே இந்த வைகறை நிலையம் திறக்கப்பட்டுள்ளது

இவர்கள் நம்பிக்கையை இழக்கக்கூடாது. அந்த நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள மன அமைதி அவசியம். மன அமைதியைப்பெற நற்சிந்தனை அல்லது இறை சிந்தனை அவசியம். மனதில் நற்சிந்தனைகளை வளர்த்து இறை நம்பிக்கையுடன் எதிர்காலத்தில் நம்பிக்கையுள்ளவர்களாக இவர்கள் மாற நாம் வழி வகுக்க வேண்டும்.

நாங்கள் பெரும்பாலும் அரசியல் பேசுவதிலேயே இன்று காலம் கழித்து வருகின்றோம். எமது மக்கள் எழுந்து நடக்க முடியாமல் முனகிக் கொண்டிருக்கும்போது தூரத்தே தெரியும் அரசியல் இலக்குகளை அவர்களுக்கு எடுத்துரைப்பதால் பயன் ஏதும் இல்லை.

அதற்காக அரசியல் தீர்வுகள் வேண்டாம் என்று கூறவில்லை. யதார்த்தத்தை உணர்ந்து எவற்றுக்கெல்லாம் முன்னுரிமை வழங்க வேண்டும். என்பதை யூகித்தறிந்து மக்கள் நலம் நாடி அதற்கு முன்னுரிமை கொடுத்து நடந்து அதே நேரத்தில் அரசியல் இலக்குகளையும் அடைய ஆவன செய்வோமாக.

உள்ளூரில் எமக்கு அரசியல் தீர்வு கிடைக்கும் என்ற எண்ணம் அருகி வருகின்றது. இதனால் தான் பலரும் சர்வதேச அரசியல் நெருக்குதல்களை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் அந்தக் கால கட்டத்தில் அதன் போது நோயினால் அல்லற்படுபவன், வறுமையால் வாடுபவன், அச்சங்களினால் அச்சுறுத்தப்படுபவன் என்ன செய்வது? அவன் வாழ்க்கையில் மறுமலர்ச்சியைக் கொண்டுவருவது எமது தலையாய கடமையல்லவா? எங்கள் உள்ளங்களில் பரிவு, அன்பு, பாசம் போன்றவை எழுந்தால் தான் மக்களின் நலம் நாட நாம் முன்நிற்போம்.

அப்பேர்ப்பட்ட அன்பின் பிரதிபலிப்பே திறக்கப்பட்ட இந்த வைகறை பராமரிப்பு நிலையம்.

தூரத்துப் பச்சைக்காக நாங்கள் காத்துநிற்கும் அதேநேரம் நேரத்துக்குகந்த நடவடிக்கைகளை எம் மக்கள் நலம் கருதி எடுப்போமாக! (அ-2)

## மல்லாவிப் பிரதேசத்தில் கூட்டமைப்பின் அலுவலகம்

மல்லாவிப் பிரதேசத்தில் வடமாகாணசபை உறுப்பினர் வைத்தியக் கலாநிதி சி.சிவமோகனின் ஏற்பாட்டில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உப அலுவலகம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடமாகாண சபை உறுப்பினர் சி.சிவமோகன் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி பிரதேச மக்கள் தமது மக்கள் பிரதிநிதிகளாகிய பாராளுமன்ற உறுப்பினர்களையும் வடமாகாணசபை உறுப்பினர்களையும் சந்தித்து தமது பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளுக்கே செல்ல வேண்டியிருந்ததாக கவலை வெளியிட்டிருந்தனர்.

இதனைக் கருத்தில் கொண்டே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இவ் உப அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இது. தவிர மல்லாவி வைத்தியசாலையில் தமிழ் வைத்தியர்கள் இல்லாமையால் தாம் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் அப் பகுதி மக்கள் என்னிடம் தெரிவித்திருந்தனர்.

இதனைக் கருத்தில் கொண்டு வாரத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் பிற்பகல் 2 மணியில் இருந்து மாலை வரை இவ் அலுவலகத்தில் இலவச மருத்துவ சேவையினை வழங்குவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இலவச மருத்துவ முகாமில் 50 பேர் மருத்துவ ஆலோசனைகளை பெற்றிருந்தனர் என்றார்.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனால் இவ் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டதுடன், மாந்தை கிழக்கு பிரதேச சபைத் தவைவர் தனிநாயகம், மாந்தை கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் செந்தூரன், துணுக்காய் பிரதேசசபைத் தலைவர் இராஜரட்ணம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (அ-9-250)




## கவின் கலைக் கல்லூரி திறப்பு விழா

(பூநகரி)

பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக் கல்லூரியின் தொடக்க விழா நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சி.சீவநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக பண்டிதர் பரந்தாமன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சிறீநிவாசன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேசுவரன், கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு அலுவலர் மா.அருள்சந்திரன், கரைச்சி பிரதேச சபை செயலாளர் இ.கிருட்ணகுமார், கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி முதல்வர் திருவாட்டி செயந்தி தனபாலசிங்கம், கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர் வே. இறைவிழுவைக்கு பொன்றோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-9-84)

## மாற்றுத்திறனாளிகளுக்கு வாழ்க்கை தொழிற்பயிற்சி

கிளிநொச்சியில் மாற்றுத்திறனாளிகளாகவுள்ளவர்களை வாழ்க்கைத்தொழிற் பயிற்சி நிலையத்திற்கு இணைக்கும் நடவடிக்கைகள் நடைபெறவுள்ளன

சமூக சேவைகள் அமைச்சினால் கிளிநொச்சியில் அமைப்பதற்கு உத்தேசித்துள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு 16 வயது முதல் 35 வயது வரையிலானோரை சேர்க்கவுள்ளது.

இதற்கான நேர்முகப்பரீட்சை கிளிநொச்சி மக்கள் வங்கி தலைமைப்பீடத்திற்கு பின்பாகவுள்ள மத்திய ஒத்துழைப்பு நிலையத்தில் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.


கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 4 பிரதேச செயலகப் பிரிவுகளிலுமுள்ள மாற்றுத்திறனாளிகள் இதில் கலந்து கொள்ளமுடியுமென சமூக சேவைகள் திணைகளப் பணிப்பாளர் அனுசாகோகுல பெர்ணாண்டோ அறிவித்துள்ளார். (அ-9-254)

## உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தார்

பூநகரி பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களில் ஒருவரான தில்லைநாதன் ஆனந்தவர்ணன் என்ற உறுப்பினர் தமது பதியை இராஜினாமா செய்துள்ளார்.

தற்போது ஆளும் கட்சிக்கு பதில் உறுப்பினர் நியமிக்கப்படாத நிலையில் எதிர்க்கட்சியில் 4 உறுப்பினர்களும் ஆளும் கட்சியில் ஒரு உறுப்பினர்களுமாக ஐவர் மட்டுமே இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.(அ-9-84)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org








# சிந்தனை செய்

**யாழின் குறும்படம்**

யாழ்ப்பாணம் இணுவையூர் V.K.குகானந்தனின் ஸ்வரலயன் கிரியேசனின் சிதைக்கப்படும் சமூகத்தின் விழிப்புணர்வின் அடையாளம் சிந்தனை செய குறும்படம்!

உலகத்தில் பொதுவாக இருக்கும் பெரிய பிரச்சினை புகைத்தல். அதில் எவ்வளவுதான் தீமைகள் இருந்தாலும், அதைப்பற்றி எத்தனை தடவைகள்தான் எடுத்துச்சொன்னாலும் உலகம் அந்த பழக்கத்தை மட்டும் விட்டுக்கொள்வதாக வில்லை. புகைத்தலின் இறுதி முடிவு மரணம்தான் என்பதை கண்முன்னே உதாரணமாக கண்டாலும் யாரும் திருந்தவில்லை.

புகைப்பழக்கத்தாலும், குடிப்பழக்கத்தாலும் தந்தை இறந்துபோக அநாதையாகிறான் ஒரு சிறுவன். அந்த அநாதை சிறுவனின் வறுமையை காரணமாக கொண்டு அவனுக்கு சாப்பாடு மட்டும் தருவதாக கூறி தன்னிடம் வேலைக்கு அமர்த்துகிறார் ஒரு சைக்கிள் கடைக்காரர். ஆனால் சிறுவனுக்கோ படிக்கவேண்டும் என்பதில்தான் ஆர்வம். அதனால் அவரிடம் சம்பளமாக பணம் கேட்க கடைக்காரர் கொடுக்க மறுக்கிறார்.

பணம் கிடைக்காவிட்டாலும் சாப்பாடு கிடைக்கிறதே என்பதனால் அங்கு வேலை செய்கிறான் அச்சிறுவன். தன் தந்தையை போலவே தன் முதலாளியும் புகைபிடிப்பதை கண்டு அஞ்சும் அச் சிறுவன் அவரிடம் சென்று புகைபிடிக்க வேண்டாம் என்று கெஞ்சுகிறான். ஆனால் அவர் அவனை விரட்டிவிடுகிறார். இப்படியே சென்றுகொண்டிருக் கும்போது சில நாட்களாக அந்த சிறுவன் கடைக்கு சென்று முதலாளிக்கு என்று சொல்லி சிகரட் வாங்குகிறான். தொடர்ந்து சில நாட்கள் இந்த சம்பவம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் இதனை முதலாளி கண்டுபிடித்து, ஒருநாள் அச்சிறுவன் சிகரெட் வாங்கிக்கொண்டு செல்லும்போது அவனை பின் தொடர்ந்து செல்கிறார்.

அதன் பின்னர் என்ன நடந்தது என்பதை குறும்படத்தை பார்த்து தெரிந்துகொள்ளுங்கள். குறும்படத்தை எழுதி, இயக்கி, ஒளிப்பதிவு செய்து, எடிட்டிங் செய்திருக்கிறார் யுறா சன்வா. நல்லதொரு கதைக்கரு. சமூகத்துக்கு நல்லதொரு கருத்தை சொல்லும் அட்டகாசமான கதை களத்தை தெரிவு செய்தார் யுறா சன்வா.

# உலக நாயகனுடன் இணையும் இயக்குநர் சிகரம்



உத்தம வில்லன் படத்தில் உலக நாயகன் கமலஹாசனுடன் இணைந்து நடிக்கவிருக்கிறார் இயக்குநர் கே.பாலசந்தர்.

'விஸ்வரூபம் 2' படத்தினைத் தொடர்ந்து கமல் நடிக்கவிருக்கும் படம் உத்தம வில்லன். சதிலீலாவதி, பஞ்ச தந்திரம், மும்பை எக்ஸ்பிரஸ், மன்மதன் அம்பு போன்ற படங்களில் கமலுடன் இணைந்து நடித்த, கமலுக்கு நெருங்கிய நண்பரான ரமேஷ் அரவிந்த் இப்படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் இயக்குநராக அறிமுகமாகிறார். படத்திற்கு கிரேஸி மோகன் வசனம் எழுதுகிறார். யுவன் சங்கர் ராஜா இசையமைக்கும் இந்தப் படத்தினை லிங்குசாமி தயாரிக்கிறார்.

இந்நிலையில் உத்தம வில்லன் படத்தில் கமலஹாசனுடன் இணைந்து இயக்குநர் கே.பாலசந்தர் நடிக்கவிருக்கிறார். இதற்காக அவர் தாடி வளர்த்து வருகிறார். இந்த தகவலை கமலஹாசன் வெளியிட்டுள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு விஸ்வரூபம் 2 படம் வெளியானவுடன் தொடங்கவிருக்கிறது. உத்தம வில்லன் படம் சமூகத்தில் தற்போது நடைபெறும் பிரச்சினையை, காமெடி கலந்து சொல்ல இருக்கிறார்களாம். விரைவில் இப்படம் குறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகலாம்.

கே.பாலசந்தர் இயக்கத்தில் அரங்கேற்றம், அபூர்வ ராகங்கள், மன்மத லீலை, மூன்று முடிச்சு, நினைத்தாலே இனிக்கும் உட்பட ஏராளமான படங்களில் நடித்துள்ளார் உலகநாயகன்.

# திரை விமர்சனம்




## ஜில்லா எங்கும் செல்லும் தில்லா ...

**நடிகர்கள்-விஜய், மோகன்லால், காஜல் அகர்வால், சூரி, மகத், சம்பத், பூர்ணிமா, ஜெயராம்**
**இசை-டி இமான்**
**ஒளிப்பதிவு-கணேஷ் ராஜவேலு**
**தயாரிப்பு-சூப்பர் குட் பிலிம்ஸ் ஆர்பி சவுத்ரி**
**இயக்கம்-ஆர்டி நேசன்**




ஆக்ஷன் கதைகளுக்கு லொஜிக் தேவையில்லை என்பது எழுதப்படாத விதியாகிவிட்டது. ஆனால் அதற்காக இப்படியா? என்று கேட்க வைக்கும், கற்பனையை தோற்கடிக்கும் பொலிஸ் ஸ்டோரி, விஜய்- மோகன்லால் நடித்துள்ள ஜில்லா.


மதுரையின் தாதா மோகன்லால் தன்னை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணம் ஒருவனுக்கு எழுந்தாலே அவனை அழித்துவிடும்சிவன். அவரிடம் அடியாளாக இருக்கிறார் விஜய்யின் அப்பா. ஒருநாள்மோகன்லாலின்மனைவியை பிரசவத்துக்கு அழைத்துச் செல்லும் வழியில் பொலிஸ்காரர்களால விஜய்யின் அப்பா சுட்டுக் கொல்லப் படுகிறார். அன்றிலிருந்து விஜய்க்கு பொலிஸ் என்றாலே பிடிக்காமல் போய்விடுகிறது.

அப்பாவை இழந்த விஜய், மோகன்லால் வீட்டில் அவரது மகனாகவே வளர்கிறார. வளர்ந்து பெரியவனானதும் மோகன்லால் கட்டளையிடும் வேலைகளை செய்து முடிப்பவராக விளங்குகிறார் விஜய். மோகன்லாலுக்கு மஹத், நிவேதா தாமஸ் என இரண்டு பிள்ளைகள். மதுரை வீதியில் ஒருநாள் காஜல் அகர்வாலை பார்க்கும் விஜய் அவள் மீது காதல் கொள்கிறார். மஹத், நிவேதா தாமஸிடம் சென்று காஜலின் அழகை வர்ணிக்கிறார். இதனால் அவர்களுக்கு காஜலைப பார்க்கும் ஆசை துளிர்விடவே, காஜலின் வீட்டுக்கு விஜய்யை கூட்டிக் கொண்டு செல்கிறார்கள். அங்கு, அவளை பொலிஸ் உடையில் பார்த்ததும், அவள் மீது வெறுப்பு கொள்கிறார் விஜய்.

மறுமுனையில் மதுரைக்கு பொலிஸ் கமிஷனராக வரும் பிரதீப் ராவத், விஜய் வீட்டில் இல்லாத சமயத்தில் வந்து மோகன்லாலை கைது செய்து அழைத்துப் போகிறார். அப்போது மோகன்லாலிடம் ரவுடித்தனத்தை விட்டுவிடுமாறு பிரதீப் ராவத் கூறுகிறார். ஆனால், மோகன்லால் ரவுடிசத்தை விடமுடியாது என்பதில் விடாப்பிடியாக இருக்கிறார். இறுதியில், மோகன்லாலை எச்சரித்துவிட்டு நடுரோட்டில் இறக்கிவிட்டு போய்விடுகிறார்.

இதை அறியும் விஜய், தன் அப்பாவை கைது செய்த பிரதீப ராவத்தின் கையை வெட்டிவிடுகிறார். இருந்தும், தான் கைதான அவமானம் தாங்க முடியாத மோகன்லால் தன்னுடைய ஆள் ஒருவர் பொலிஸ் பணியில இருந்தால் இதுபோன்று நடக்காது என முடிவெடுத்து, விஜய்யை பொலிஸ் பணியில் அமர்த்த முடிவெடுக்கிறார். ஆனால், பொலிஸ் என்ற வார்த்தையே பிடிக்காத விஜய் இதற்கு மறுப்பு தெரிவிக்கிறார். சூழ்நிலை, விஜய்யை காக்கிச் சட்டை போட வைக்கிறது. தன் அப்பாவுக்கு சாதகமான பொலிஸாக ஜாலியாக சுற்றும் விஜய். ஒரு கோர விபத்தைப் பார்த்த பின்பு அப்பாவின் தாதாயிசத்தை அடியோடு ஒழிக்க முடிவு கட்டுகிறார். மோகன்லாலுக்கும் விஜய்க்கும் இடையில் யுத்தம்





ஆரம்பிக்கிறது. அது எப்படி முடிவுக்கு வருகிறது என்பதை திரையில் பார்த்துக் கொள்ளுங்கள்.

விஜய் இந்தப் படத்தில் தன் உடல் மொழியை மொத்தமாக மாற்றியிருக்கிறார் (ஆனால் அந்த வசன உச்சரிப்பு, சரிவரவில்லை!). சுழன்று சுழன்று அடிக்கும் அந்த சண்டைக் காட்சி. கற்பூரம் மாதிரி அடுத்து நடப்பதை யூகித்து வகுக்கும் திறமை, மின்னல் வேகம் என மாஸ் ஹீரோவுக்கான அத்தனை விடயங்களையும் சர்வ சாதாரணமாய் செய்கிறார். அந்த கண்டாங்கி கண்டாங்கி பாடலில் விஜய் மனசை அள்ளுகிறார்.

ஷங்கர் ஸ்டைல் பிரமாண்டம், அழகு காஜலும், அந்த அட்டகாச லொகேஷனும் பிரமாதம்.

மோகன்லால் கம்பீரமாக வருகிறார். ஆனால் இந்த மாபெரும் கலைஞனை, ஏதோ கோயில் யானையைப் போல ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள் கட்டி முடக்கிவிட்டது போலத்தான காட்சிகள் அமைந்துள்ளன. சும்மா சும்மா அவர் உறுமிக் கொண்டே இருந்தால் போதுமா அவர் பலத்தை, புத்திசாலித் தனத்தைக் காட்டும் காட்சி, குறைந்தது ஒன்றாவது வேண்டாமே. இவருக்கு என்ன சிக்கலென்றாலும், அதைத் தீர்க்க விஜய் மட்டும்தான் வரவேண்டியிருக்கிறது. இது மோகன்லால பாத்திரத்தை பலவீனப்படுத்துகிறது!



கண்டாங்கி கண்டாங்கி பாடல், அந்த N.C.C கம்ப் காட்சிகளில் மட்டும் மனசில் நிற்கிறார். மற்ற காட்சிகளில் முகத்தில் ஒரு முதிர்ச்சி. சூரிக்கு படம் முழுக்க வரும் காமெடியன வேடம். ஆனால் அடிக்கடி முன் பக்கத்தில் அடிவாங்கி, வாயில் புகைவிடும் பரிதாப கரக்டர். அவரது வேலையையும் விஜய்யே செய்து விடுவதால், இவர் சும்மா வந்து போக வேண்டியுள்ளது.

இப்படி ரசிக்கும் படியான காட்சிகள், திறமையான கலைஞர்களின் பங்களிப்பு இருந்தாலும் சில ஓட்டைகள் நிறைந்ததாக உள்ளது ஜில்லா. ஒரு நேர்மையான கமிஷனர் அவர் கையை நடுரோட்டில் வெட்டுகிறார் ரவுடியான விஜய். அவரை பொலிஸ்ஒன்றுமே செய்யவில்லை. ஆனால் அவரோ, ஜாலியாக பொலிஸ் ஆகிறார். யாரை வெட்டினாரோ அவர் மூலம் பதவி உயர்வே பெறுகிறார்! ஒரே நேரத்தில் தந்தையைப் பறிகொடுத்த விஜய்யும் சம்பத்தும் மோகன்லால் வீட்டில் வளர்கிறார்கள்.

இளமையில் ஒரே வயதுக்காரர்களாய் இருக்கும் இவர்கள் வளர்ந்த பின்பு, சம்பத்துக்கு மட்டும் அவ்வளவு வயசாகி விடுவது எப்படி என்று புரியவில்லை.

அடுத்தடுத்து இரண்டு டூயட்டுகள். அதில் ஒன்று ரசிக்க வைத்தாலும், அடுத்த பாடலில் (எப்ப மாமா ட்ரீட்), நடனத்தில் இணையற்ற விஜய்யை கேவலமாக, ஏதோ உடற்பயிற்சி செய்ய வைப்பது போல், ஆட வைத்து கடுப்பேற்றியிருக்கிறார் இயக்குநர் நேசன். அதை மன்னிக்கவே முடியாது!

விஜய்யின் தம்பி, தங்கையாக வரும் மகத், நிவேதிதா இருவரும் விஜய்க்கு ஆகாதவர்களைப் போல காட்டிவிட்டு, திடீரென்று இருவருக்கும் அவர் மீது பாசம் பொங்குவது எடுபடவில்லை. கணேஷ் ராஜவேலு ஒளிப்பதிவு சிறப்பாக உள்ளது. அந்த நெடுஞ்சாலைக் காட்சிகள் பிரமாண்டமாக உள்ளது. கண்டாங்கி கண்டாங்கி பாடலில் வண்ணமயம். இமானின் இசையும் அந்தப் பாட்டில்தான் ரசிக்கும் படியாக இருக்கிறது. மொத்தத்தில் ஜில்லா களை கட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வியாசர் பதில்கள்

அன்பு வாசகர்களே!

அரசியல், ஆன்மீகம், சினிமா, பொழுது போக்கு தொடர்பான உங்கள் கேள்விகளை

ஆசிரியர், வியாசர் பதில்கள்
இல. 3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அன்பின் வியாசரே!

✉ அரசியல்வாதிகளின் அக்கிரமங்களுக்கு சலாம் போடும் சில ஊடகங்களை நாம் என்ன செய்யலாம்?

*சு.ஜெயரூபன், பருத்தித்துறை*

அவர்கள் யார் யார் என்று இனங்கண்டு கொண்டாலே போதும். மாரித் தவளையாய்ப் பிறந்திட்டால் கத்தித்தான் ஆக வேணடும் என்பது அவர் கொள்கைபோலும்

அன்பின் வியாசரே!

✉ ஒரு கூட்டுக் குடும்பத்தை வெளியில் பார்க்க ஒற்றுமைபோன்று தெரியும். ஆனால் உள்ளே பனிப் போர். இதை ஒருவரியில் கூறுங்களேன்.

*கலைமகள், துன்னாலை*

அட இதுக்கேன் அவ்வளவு யோசிக்க வேண்டும். நம்ம கூட்டமைப்பு என்று சொன்னால் போதுமே.

அன்பின் வியா அண்ணா!

✉ கணவன் இறந்து விட்டால் மனைவி வெள்ளை ஆடை அணிவது முன்பு ஒரு காலத்தில் கலாசார பண்பாடாக இருந்து வந்தது. இப்போது அப்படி காண்பது குறைவு. நீங்க இதற்கு என்ன பதில் கூறுகிறீர்கள்.

*எஸ்.விஜிதபாமா, கோண்டாவில்*

பெண்ணடிமைக்கு எதிராகவும் விதவைகள் மறுமணம் செய்ய வேண்டும் என்பதையும் தன் கவியால் உறுதியாய் உரத்துச் சொன்ன மகாகவி பாரதியார் பக்கம் தான் என்றுமே நான் நிற்பேன்.


## அஜித்தின் வீரமா விஜயின் ஜில்லாவா நல்ல படம்?

### கொஞ்சம் சிரிங்கப்பா...

"என் பேரனோட எதிர்காலத்தை நினைச்சா பயமாயிருக்குது..."

"ஏன்?"

"அவனுக்கு நஸ்ரியாவுக்கும் ஆண்ட்ரியாவுக்கும்கூட வித்தியாசம் தெரியமாட்டேங்குதே..."



அன்பின் வியா!

✉ ஐந்தையும் ஐந்தையும் எப்படிக் கூட்டினால் 11 வரும்?

*பி.இளவரசி, பருத்தித்துறை*

ஐந்து பூவரசம் இலையையும் ஐந்து வேப்பம் இலையையும் கூட்டினால் 11 வராது. குப்பைதான் வரும்.

வியா மாமா!

✉ அஜித்தின் வீரமா விஜயின் ஜில்லாவா நல்ல படம்?

*எஸ்.சுதர்சன், நெல்லியடி*

அது இரண்டையும் விட பல கொள்ளையுடன் தொடர்புடைய ஆவா குழுவின் கைது மிக நல்ல விடயமாச்சே.

## அடிக்கடி Make up செய்யும் பெண்களைப் பற்றிய கருத்து?

அன்பின் வியாசர் அண்ணா!

✉ இன்றைய மாணவர்கள் Maths Book படிப்பதற்கு பதிலாக Face Book பார்க்கிறார்கள். இதைப் பற்றி உங்களின் கருத்து என்ன?

*த.மோகனரூபன், சுழிபுரம்*

T.V.யில்ஒருவிளம்பரம்ஒளிபரப்பாகும் அதில் தாய் மகளுக்கு கூறுவார் தலை முடிய என்னவும்பண்ணலாம் ஆனால்முடிஉதிரக் கூடாது என்று. அதேபோல்தான் என்னவும் பண்ணலாம். ஆனா படிப்பில் 100% இருந்தா சரி.

அன்பின் வியாசரே!

✉ உமக்கு திடீர் என்று ஓர் அபூர்வ சக்தி கிடைத்தால் நீர் முதலில் செய்ய நினைப்பது எதுவாக இருககும்.

*கிரு. செந்தூரன், பருத்தித்துறை*

லீசிங் கொடுப்பவனையும் லீசிங் எடுப்பவனையும் இல்லாதொழித்தால் போதும் நாடு முன்னேறிவிடும்.

அன்பின் வியாசரே!

✉ அழகான கணவன் ,அன்பான குழந்தை அருகிலிருக்கையில் அப் பெண் அயல் வீட்டானிடம் அக்கறை கொணடு அடிக்கடி எட்டிப்பார்ப்பதேன்.

*வே.வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி*


மதிலையும் வேலியையும் உயர்த்தும் வேலையை விட்டு விட்டு மனைவி மனதறிந்து அவளிடம் அன்பாய் நடந்தால் அயல் வீட்டாரென்ன தேவலோகத்தில் இருந்து தேவர்கள் வந்தாலும் கூட கணவன் காலடியே தஞ்சமென தவம் கிடப்பாள் மனைவி அதுதான் பெண்மை.

அன்பின் வியாசரே!

✉ அடிக்கடி Make up செய்யும் பெண்களைப் பற்றிய கருத்து?

*வெ.பிரகஸ்பதி, பருத்தித்துறை*

கண்ணாடிக்கு வாய் இல்லாதவரைக்கும் பரவாயில்லை. இருந்தாலும் அது பாவம் என்பது நமக்குப் புரிகின்றது up பண்ணும் அவர்களுக்கு புரியவில்லையே.



# வடக்கு கிழக்கு முதலமைச்சர்களை சந்திப்பாரா ஜெயலலிதா?

## பழ.நெடுமாறன்

**கிழக்கு மாகாண முதலமைச்சரையும் அழைத்து, இரு மாநிலங்களுக்கு இடையே உள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடல் செய்வது நல்லது.**

**இந்தியாவில் உள்ள தமிழ் நாடும் இலங்கையில் உள்ள தமிழீழ மும் ஒரே நாடாக இருந்தது இல்லை. மொழி, பண்பாடு போன்றவற்றின் அடிப்படையில் இரு நாடுகளில் வாழ்ந்த தமிழர்களுக்கிடையே ஆழமான நெருங்கிய உறவு பல நூறாண்டு காலமாக நிலவி வருகிறது. அந்த அடிப்படையில் இதனை அணுக வேண்டும்.**

இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் சுதந்திரம் பெற்ற பின்பு, கடந்த 66 ஆண்டுகளில் நடைபெறாத ஒன்று இப்போது நடைபெற்றிருக்கிறது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஒன்றுபட்டிருந்த பஞ்சாப் மாநிலத்தில், முஸ்லிம்களும் சீக்கியர்களும் இந்துக்களும் மற்றவர்களும் பஞ்சாபி மொழியைத் தங்கள் தாய் மொழியாகக் கொண்டு ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள்.

ஆனால், காலப்போக்கில் மதரீதியாகப் பிளவுபட்டு மோதிக் கொண்டனர். முஸ்லிம் லீக் தலைவர் ஜின்னா, ஒன்றுபட்ட பஞ்சாபையும் உள்ளடக்கிய பாகிஸ்தான் கோரிக்கையை முன்வைத்தார். ஆனால், அதற்கு சீக்கியர்களும் இந்துக்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததன் விளைவாக... பஞ்சாப் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த மேற்கு பஞ்சாப் பாகிஸ்தானுடனும் சீக்கியர்களும் இந்துக்களும் பெரும்பான்மையாக வாழ்ந்த கிழக்கு பஞ்சாப் இந்தியாவுடனும் இணைக்கப்பட்டன. இந்தியாவில் மொழிவழியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது கிழக்கு பஞ்சாப் மாநிலம் பின்பு பஞ்சாப், அரியானா என இரு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன.

இந்தியா பிரிவினை ஆகும் நேரத்தில் ஒன்றுபட்ட பஞ்சாப் மாநிலத்தில் மதக்கலவரம் மூண்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். பல இலட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்தனர். இதனால் ஏற்பட்ட வடு இன்னமும் மக்களிடம் ஆழமாகப் பதிந்திருக்கிறது.

கடந்த டிசம்பர் 15ஆம் திகதியன்று பாகிஸ்தான் பஞ்சாப் முதலமைச்சர் நவாஷ் ஷெரீப் மற்றும் இந்திய பஞ்சாப் முதலமைச்சர் பிரகாஷ் சிங் பாதல் ஆகியோர் அமிர்தசரஸ் நகரில் சந்தித்துப் பேசி, கூட்டறிக்கை ஒன்று வெளியிட்டனர்.

இரு மாநிலங்களுக்கு இடையே உள்ள வணிகம், வேளாண்மை, மக்கள் தொடர்பு ஆகியவற்றை உள்ளடக்கிய 12 முக்கியப் பிரச்சினைகளில் [illegible] இயங்குவது என இரு [illegible] மைச்சர்களும் முடிவு செய்தனர்.

இந்தக் கூட்டறிக்கையில், இரு மாநிலங்களுக்கு இடையே நிலவும் பொதுவான கலாசாரம், சமூகச் சூழல், மொழி மற்றும் குடும்ப உறவுகள் போன்றவை குறித்துப் பேசி ஒற்றுமையுடன் இந்தப் பிரச்சினைகளை அணுகுவது என அந்த முதலமைச்சர்கள் தெரிவித் துள்ளனர்.

இந்தியப் பிரதமரும் பாகிஸ்தான் பிரதமரும் சந்தித்துப் பேசுவது என்பது வேறு. இரு நாடுகளின் பிரதமர்கள் சந்தித்துப் பேசுவதை நமது அரசியல் சட்டமும் சர்வதேச சட்டமும் ஏற்றுக்கொண்டுள்ளன. ஆனால், இரு நாடுகளைச் சேர்ந்த இரு மாநில முதலமைச்சர்கள் சந்தித்து தங்களுக்குள் உள்ள பிரச்சினைகள் குறித்து ஒற்றுமையுடன் பேசித் தீர்த்துக் கொள்வது என முடிவெடுத்திருப்பது இந்திய - பாகிஸ்தான் வரலாற்றில் மிக முக்கியமான திருப்பம். இரு நாடுகளின் அரசியல் சட்டங்களுக்கு இது எதிரானது. ஆனால், இதை இரு நாட்டு அரசுகளும் அங்கீகரித்துள்ளது [illegible] இது ஒரு [illegible] யான நடவடிக்கை. இதன் அடிப்படையில் தமிழக முதலமைச்சர் இலங்கையின் வடக்கு மாகாண முதலமைச்சரையும் கிழக்கு மாகாண முதலமைச்சரையும் அழைத்து, இரு மாநிலங்களுக்கு இடையே உள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடல் செய்வது நல்லது.

இந்தியாவில் உள்ள தமிழ் நாடும் இலங்கையில் உள்ள தமிழீழமும் ஒரே நாடாக இருந் தது இல்லை. மொழி, பண்பாடு போன்றவற்றின் அடிப்படையில் இரு நாடுகளில் வாழ்ந்த தமிழர்களுக்கிடையே ஆழமான நெருங்கிய உறவு பல நூற்றாண்டு காலமாக நிலவி வருகிறது. அந்த அடிப்படையில்இதனை அணுக வேண்டும்.

இலங்கையின் தமிழர் பகுதிகளில் நிலவும் நிலைமை குறித்து இலங்கை அரசு கூறும் தகவல்கள் உண்மையானவையா, இல்லையா என்பது பற்றி வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர்களை அழைத்துப் பேசி, முழுமையான உண்மைகளை தமிழக முதலமைச்சர் தெரிந்துகொள்ள முடியும். அதற்கிணங்க இந்திய அரசுடன் பேசி ஈழத் தமிழர் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காணுமாறு வற்புறுத்த முடியும்.

தமிழக சட்டமன்றத்தில் ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து அடுககடுக்கான தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மூலமோ... அல்லது, பிரதமருக்குத் தொடர்நது கடிதம் எழுதுவதன் மூலமோ பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண முடியாது. மாறாக... வடக்கு, கிழக்கு மாகாண முதல்வர்களை அழைத்துப் பேசி முழு உண்மைகளையும் அறிந்து கொண்டு, அதற்காக மத்திய அரசுடன் இன்னும் வலுவுடன் போராட முடியும். அதைச் செய்வதற்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா முன்வர வேண்டும். இல்லையென்றால், அவர் இந்தப் பிரச்சினையில் ஒப்புக்காக சட்டசபையில் தீர்மானங்களை நிறைவேற்றுகிறார் பிரதமருக்குக் கடிதம் அனுப்புகிறார் என மக்கள் கருதுவார்கள்.

முயற்சிகள் எடுப்பாரா முதல்வர்?

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

693

## சிறந்த வில்லாளி

அதில் இக்கத்தி யாரிடம் இருக்கிறதோ, அவர்கள் இறந்தவர்களையும் பிழைக்க வைப்பர் என்று எழுதியிருந்தது. அக்கத்தியை எடுத்துத் தன் பையில் போட்டுக் கொண்டான் ஜெயவீரன்.

அடுத்து, இளவரசியின் அறைக்கு வந்தான். அவள் பஞ்சனையில், அழகுப் பதுமையாய் துயில் கொண்டிருந்தாள். அப்படியொரு அழகியை அவன் பார்த்ததே இல்லை. அவள் வதனம், வானத்துத் தேவதையொன்று மண்ணில் வந்துவிட்டதோ என்று ஐயுறும் வண்ணம் இருந்தது.


அந்த அரக்கர்கள் கையிலா இவளை ஒப்படைப்பது என்று எண்ணியவாறே அவள் அருகில் சென்ற ஜெயவீரன், அவள் படுக்கைக்குக் கீழே கிடந்த அவளது காலணிகளில் ஒன்றை எடுத்துத் தன் பையில் போட்டுக் கொண்டான். பின்னர் விலையுயர்ந்த போர்வையின் ஓரத்தில், பொன் எழுத்துக்களால் எழுதப்பட்டிருந்த முத்து பவள மோகினி என்ற அவள் பெயரை மட்டும் கத்தரித்து எடுத்து, அதையும் தன் பையில் போட்டுக் கொண்டான்.

வெளியில் வந்து அந்த மூன்று அரக்கர்களையும் கொன்று அவர்கள், நாக்குகளைத் துண்டித்து, அவற்றைத் தன் பையில் போட்டுக் கொண்டான்.

காலையில் எழுந்த அரசன், அந்த மூன்று அரக்கர்களின் பிணங்களைப் பார்த்துத் திடுக்கிட்டான்.

என்ன அரசே! இந்த மூன்று அரக்கர்களையும் கொன்றது யார் என்று திகைக்கிறீர்களா? நான்தான். நீங்கள் ஏற்கனவே நாட்டில் பறை அறிவித்தது போல், உங்கள் மகளை எனக்கே திருமணம் செய்து கொடுக்க வேண்டும்! என்று அருகிலிருந்த தளபதி சொன்னான்.

அவனுக்கு ஒரு கண் குருடு. அத்துடன் விகாரமான தோற்றமுடையவன். இளவரசிக்கு அவனை மணக்க விருப்பமில்லை. மன்னர் தன் வாக்குறுதியை நிறைவேற்ற நினைத்தார். முடியவில்லை. எனவே, இளவரசியின் மேல் மன்னருக்குக் கோபம் ஏற்பட்டது.



சாலையோரத்தில் ஒரு குடிசையைக் கட்டி, வருவோர் போவோர்க்கெல்லாம் சமைத்துப் போடும்படி இளவரசிக்கு ஆணையிட்டான் மன்னன். சாதாரணப் பெண் போன்று உடையுடுத்தி, அரசன் தரும் உணவுப் பண்டங்களை வைத்து, தினமும் அவ்வழியாக வருவோருக்கு உணவு படைத்து வந்தாள் இளவரசி.

ஒருநாள், அவ்வழியாக ஜெயவீரன் வந்தான். இளவரசியின் குடிசைக்குச் சென்றான். அவள் உணவு பரிமாறிக் கொண்டிருக்கும்போது அவனிடம் இருந்த அந்த வெள்ளி வாளைப் பார்த்து விட்டாள்.

இளைஞரே! இந்த வெள்ளி வாள் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?

ஒரு அரண்மனையில் இளவரசி ஒருத்தியை இரவில் பார்க்கச் சென்றபோது கிடைத்தது.

இதன் மகிமை என்ன?

இது யாருடைய கையில் இருக்கிறதோ, அவர்கள் இறந்தவர்களையும் பிழைக்க வைப்பர்.

உங்களுக்கு அந்த அர்ண்மனையில் ஏற்பட்ட வேறு அனுபவங்கள்?

இளவரசியைக் கவர்ந்து போக வந்த மூன்று அரக்கர்களைக் கொன்று, அவர்களின் நாக்கை இந்த வாளினாலேயே அறுத்தேன்.

இதை நான் எப்படி நம்புவது?

இதோ, அவர்களுடைய மூன்று நாக்குகளையும் என் பையினுள் வைத்திருக்கிறேன்.

நீங்கள் அரண்மனைக்கு வந்தீர்கள் என்பதற்கு வேறு சான்றுகள்?

இதோ, அந்த இளவரசி முத்துப் பவள மோகினியின் ஒரு கால் செருப்பும், அவள் பெயர் பொறித்த போர்வையின் துணியும்.

ஐயோ இளைஞரே! நான்தான் அந்த இளவரசி.

கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இருவரும் அரசனிடம் சென்று உண்மையைக் கூறினர் பொய் சொன்ன ஒற்றைக்கண் தளபதியை அரசன் கழுவேற்றினான். ஜெயவீரனுக்குத் தன் மகளைத் திருமணம் செய்து கொடுத்தான். *(முற்றும்)*

01.2014
19

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1419 -நூறாண்டுப் போர்: நார்மாண்டியை கைப்பற்றிய இங்கிலாந்தின் ஐந்தாம் ஹென்றியிற்கு ரொவ்வென் சரணடைந்தது.
- 1764 - ஜான் வில்க்ஸ் ஐக்கிய இராச்சியத்தின் மக்களவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.
- 1788 -இங்கிலாந்தில் இருந்து கைதிகளை ஏற்றி வந்த இரண்டாவது தொகுதி கப்பல்கள் நியூ சவுத் வேலிசின் பொட்டனி பே பகுதியை வந்தடைந்தது.
- 1806 -நன்னம்பிக்கை முனையை பிரித்தானியா பிடித்தது.
- 1817 - சிலி மற்றும் பெருவை விடுதலை செய்ய ஜோஸ் டெ சான் மார்ட்டின் தலைமையில் 5,423 போர் வீரர்கள் கொண்ட படை, அர்கெந்தீனாவிலிருந்து அன்டெஸ்சைக் கடந்தது.
- 1839 - பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனி ஜேர்மனின் ஏடென் நகரைக் கைப்பற்றியது.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்காவிலிருந்து பிரிந்த ஜோர்ஜியா தென் கரொலைனா, புளோரிடா, மிசிசிப்பி, மற்றும் அலபாமா ஆகிய மாநிலங்களுடன் சேர்ந்தது.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: மில் ஸ்பிரிங்ஸ் சண்டையில் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு தனது முதல் பெரிய தோல்வியை பெற்றது.
- 1899 - ஆங்கில-எகிப்திய சூடான் அமைக்கப்பட்டது.
- 1903 -ஐக்கிய அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே முதலாவது வானொலி ஒலிபரப்பு ஆரம்பமாயிற்று.
- 1920 - அமெரிக்க மேலவை உலக நாடுகள் சங்கத்தில் சேர்வதற்கு எதிர்ப்பாக தீர்மானம் நிறைவேற்றியது.
- 1927 -பிரித்தானியா சீனாவுக்கு படைகளை அனுப்பியது.
- 1937- ஹோவார்ட் ஹியூஸ் லாஸ் ஏஞ்சலஸி லிருந்து நியூயோர்க் நகரத்திற்கு 7 மணி நேரம், 28 நிமிடங்கள், 25 நொடிகளில் பறந்து சாதனை புரிந்தார்.
- 1941 -இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியப் படைகள் இத்தாலி வசமிருந்த எரித்திரியாவைத் தாக்கினர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் படைகள் பர்மாவை முற்றுகையிட்டனர்.
- 1949 - கூபா இசுரேலை கண்டுகொண்டது.
- 1966 - இந்திரா காந்தி இந்தியப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1981 -ஈரானில் 14 மாதங்களுக்கு முன்னர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட 52 அமெரிக்கர்களை விடுவிக்க ஐக்கிய அமெரிக்காவும் ஈரானும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.
- 1983 - நாசி போர்க் குற்றவாளி கிளவுஸ் பார்பி பொலிவியாவில் கைது செய்யப்பட்டான்.
- 1986 - முதற் கணனி நச்சுநிரலான பிரெயின் ((c)Brain) பரவத் தொடங்கியது.
- 1993 - வேதி ஆயுத உடன்படிக்கை (CWC) கையொப்பமிடப்பட்டது.
- 1993 - ஐபிஎம் நிறுவனம் 1992 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் $4.97 பில்லியன் நட்டத்தை அறிவித்தது, இன்றுவரையில் அமெரிக்காவில் வேறொரு நிறுவனம் இந்த அளவில் நட்டம் அடைந்ததில்லை.
- 1997 - 30 ஆண்டுகளுக்குப் பின்னர் யாசர் அரபாத் ஹெப்ரோன் திரும்பினார்.
- 2006 - புளூட்டோவுக்கான முதலாவது நியூ ஹறைசன்ஸ் என்ற விண்ணுளவியை நாசா விண்ணுக்கு ஏவியது.


### பிறப்புகள்

- 1736 - ஜேம்ஸ் உவாட், கண்டுபிடிப்பாளர் (இ. 1819)
- 1807 - ராபர்ட் ஈ. லீ, அமெரிக்கப் பொறியியலாளர் (இ. 1870)
- 1809 - எட்கார் அலன் போ, அமெரிக்க எழுத்தாளர், கவிஞர் (இ. 1849)
- 1839 - பால் செசான், பிரெஞ்சு ஓவியர் (இ. 1906)
- 1912 - லியோனிட் கண்டரோவிச், நோபல் பரிசு பெற்ற இரசியப் பொருளியலாளர் (இ. 1986)
- 1933 - சீர்காழி எஸ். கோவிந்தராஜன், கர்நாடக, திரையிசைப் பாடகர் (இ. 1988)
- 1948 - வானம்பாடி யோகராஜ், ஈழத்து வில்லிசைக் கலைஞர் (இ. 1999)

### இறப்புகள்

- 1905 - தேவேந்திரநாத் தாகூர், இந்தியப் பகுத்தறிவாளர் (பி. 1817)
- 1990 - ஓஷோ, இந்திய ஆன்மிகவாதி (பி.1931)

### ஓஷோ



ஓஷோ 1931 டிசெம்பர் 11 ல் மத்திய பிரதேசத்தில் உள்ள குச்வாடா என்ற சிற்றூரில் பிறந்தார். ஓஷோவுடைய இயர் பெயர் ரஜ்னீஷ் சந்திர மோகன். சிறுவயதிலிருந்தே தியானத்தில் ஈடுபட்ட ஓஷோ தன்னுடைய இருபத்து ஒன்றாவது வயதில் அதாவது 1953 மார்ச் 21 இல் ஞானம் அடைந்தார்.

குச்வாடா ஓஷோவுடைய தாய் வழி தாத்தா, பாட்டி வாழ்ந்து வந்த ஊர். முதல் ஏழு வருடங்கள் அங்கேதான் வளர்ந்தார். ஓஷோவுடைய பெற்றோர்கள் கடர்வாடாவில் வசித்து வந்தார்கள். தாத்தா இறந்த பிறகு பாட்டியுடன் கடர்வாடா வந்துவிட்டார்..

1956 இல் ஓஷோ தத்துவயியலில் முதல் வகுப்பு சிறப்பு நிலை தேர்ச்சி பெற்று, சாகர் பல்கலைகழகத்திடமிருந்து முதுகலை பட்டம் பெறுகிறார். அவர் தனது பட்டப் படிப்பில் அகில இந்திய அளவில் தங்கப்பதக்கம் பெற்ற மாணவனாவார்.

1957 இல் ரெய்ப்பூரில் உள்ள சமஸ்கிருத கல்லூரியில் ஓஷோ பேராசிரியராக நியமனம் பெறுகிறார். 1958 இல் ஜபல்பூரில் உள்ள பல்கலைக்கழகத்தில் தத்துவ பேராசிரியராக நியமனம் பெற்ற ஓஷோ 1966 வரை அங்கேயே கல்வி கற்பிக்கிறார்.

1966 இல் ஒன்பது வருட பேராசிரியர் வேலையை விடுத்து, மனித குலத்தின் விழிப்புணர்வை உயர்த்துவதற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்கிறார்.

1970 ஜூலையில் மும்பாய்க்கு வந்த அவர் பகவான் ஸ்ரீ ரஜனீஷ் என்று அழைக்கப்பட்ட அவர் ஆன்மீக சாதகர்களுக்கு தீட்சை அளித்து சிஷ்யர்களாக்கினார்.

1990 ஜனவரி 19 மாலை 5 மணிக்கு ஓஷோ தன் உடலை விட்டு நீங்கினார்.

அவருடைய ஒரே செய்தி தியானம் தான். அதைத்தான் அவர் தன் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

சதுரகிரியின் கீழ்ப்பாகத்தில் பாரிஜாதம், அரிசந்தனம், கற்பகம், மந்தாரம், சந்தனம் என்னும் ஐந்து மரங்களும், அகில், சுரபுன்னை, பாதிரி, அசோகம் முதலான பல விருட்சங்களும், வைத்துண்டாக்கப்பெற்ற மல்லிகை, முல்லை, இருவாட்சி, பிச்சி, செவ்வந்தி, சம்பங்கி, நந்தியாவட்டை முதலான பல பூச்செடிகளும் நிறைந்த திருமூலர் வனமென்னும் ஓர் அழகிய வனமுண்டு. அவ்வனத்தில் ஆச்சிரமம் ஒன்றை உண்டாக்கி, அதில் தவ நிட்டை புரிந்துகொண்டு திருமூல மகரிஷி என்னும் ஒருவரிருந்தார் என இந்தத் திருமூலர் வனத்தை அறிமுகப் படுத்துகிறது தலபுராணம்.

அஷ்டமாசித்திகளையும் பெற்றிருந்த திருமூலர் அடிக்கடி ஆகாய மார்க்கமாகச் சென்று உலக நடைமுறைகளைக் கண்டுவரும் இயல்புடையவர். ஒருநாள் இரவு ஆகாய மார்க்கமாக வெளியே சென்று திரும்பும் போது இராஜேந்திரபுர நகரத்தின் சமீபமாக வரும்பொழுது அரண் மனையிலிருந்து பெரும் அழுகைக் குரல் கேட்கவே என்னவென்று எட்டிப் பார்த்தார்.

அங்கு அந்நாட்டு அரசன் வீரசேனன் என்பவன் மாண்டுவிட்டதால் அங்குள்ள யாவரும் பெருங்குரலில் அழுது கொண்டிருப்பது தெரிந்தது. குறிப்பாக வீரசேனன் மனைவி குணமதியும் அவனது சின்னஞ்சிறு பாலகன் சுவேத மகாராஜனும் அழுத அழுகை திருமூலரை அவர்கள் பால் இரக்கம் கொள்ள வைத்தது. நாட்டு மக்களுக்காக இல்லாவிட்டாலும் அவனது இளம் மனைவி, மற்றும் இளம் குழந்தைக் காகவாவது அவன் உயிர் பிழைப்பது அவசியம் என்று கருதினார்.

உடனடியாக சதுரகிரியிலுள்ள தன்னுடைய ஆசிரமத்திற்குத் திரும்பி


சிவனும் விஷ்ணுவுமாகிய இரட்டைலிங்கம்

தன் அந்தரங்கச் சீடனான குருராஜ மகரிஷியிடம் நடந்த விடயங்களைக் கூறி, குணவதி மற்றும் சிறுவன் சுவேத மகாராஜனின் மகிழ்ச்சிக்காக வீரசேன மகாராஜாவின் உடலில் பிரவேசித்து சிறுது காலம் உலக வாழ்க்கையில் ஈடுபடவுள்ளதைக் கூறி, தான் திரும்பி வரும் வரையில் தன்னுடைய உடலைப் பத்திரமாகப் பாதுகாத்து வரும்படி கூறி, அங்கிருந்த ஒரு குகையில் பாதுகாப்பான இடத்தில் தன் உடலைக் கிடத்திவிட்டு, சூட்சும உடலோடு இராசேந்திரபுரி சென்று வீரசேனன் உடலோடு இணைந்தார்.

இறந்த மன்னன் தூங்கி எழுபவன் போல் எழுந்ததைக் கண்ட அவனைச் சூழ்ந்து, வருந்தியிருந்த யாவரும் அழுகையை நிறுத்திக் கண்களைத் துடைத்துக் கொண்டு ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்து கலைந்து சென்றனர்.

வீரசேனன் உயிர் பிழைத்தெழுந்த நாள் முதல் நாட்டு மக்கள் எல்லோரும் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்ந்திருந்தனர். அவரது ஆட்சியில் நாட்டில் செல்வம் கொழித்தது. நீதி தழைத்தது. குற்றங்கள் நிகழாதிருந்ததால் மக்கள் அனைவரும் எவ்விதக் குறையுமின்றி மன நிறைவோடு வாழ்ந்தனர்.

எல்லோரையும் மகிழ்ச்சியடையச் செய்த வீரசேன திருமூலர் குணமதிக்கு இன்பத்தை அளிப்பதிலும் சுவேத மகாராஜனுக்குப் பாசத்தை அளிப்பதிலும்கூட எவ்விதக் குறையுமில்லாது நடந்து கொண்டார். ஆனாலும் குணமதியின் மனதில் மட்டும் சந்தேகப் புயல் வீசிக் கொண்டிருந்தது.

அரசன் தன் அருகில் இருக்கும் சமயங்களில் உலகத்தையே மறந்து விடுவாள். அரசர் இல்லாத ஒரே ஒரு கணம்கூட அவளுக்கு உலகம் சூனியமாகப்பட்டது. அரசன் அவள்மீது பொழிந்த அன்பு அவளை அப்படித் தவிக்க

## ஆன்மீகம் 07

வைத்தது. முன்பெல்லாம் இப்படி இல்லை. ஆனால், இப்பொழுது அவரின்றி அவளால் ஒரு கணம்கூட உயிரோடிருக்க முடியாது போல் இருந்தது. அந்த அளவு அவரை நேசிக்க ஆரம்பித்தாள். ஆனாலும் அந்தச் சந்தேகம்....

ஒரு நள்ளிரவு படுக்கையறையில் தனிமையில், தன் சந்தேகத்தைக் கேட்டே விட்டாள்.

வீரசேன திருமூலர், இனியும் அவளை ஏமாற்ற விரும்பாமல், குணமதி, உன் சந்தேகம் சரிதான். உனது கணவன் வீரசேனன் இறந்துவிட்டான். அன்று நீயும், உன் மகனும் அழுது தவித்ததைப் பார்த்து நான் இரக்கம் கொண்டேன். உறவும் அதனால் உண்டாகும் உணர்வுகளும் உடலுக்கு மட்டுமே, உயிருக்குக் கிடையாது. அதனால்தான் உனக்குச் சொந்தமான வீரசேனனை உடலின் மூலமாக உன்னோடு பழகினேன். நான் செய்தது தவறென்றால் என்னை மன்னித்துவிடு.

அரசே, இந்த விநாடிகூட உங்களை என் கணவராகவே கருதுகிறேன். என் கற்புக்கு எந்தக் களங்கமும் ஏற்பட்டதாகக் கருதவில்லை.



ஈழத்தமிழர் விடுதலைக்கு இதயம் தந்த இமயம்!

# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்


அரசிளங்குமாரி படத்தில் எம்.ஜி.ஆர்.

19

...பெரியவர் (எம்.ஜி. சக்ரபாணி) ஒப்புக்கொள்ளும்படி எவ்வளவோ சொல்லிப்பார்த்தார்கள்.

"கஷ்டம் இருக்கிறது. அதைத் தலையில் ஏற்றிக் கொண்டால்தான் கஷ்டம். அதை குழந்தை மாதிரி இடுப்பில் சுமக்க வேண்டும். அப்போது தான் அப்பப்ப இறக்கி விடலாம்" என்று சொல்லி விட்டார். "குளத்தில் போட்டால் குளத்தில் தேட வேண்டும். ஆற்றில் போட்டால் ஆற்றில்தான் எடுக்க வேண்டும்.

படமெடுத்து நஷ்டப்பட்டோம். அதிலேயே சம்பாதிப்போம்" என்று சில படங்களை ஆரம்பித்தார்.

1959 ஆம் ஆண்டு பொங்கல் வாழ்த்தாக ஒரு சிறுமலர் அச்சடித்து இப்படங்களை விளம்பரமாக வெளியிட்டார்.


எம்.ஜி.ஆர். கதாநாயகனாக முதல் நடித்தபடம் ராஜகுமாரி

1.நாடோடியின் மகன்
2.தேனாற்றங்கரை
3.கேரளக்கன்னி
4.தூங்காதே தம்பி தூங்காதே
5.காஞ்சித் தலைவன்
6.சுமை தாங்கி
7.காணி நிலம்

காஞ்சித் தலைவன், கலைஞர் எழுதினார்.

சுமைதாங்கி, அண்ணா எழுதினார்.

தேனாற்றங்கரை வித்வான் வே.லட்சுமணன் எழுதினார்.

மற்றவைகளை எழுதும் பாக்கியத்தை என்னிடம் தந்தார்.

கேரளக் கன்னி- திப்பு சுல்தான் வாழ்வில் நடந்த வரலாற்றின் ஒரு பகுதி. தூங்காதே தம்பி தூங்காதே குழந்தைகளுக்காக எழுதப்பட்ட கதை.

அந்தச் சமயத்தில் அரசிளங்குமரி படப்பிடிப்பு நடந்தது. ஸ்கேரே மௌச் என்ற ஆங்கில[illegible]

கலைஞரின் [illegible] உருவான படம். படம் முடியும் தறுவாயில் அதன் தயாரிப்பாளர் சோம சுந்தரம் காலமாகிவிட்டார்.

மனநிலை சரியில்லாத அவர்களின் மகளும் தந்தை இறந்த அதிர்ச்சியில் இறந்துவிட்டார்.

ஒரே நாளில் தந்தை, மகளின் சாவைக்கண்ட அக்காட்சி செம்மலை உருக்கியது.

அப்போது ஜூப்பிட்டரின் நெப்டி[illegible] விலைக்கு வந்தது.


அரசிளங்குமாரி படத்தில் குழந்தையுடன் பத்மினி

[illegible] உருவானது அந்தப் படப்பிடிப்பு நிறுவனத்தில் தான்.

அவர், முதலில் கதாநாயகனாக நடித்த 'இராஜகுமாரி எடுக்கப்பட்டதும் அதே நிலையத்தில் தான். அவருக்கு புகழ் தந்த மர்மயோகியும் எடுக்கப் பட்டது அங்குதான்.

வேலை செய்த ஸ்டுடியோவை வாங்குவதில் சிரமம் இருந்தாலும் பெருமைப்பட்டார். அதன் பங்குகளை தன் பெயருக்கு மாற்றிப் பணம் கொடுத்தார்.

அதற்கு தன் தாயின் பெயரை வைத்து சத்யா ஸ்டூடியோவாக ஆக்கினார். ஒரு சொந்த படப்பிடிப்பு நிலையத்தை உரிமையாக்கிக் கொண்ட முதல் நடிகர்- நம் நெஞ்சுக்கினியவர் தான்.

கலைமாமணி
கே. ரவீந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேன்முறையீட்டு திகதி அறிவிப்பு

(கொழும்பு)

2013 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் அடிப்படையில் தேசிய பாடசாலைகளுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வது தொடர்பிலான மேன்முறையீடு எதிர்வரும் 31 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

தங்களுடைய மேன்முறையீடுகளை, பணிப்பாளர், பாடசாலைகள் சேவை, கல்வியமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும் என்றும அமைச்சு அறிவித்துள்ளது. (எ-11)

# மீனவர் பிரச்சினை குறித்து ஆராய ஆறு பேர் கொண்ட குழு நியமனம்

(கொழும்பு)

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக நடைபெற்ற புதுடில்லி பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நியமிக்கப்பட்ட ஆறுபேர் கொண்ட குழு முதல் தடவையாகக் கூடி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இந்தக் குழுவின் அடுத்த பேச்சுவார்த்தை இலங்கையில் நடைபெறவுள்ளது.

இரு நாட்டு மீனவர்களும் சர்வதேச கடல் எல்லையை மீறுவதை எவ்வாறு தடுப்பது என்பது தொடர்பில் இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

முதற்கட்ட பேச்சு வார்த்தைகள் வெற்றியளித்திருப்பதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் ஊடகச் செயலாளர் நரேந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச எல்லையை மீறினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மீனவர்கள் கைதுசெய்யப்படும் போது அவர்களின் விடுதலையை துரிதப்படுத்துவது எவ்வாறு என்பது குறித்தும் இருநாட்டுப் பிரதிநிதிகளும் இப்பேச்சுவார்த்தையின்போது ஆராய்ந்துள்ளனர்.

புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு நாட்டு மீனவர்களையும் நேற்றுமுதல் கட்டம் கட்டமாக விடுவிப்பதற்கும், இரு நாட்டு மீனவர் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்கு ஆறு பேர் கொண்ட அதிகாரிகள் குழுவொன்றை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர் ஹெட்டியாராச்சி தலைமையில், கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் ஆலோசகர் டாக்டர் எஸ்.சுபசிங்க, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுகத கம்லத் ஆகிய மூவர் இலங்கை சார்பில் நியமிக்கப்பட்டனர்.

அதே நேரம், இந்தியா சார்பில் வேளாண்மைத்துறை அமைச்சின் செயலாளர் தலைமையில் மூவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு நேற்றுமுத்தினம் புதுடில்லியில் முதல் தடவையாகக் கூடி ஆராய்ந்துள்ளது. இந்தப் பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டதற்கமைய இரு தரப்பிலும் தடுத்துவைக்கப்பட்டிருந்த மீனவர்கள் பரிமாற்றப்பட்டனர்.

காங்கேசன்துறைக்கு அண்மித்த சர்வதேச கடல் எல்லையில் இந்த மீனவர்கள் பரிமாற்றம் இடம்பெற்றது.

சர்வதேச கடல் எல்லையைத் தாண்டினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை கட்டம் கட்டமாக விடுதலை செய்வதற்கு அமைச்சர் ராஜித சேனாரட்னவுக்கும், இந்திய மத்திய அமைச்சர் சரத்பவாருக்கும் இடையில் டில்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## யுத்த இழப்புக்கள் தொடர்பான தகவல் ஐ.நாவில் சமர்ப்பிக்கப்படும்

வடக்கு- கிழக்கில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஆள் மற்றும் சொத்து இழப்புக்கள் குறித்த கணக்கெடுப்புகள் ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் பேரவை யில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் இறுதிப் போரின் போது 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட தகவல் பிழையென்பதை இந்த கணக்கெடுப்பு உறுதிப்படுத்தும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் சனத்தொகை கணக்கெடுப்பு திணைக்களம் தற்போது வடக்கு-கிழக்கில் கணக்கெடுப்பை மேற்கொண்டு வருகிறது.

இறுதிப்போர் இடம்பெற்ற வேளையில் அங்கு சென்று எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள் என்பதை யாரும் கணக்கிடவில்லை.

எனவே ஐக்கிய நாடுகளின் அறிக்கை பிழையானது.

இந் நிலையில் எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஜெனீவாவில் நடைபெறும் சவால்களை சந்திக்க இலங்கை அரசாங்கம் தயாராக இருப்பதாக மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## மீண்டும் வந்தார் மேர்வின்

(கொழும்பு)

களனியின் தொகுதி அமைப்பாளராக மீண்டும் அமைச்சர் மேர்வின் சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

சில பிரச்சினைகள் காரணமாக தற்காலிக அடிப்படையில் களனி பிரதேசத்தின் தொகுதி அமைப்பாளர் பதவி மேர்வினிடமிருந்து வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

எனினும், தற்போது மீளவும் அமைச்சரிடம் அமைப்பாளர் பதவி ஒப்படைக்கப்பட்டுள்ளது. களனி ரஜ மஹாவிஹாரைக்கு நேற்றுமுன்தினம் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு மீளவும் தொகுதி அமைப்பாளர் கடமைகளை ஆரம்பித்தார்.

வழிபாட்டில் ஈடுபட்ட அமைச்சர் அணிந்திருந்த தங்க சங்கிலி ஒன்றை கழற்றி விஹாரைக்கு காணிக்கையிட்டார். அதன்பின் அவர் அங்கு கூடி நின்றவர்கள் மத்தியில் உரையாற்றுகையில், மீளவும் களனி தொகுதியின் அமைப்பாளர் பதவி கிடைக்கப்பெற்றுள்ளது.

மக்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்றுவேன். அனர்த்த நிலைமைகளின் போதும் என்னை கைவிடாது இணைந்திருந்தவர்களின் அர்ப்பணிப்பு பாராட்டுக்குரியது.

என்னை விட்டுச் செல்லாத அனைவருக்கும் என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன் என தெரிவித்துள்ளார். (அ-2)



பொலிகண்டி அம்பிகை சனசமூக நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நூலகப் பகுதியை வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஷ்பலிங்கம் அண்மையில் உத்தியோக பூர்வமாக திறந்து வைத்தபோது... (படம்: கரணவாய் செய்தியாளர்)

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிடுவது எமக்கு சவாலல்ல

## பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய கொழும்பு தொகுதிக்கு இணைப்பாளராக ஹிருணிகா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் கோட்டையாக விளங்கும் மத்திய கொழும்பை நாம் இணைந்து செயற்பட்டு வெற்றியீட்டுவோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய கொழும்பு இணைப்பாளர்களில் ஒருவரும் முதலீட்டு ஊக்குவிப்பு பிரதி அமைச்சருமான பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கோட்டை உலக வர்த்தக மைய கட்டடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,



ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டையாக விளங்கும் மத்திய கொழும்பிற்கு அக்கட்சி தேவையான அபிவிருத்திகளைச் செய்யவில்லை. பாதுகாப்புச் செயலாளர் சுமார் 80 ஆயிரம் மக்களுக்காக வீடமைப்புத் திட்டங்களை ஆரம்பித்துள்ளார்.

முதலில் கட்சி, அடுத்ததாக விருப்பு வாக்குகள் என்பதே எனது அரசியல். ஆனால், கட்சியிலுள்ள சிலர் விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டுகிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி மேல் மாகாண சபைத் தேர்தலில் எவரை நிறுத்தினாலும் எமக்குப் பிரச்சினையே இல்லை. கொழும்பை வெற்றிகொள்ள முடியும் என்ற உறுதியிலேயே ஜனாதிபதி இருக்கிறார்.

எதிர்க் கட்சிகள் எவரை நிறுத்தினாலும் போட்டியை எதிர்கொண்டு வெற்றியீட்ட நாம் தயாராகவே இருக்கிறோம்.

இன்று இனவாதிகள் அரசியலில் இலாபம் தேட முயற்சிக்கிறார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்தகாலத்தில் அமைதியாக இருந்தவர்கள் இன்று இன வாதம் பேசுகிறார்கள். இரத்தம் சிந்தி பெற்ற வெற்றியை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

முஸ்லிம்களுக்கு எதிரான பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் ஜனாதிபதி முனைப்புடன் இருக்கிறார்.

பௌத்தர்களில் பெரும் பான்மையானோர் கருணையுள்ளவர்கள் இனவாதம் பேசி ஒரு போதும் வெற்றி கொள்ள முடியாது. எல்லா சமயத்திலும், அடிப்படை வாதிகள் இருக்கிறார்கள்.

நாட்டில் நாமனைவரும் சகோதர பாசத்துடன் வாழவேண்டும்.

மேல் மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனியாக போட்டியிடுகின்றமை எமக்கு சவாலே இல்லை.

எமக்கென்று ஓர் வாக்குவங்கியுள்ளது. அவர்கள் எமக்கே வாக்களிப்பார்கள். பல அபிவிருத்திகளை இந்த அரசின் மூலம் பெற்றுக் கொண்ட கொழும்பு மத்திய மக்கள் நிச்சயம் எம்மை வெற்றியடையச் செய்வார்கள் என்றார். (அ-2)

## மாலைதீவு ஜனாதிபதி இலங்கைக்கு விஜயம்

மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யாமீன் அப்துல் கயூம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை அவர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

மாலைதீவு ஜனாதிபதி மூன்று நாட் கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது அம்பாந்தோட்டை உள்ளிட்ட சில பிரதேசங்களுக்கு அவர் விஜயம் செய்யவுள்ளார். இதேவேளை இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயநாத் கொழம்பகே மாலைதீவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

மாலை தீவு சென்றுள்ள அவர், அந்நாட்டு ஜனாதிபதி அவரது அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தையின் போது இரு நாடுகளின் கடல் பாதுகாப்பு விவகாரங்கள், கடற்கொள்ளைகள், கூட்டுப் பயிற்சிகள் உட்பட இரண்டு நாடுகளின் விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் நாட்டின் அபிவிருத்திக்காக மட்டுமே வெளிநாடுகளிலிருந்து கடன் பெறுகின்றோம்

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



**அபிவிருத்திக்காக மட்டுமே அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து இனி கடன்களைப் பெற்றுக்கொள்ளுமே தவிர ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் போன்று உணவுக்கா கவும் கோதுமை மாவுக்காகவும் நாம் கடன் பெறவில்லை. எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தை விமர்சிப் பதே தற்போது எதிர்க்கட்சியின் அரசியலாகி விட்டது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இரண்டாயிரம் மில்லியன் ரூபா செலவில் நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள வெயாங்கொடை மேம்பாலம் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கைக்கு கசினோவை அறிமுகப்படுத்தியவர் ரணசிங்க பிரேமதாசவே. அவற்றை மறந்துவிட்டு நாட்டில் ஊழல் மோசடி நடப்பதாக விமர்சனம் செய்கிறது ஐக்கிய தேசியக் கட்சி. மக்களுக்காக பாதையில் இறங்கி மக்களுடன் வாழ்ந்து செயற்பட்ட நாம் விமர்சனங்களுக்கு சளைக்கப் போவதில்லை.

வீதிகளில் நடந்த ஆர்ப்பாட்டங்களில் மக்களோடு நின்ற நாம் எதிர்க் கட்சியினர் தூக்கத்திலிருந்து எழும்பி மேற்கொள்ளும் சேறு பூசல்களுக்கும் விமர்சனங்களுக்கும் பயப்படப் போவதில்லை.

அரசாங்கம் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது தேர்தலுக்குச் சென்று மக்களுக்குக் கூறுவதற்கு எதுவுமில்லாததாலேயே எதிர்க் கட்சி அரசாங்கத்துக்குச் சேறு பூசும் செயற்பாட்டில் இறங்கியுள்ளது.

மக்களோடு இன்று செயற்படும் எமக்கு சேறு பூச நினைப்பவர்களுக்கு அதே சேறு அவர்களுக்கே போய்ச் சேருவதை இப்போது நாம் காணக்கூடியதாயுள்ளது.

நெடுஞ்சாலைகள், மேம்பாலங்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் என மக்களுக்கான தேவைகளை நாம் பெற்றுக் கொடுக்கும் போது எமக்கு எதிரிகள் அதிகரித்து வருகின்றனர். எனினும் சொல்வதைச் செய்யும் தலைவன் என்ற வகையில் மக்களுக்கான தேவைகளை முழுமையாக நிறைவேற்றுவதில் நாம் முன்னேற்றகரமாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறோம்.

நாம் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை அவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து வருகிறோம். எனினும் நாட்டில் மோசடி அதிகரித்து வருவதாக எதிர்க் கட்சியினர் தெரிவிக்கின்றனர். அவர்களின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றவற்றை அவர்கள் மறந்து விட்டார்கள்.

நாம் மக்களோடு வாழ்ந்து அவர்களுக்காக குரல் கொடுப்பவர்கள். அவர்களின் தேவை எது என்பதை நாம் அறிந்து அதனைப் பெற்றுக் கொடுப்போம். பட்டதாரிகள் வேலைவாய்ப்பு உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கும் நாம் தீர்வு பெற்றுக்கொடுத்துள்ளோம்.

மரணங்களைக் கணக்கெடுத்து வருவதை சிலர் இப்போது தொழிலாக செய்து வருகின்றனர். தினமும் நூற்றுக் கணக்கில் மரணங்கள் நிகழ்ந்த யுகம் ஒன்றிருந்தது. இப்போது எந்த மரணமும் இடம் பெறுவதில்லை என்றார். (அ-2)

# சிறைச்சாலை மோதல் குறித்த அறிக்கை முழுமையானதல்ல

## அமைச்சர் கஜதீர தெரிவிப்பு

வெலிக்கடை சிறைச்சாலையில் கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் 9 ஆம் திகதி ஏற்பட்ட மோதல் சம்பவம் குறித்து விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய குழுவின் அறிக்கையானது முழுமையான அறிக்கை அல்ல என சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முடிவுகள் மற்றும் கண்காணிப்புகள் சம்பந்தமாக தனக்கு இணங்க முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதல் சம்பந்தமான விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட குழு 553 பக்கங்களை கொண்ட தனது அறிக்கையை ஒரு மாதத்திற்கு முன்னர் அமைச்சரிடம் கையளித்திருந்தது.

வெலிக்கடை சிறைச்சாலை மோதல்களில் 27 கைதிகள் கொல்லப்பட்டதுடன் மேலும் பலர் காயமடைந்தனர்.

கைதிகள் மீது இராணுவம் நடத்திய தாக்குதலிலேயே அவர்கள் கொல்லப்பட்டதாக கூறப்பட்டது. இந் நிலையில் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி பந்துல அத்தப்பத்து தலைமையில் மூவரடங்கிய குழு விசாரணைக்கு நியமிக்கப்பட்டதுடன் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி அறிக்கையில் சிறைச்சாலைகளுக்கு இராணுவத்தினர் அனுப்பி வைக்கப்பட்டமை சட்டவிரோதமானது என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தவர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கூட்டமைப்பு சர்வதேசத்திடம் ஒப்பாரி வைப்பதில் எவ்விதப் பயனும் ஏற்படாது

## இ.தொ.காங்கிரஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

பிளவு என்ற அபாயத்துக்கு இடம கொடுக்காது சம்பந்தன் காலத்திலேயே தமிழ் மக்களுக்கான தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கு முயல வேண்டும். மாறாக பிளவுகள் ஏற்படுமானால் அது தமிழருக்கு ஆரோக்கியமானதாக அமையாது. இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆலோசகரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ரி.வி. சென்னன் தெரிவித்துள்ளார்.

பதுளை பணிமனையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தமிழ் மக்களுக்கான மேம்பாடுகள் சர்வதேசம் மூலமாகத்தான் பெற்றுக் கொடுக்க முடியுமென்ற நிலைப்பாட்டில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இருந்து வருகின்றது.

தற்போதைய அரசையோ ஜனாதிபதியையோ நம்ப முடியாதென்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு கூறி வருகின்றது. பாராளுமன்ற தெரிவுக் குழு விடயத்திலும் அக்கறையற்ற நிலையினையே கூட்டமைப்பு கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்கள் மீது கூட்டமைப்பிற்கு கருணை இருக்குமேயாகில் ஜனாதிபதியின் கரங்களைப்பற்றி அவருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு தமிழ் மக்களுக்கான தீர்வினைப் பெற்றுக் கொடுக்கலாம். அதைவிடுத்து சர்வதேசமே எம்மக்களுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று ஒப்பாரி வைத்துக் கொண்டிருப்பதில் பயன் ஏதும் கிடைக்கப் போவதில்லை.

நாடும் ஏடும் போற்றும் வகையில் பெற்றிருந்த அபார வெற்றியை தமிழன் என்ற ரீதியில் நாம் பாராட்டுகின்றோம். ஆனால் அன்றிருந்த ஒற்றுமை ஐக்கியம் தற்போது சிதைந்து கொண்டு போவதைப் பார்க்கும் போது தலை குனிய வேண்டியுள்ளது.

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் காலத்திலேயே தமிழர் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டு விடல் வேண்டும். தவறின் தமிழர் பிரச்சினைகள் தொடர்கதையாகவே தான் இருக்கும்.

ஆகவே சம்பந்தன் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் ஒன்றுகூடி ஏற்படப்போகும் பிளவினை தடுத்து நிறுத்த வேண்டும். பிரிந்தவர்களை ஒன்றிணைக்கும் விவேகத்தை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.


ஆகையினால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியின் நேசக் கரங்களைப் பற்றி பேச்சுவார்த்தைகளுக்கு முதலில் சென்று பார்க்க வேண்டும். அதன் பின்பு மாற்று செயற்பாடுகளை முன்னெடுக்கலாம் என்றார். (அ-2)



கோப்பாய் இலங்கை வங்கிக் கிளையினால் புதுவருடப் பிறப்பு தின நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் இந்து மதகுரு மங்கல விளக்கேற்றுவதனையும் இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளருடன் கோப்பாய் இலங்கை வங்கி முகாமையாளரும் ஊழியர்களும் நிற்பதைப் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் புயலுக்குள்ளே ஆதாயம் தேடும் அரசாங்கம்



அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பூகோள குற்றவியல் நீதிக்கான பணியகத்தில் போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் சிறப்புத் தூதுவர் ஸ்டீபன் ஜே.ராப், இலங்கையில் ஒரு புயலைக் கிளப்பிவிட்டுப் போயிருக்கிறார். வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 25 ஆவது கூட்டத் தொடரில், இலங்கைக்கு எதிரான அடுத்த கட்ட நகர்வுக்கு அமெரிக்காக தயாராகிவிட்டது என்ற செய்தியை ஸ்டீபன் ராப்பின் இலங்கைப் பயணம் பெரும்பாலும் உறுதிப்படுத்திவிட்டது.

இது தொடர்பாக ஏற்கனவே, அரசாங்கத்துக்கு அமெரிக்கா அறிவித்து விட்டதாகவும் கூட சில தகவல்கள் உள்ளன. ஆனால், இலங்கையோ அமெரிக்காவோ அது பற்றிய எந்த அதிகாரபூர்வ அறிவிப்பையும் வெளியிடவில்லை. எனினும், ஸ்டீபன் ராப் இந்தப் பயணத்தைப் பயன்படுத்திக் கொண்ட விதம், மற்றும் அவர் வடக்கில் வெளியிட்ட கருத்துக்கள் என்பன, இலங்கைக்கு எதிரான அடுத்தகட்ட தீர்மானத்தைக் கொண்டுவருவதில் அமெரிக்கா தீவிரமாகப் பங்காற்றி வருகிறது என்பதை உணர்த்தியுள்ளது.

ஜெனிவாவில் ஏற்கனவே, இரண்டு தீமானங்களை இலங்கைக்கு எதிராக கொண்டு வந்து நிறைவேற்றிய அமெரிக்கா, அந்த இரண்டு தீர்மானங்களையும் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றத் தவறியுள்ளதாக குற்றம் சாட்டும் நிலையில், அடுத்த தீர்மானத்தை எப்படியாவது கொண்டுவந்தேயாக வேண்டிய கட்டாயம் அந்த நாட்டுக்கு உள்ளது.

அதற்கு அப்பால் அமெரிக்கா தற்போது கொழும்புடன் அதிகளவில் முரண்படத் தொடங்கியுள்ள சூழலில், ஜெனிவாவில் இன்னும் அதிகமான வேகத்துடன் செயலாற்ற வேண்டிய நிலையில் இருப்பது ஆச்சரியத்துக்குரியதொன்றல்ல.

ஸ்டீபன்ராப் மேற் கொண்ட பயணத்துக்கும் அவர் அரசாங்கத் தரப்பினருடன் நிகழ்த்திய சந்திப்புகளுக்கும், அரசாங்கம் எந்த முக்கியத்துவத்தையும் கொடுக்கவில்லை. அதுபோலவே, அரசாங்கத் தரப்பினருடனான சந்திப்புகளுக்கு ஸ்டீபன் ராப்போ, அல்லது அமெரிக்காவோ முக்கியத்துவம் கொடுக்கவும் இல்லை. கடந்த 6 ஆம் திகதி அதிகாலையில் கொழும்பு வந்திறங்கிய ஸ்டீபன் ராப் முதலில் அரசாங்கத் தரப்பில் சந்தித்தது, பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவைத் தான்.

அண்மைக் காலங்களில், இலங்கை வரும் அமெரிக்க உயர் மட்டப் பிரதிநிதிகள் முதலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை சந்திக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். அதற்கு மாறாக, ஸ்டீபன் ராப் முதலில் கோத்தபாய ராஜபக்சவை சந்தித்தார். அதன் பின்னரே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை சந்தித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாகவோ, அதன் பின்னர் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், சட்டமா அதிபர் பாலித பெர்னான்டோ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம ஆகியோருடன் நடத்திய சந்திப்புகள் தொடர்பாகவோ அரசாங்கத் தரப்பு எந்த அதிகாரபூர்வ தகவலையும் வெளியிடவில்லை.

அதுமட்டுமன்றி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்திப்பதற்கு ஸ்டீபன் ராப் அனுமதி கோரியிருந்ததாகவும், அதனை அரசாங்கம் நிராகரித்து விட்டதாகவும் கூடத் தகவல்கள் வெளியாகின. அதை அமெரிக்காவோ, இலங்கையோ ஏற்கவோ மறுக்கவோ இல்லை. எவ்வாறாயினும், அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் முக்கியமான ஒரு அதிகாரியின் பயணம் தொடர்பான தகவல்களை இலங்கை அரசாங்கம் இருட்டடிப்புச் செய்ததில் இருந்தே, இதனை அரசாங்கம் விரும்பவில்லை, வேண்டா வெறுப்புடன் தான் அனுமதித்துள்ளது என்பதை உணரமுடிகிறது. ஸ்டீபன் ராப் திடீரென வந்து கொழும்பில் இறங்கியிருக்க முடியாது; இலங்கை அரசாங்கத்திடம் முன் அனுமதி பெற்றே, அவரால் கொழும்பு வந்திருக்க முடியும். அவர், எதற்காக வரப்போகிறார் என்பது இலங்கை அரசாங்கத்துக்கு நிச்சயமாக தெரியாமல் போயிருக்காது.

ஆனாலும், அவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது.

அனுமதி கொடுக்க மறுக்கப்பட்டிருந்தால், அதன் விளைவுகள் என்னவாகும் என்பதை அரசாங்கம் அறியாமல் இருந்திருக்காது. வேண்டாத விருந்தாளியாகவே ஸ்டீபன் ராப்பை அரசாங்கம் பார்த்ததால் தான், அவரது பயணத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. அதேவேளை, அவர் இலங்கையில் பயணத்தை மேற்கொண்டிருந்த சூழலிலேயே அவருக்கு எதிரான போராட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன.

அதன் பின்னணியில் அரசாங்க அமைச்சர்கள் சிலரே இருந்தனர் என்பதை அமெரிக்கா நன்றாகவே அறிந்திருந்தது. ஏற்கனவே, முடிவெடுத்துவிட்டே ஸ்டீபன் ராப் கொழும்பு வந்துள்ளதாக அரச தரப்பில் இருந்து அவருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

அவருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் முடிச்சுப் போட்டும் செய்திகள் வெளியாகின. ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, சனல் 4 ஊடகவியலாளர் கலும் மக்ரே, ஸ்டீபன் ராப் என்று அரசாங்கத்தினால் அழைக்கப்பட்ட பலரும், இதே போன்று அரசாங்கத்துக்கு பாதகமான கருத்துக்களை வெளியிட்ட போது, இத்தகைய விமர்சனங்களைத் தான் எதிர்கொள்ள நேரிட்டது.

அதேவேளை, ஸ்டீபன் ராப்பும், இந்தப் பயணத்தின் போது, போர்க்குற்றங்கள் சார்ந்த சாட்சியங்களை சந்திப்பதிலேயே அதிக கவனம் செலுத்தியிருந்தார். வடக்கிலும், கொழும்பிலும் அவர் பல முக்கியமான பிரமுகர்களை சந்தித்திருந்த போதிலும், வடக்கு மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சந்திப்புகள் மற்றும் புதுமாத்தளன் பயணம் ஆகியன தொடர்பான படங்களை மட்டுமே அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டது.

இவை அனைத்துமே போர்க் குற்றங்களாக அல்லது மனித உரிமை மீறல்களாக வகைப்படுத்தப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடையவையாகும். உச்சக்கட்டமாக, புதுமாத்தளன் புனித அந்தனீஸ் மைதானத்தை, 2009 ஜனவரியில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்ட இடம் என்று டுவிட்டரில் அடையாளப்படுத்தியது அமெரிக்கத் தூதரகம்.

இது சர்சையாக எழுந்த போது, அது அமெரிக்காவின் நிலைப்பாட்டை ஒட்டி வெளியிடப்பட்ட பதிவு என்றும் அதை மாற்ற முடியாது என்றும் அமெரிக்கத் தூதரகம் கூறிவிட்டது. இவையெல்லாம் இல்ஙகை தொடர்பான இறுக்கமான நில்லைப்பாட்டை அமெரிக்கா எடுத்துள்ளது என்பதன் அடையாகமாகவே பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவின் அந்த இறுக்கமான நிலைப்பாடு, சர்வதேச போர்க்குற்ற விசாரணை என்பதாக இருக்கும் என்றே கூறப்பட்டாலும், அதில் சிக்கல்கள் உள்ளது என்பதையும் யாழ்ப்பாணத்தில் ஸ்டீபன் ஜே.ராப் தெளிவுபடுத்தியுள்ளார்.

சர்வதேச போர்க்குற்ற விசாரணைத் தீர்மானத்தை முன்வைத்தால், பல நாடுகள் அதற்கு ஆதரவளிக்கத் தயங்கலாம் என்று அவர் கூறியுள்ளார். ஆனாலும், அமெரிக்கா அந்த முயற்சியில் இருந்து பின்வாங்குவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை.

ஜெனிவா அமர்வு ஆரம்பிக்க இன்னும் ஆறு வாரங்களே உள்ள நிலையில், அமெரிக்காவின் முயற்சிகளை விமர்சிப்பதில் தான் அரசாங்கமும் அக்கறை செலுத்துகிறதே தவிர, மேற்குலகின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி அழுத்தங்களில் இருந்து தப்பிக்க எத்தனிக்கவில்லை.

அமெரிக்காவின் தற்போதைய இறுக்கமான போக்கு, இலங்கைக்கு எதிராக தடைகளை விதிக்க அல்லது சர்வதேச போக்குற்ற விசாரணைகளை கொண்டுவர காரணமாகலாம் என்று தயான் ஜெயதிலக போன்ற ராஜதந்திரிகள் பலரும் எச்சரித்துள்ளனர்.

எவ்வாறாயினும், ஜெனிவா அமர்வு குறித்து அரசாங்கத்துக்கு ஒருவித உதறல் இருந்தாலும் கூட, அதைப் பயன்படுத்தி அரசியல் ஆதாயத்தை தேடிக்கொள்வதில் தான், அரசாங்கம் முனைப்புக் கொண்டுள்ளது. அதாவது, காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளும் உத்தி இது.

விடுதலைப்புலிகள் பலம் பெற்றிருந்த காலத்தில் போரை முன்னிறுத்தியும், விடுதலைப் புலிகளை வெற்றி கொண்ட பின்னர், அந்த வெற்றியை முன்னிறுத்தியும் தேர்தல் வெற்றிகளைப் பெற்று வந்த அரசாங்கத்துக்கு இப்போது ஜெனிவா அமர்வு நல்வாய்ப்பாகியுள்ளது. அதனை குறிவைத்தே மாகாணசபைத் தேர்தல்களில் மட்டுமன்றி தேசிய அளவிலான தேர்தல்களிலும் வெற்றிகளை ஈட்டுவதில் தான் அரசாங்கத்தின் கவனம் உள்ளது.

ஜெனிவா அமர்வில் போடப்படலாம் என்று எதர்பார்க்கப்படும் சுருக்கு கழுத்தில் விழ முன்னர், அதை அரசியல் வெற்றியாக்கி விட முனைகிறது அரசாங்கம். எவ்வாறாயினும், இம்முறை அரசாங்கம், ஜெனிவாவில் கடுமையான அழுத்தங்களைச் சந்திக்க நேரிடலாம். ஏனென்றால், சர்வதேச சமுகம் விரும்புவது போன்ற நம்பகமானதொரு விசாரணையை மேற்கொள்ளும் உறுதியிலிருந்து அரசாங்கம் முற்றாகவே பின்வாங்கியுள்ளது.


இத்தகைய பின்னணியில், சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் முயற்சிகள் ஜெனிவாவில் தீவிரமடையலாம். அது அராசங்கத்துக்கு உள்நாட்டில் அரசியல் வெற்றிகளைக் குவித்துக் கொடுத்தாலும், சர்வதேச அளவில் இலங்கையை தனிமைப்படுத்தி விடமுடியும் என்பதை மறுக்க முடியாது.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைமாத இராசி பலன்கள்

# 14.01.2014-12.02.2014



## சிம்மம்

(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)

**எதற்கும் அஞ்சாத குணம் பெற்ற சிம்ம இராசி நேயர்களே! கனவுகள் நனவாகும் நேரம்!**

தைமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது தக்க விதத்தில் பொருளாதார நிலை உயரும். தடைகள் அகலும். இடையில் எதிரிகளால் ஏற்பட்ட இன்னல்கள் அகலும். உற்றார், உறவினர்கள் உங்கள் பேச்சுக்கு ஒத்துழைப்பு கொடுப்பர். பெற்றோர் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்களும் இனி மாறும்.

மாதத் தொடக்கத்தில் விரயாதிபதி சந்திரன் லாப ஸ்தானத்தில் குருவோடு இணைந்து செயற்படுகின்றார். குரு சந்திர யோகம், அபரிமிதமான வளர்ச்சியைக் கொடுக்கும். கொள்கைப் பிடிப்போடு செயற்பட்டமைக்காக பாராட்டுக்கள் வந்து சேரும். யோககாரகன் செவ்வாய் 2-ல் சஞ்சரிப்பதால் வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். வளர்ச்சிக்கு வித்திடும் விதத்தில் வள்ளல்களின் ஒத்துழைப்பும், வங்கிகளின் ஒத்துழைப்பும் கிடைத்து மகிழ்வீர்கள்.

3-ல் சனி, ராகு சஞ்சரிப்பதால் முன்னேற்ற தடை வருமோ என்று நீங்கள் கவலைப் பட வேண்டாம். குருவின் பரிபூரண பார்வை 3ஆம் இடத்தில் பதிவதால் வழக்குகளில் வெற்றி கிடைக்கும். உடன் பிறப்புகள் உங்கள் சொற்களைக் கேட்டு அதன்படி நடக்கத் தொடங்குவர். காவற்துறையால் ஏற்பட்ட கலக்கம் அகலும். உங்களின் திறமை பளிச்சிடும் இந்த நேரத்தில் வெளிநாட்டிலிருந்தும் அனுகூல தகவல் வந்து சேரலாம்.

ராசிநாதன் சூரியனும், புதனும், சுக்ரனும் இணைந்து புத-சுக்ர யோகத்தை உருவாக்குகிறார்கள். எனவே பூமி வாங்குவது சம்பந்தமாக எடுத்த முடிவை இதுவரை தக்க வைத்திருந்தாலும் இம்மாதம் அந்த திட்டத்தை நிறைவேற்ற முன்வருவீர்கள். மறைந்த புதன் நிறைந்த தனலாபத்தை வழங்கலாம் என்பதால் வரும் தொகையால் கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். கடன்சுமை பாதிக்கு மேல் குறையும்.

இம்மாதத்தில் 3 கிரகங்கள் வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கிறார்கள். நமது ஜாதகத்தில் நன்மை தரும் கிரகங்களாக இருக்குமேயானால் அவை வக்ரம் பெறும்பொழுது திருப்திகரமான பலனை வழங்க இயலாது. மறைவிடங்களுக்கு அதிபதியான கிரகங்கள் வக்ரம பெற்றால் மிகுந்த நன்மை உருவாகும். பொதுவாக வக்ர காலங்களில் வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

**கிரகங்களின் வக்ர இயக்கம்!**

இம்மாதம் உங்கள் ராசிக்கு 2, 11-க்கு அதிபதியான புதன் வக்ரம் பெறுகிறார். எனவே, பணப்புழக்கத்தில் சில சமயங்களில் போதுமான தொகை இல்லையே என்று கவலைப் பட நேரிடும். வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த தகவலில் தாமதம் ஏற்படலாம். இளைய சகோதரத்தோடு அனுசரித்துச் செல்வதன் மூலமே இனிய பலன்கள் வந்து சேரும். மாதத் தொடக்கத்திலேயே சுக்ரன் வக்ரம் பெறுகிறார். 3, 10-க்கு அதிபதியான சுக்ரன் வக்ரம் பெறும் பொழுது தொழிலில் கொஞ்சம் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. புதிய பங்குதாரர்களை நம்பி மூலதனங்களை கொடுக்கும்பொழுது கொஞ்சம் யோசிப்பது நல்லது.

தொழில் நிலையங்களில் சில மாற்றங்களை செய்ய முன்வருவீர்கள். குருவின் வக்ர காலம் ஓரளவு உங்களுக்கு நன்மையும், தீமையும் கலந்தே வழங்கும். பஞ்சமாதிபதியாகவும் குரு விளங்குகிறார். எனவே, பிள்ளைகளால் சில தொல்லைகள் ஏற்பட்டு அகலும். குழந்தைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் தாமதம் வருகிறதே என்று கவலைப்படுவீர்கள். அஷ்டமாதிபதியாகவும் குரு விளங்குவதால், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். இழப்புகளை ஈடு செய்யும் வாய்ப்பு கிட்டும்.


இம்மாதம் பெருமாள் வழிபாடு பெருமை சேர்க்கும். அனுமன் வழிபாடு அல்லல் தீர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பாடுபட்டதற்கு ஏற்ற பலன கிடைக்கும். மனதில் நினைத்த காரியங்கள் மளமளவென்று மாதத் தொடக்கத்தில் நடைபெறும். குடும்பத்தினர் உங்கள் சொல்லுக்கு மதிப்புக் கொடுப்பர். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். ஒரு சில சொத்துக்கள் உங்கள் பெயருக்கு வாங்கியதை விற்று தொழிலுக்கு மூலதனமாகக் கொடுப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தலைமை பதவியும், தக்க விதத்தில் உதவியும் கிடைக்கும். வருங்காலத்தை நலமாக்கிக் கொள்ள வடிவேலன் வழிபாட்டையும், வக்ர வியாழனின் ஆதிக்கம் இருப்பதால் அறுபத்து மூவர் வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

## குரு சந்திர யோகம் அபரிமிதமான வளர்ச்சியைக் கொடுக்கப்போகிறது

## சிவல்புரி சிங்காரம்



## கன்னி

(உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்)

**எல்லா நாட்களுமே இனிய நாட்களாக அமைய வேண்டுமென்று விரும்பும் கன்னி இராசி நேயர்களே! அனுசரித்துச் சென்றால் ஆதாயம் உண்டு!**

தைமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசிநாதன்புதன், ஜனவரி 28 முதல் வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கப் போகிறார். தொடர்ந்து குரு பகவானும் வக்ர இயக்கத்திலேயே இருக்கிறார். செவ்வாய் மூன்று மற்றும் எட்டு ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் ராசியிலேயே சஞ்சரிக்கிறார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் கிரகங்களின் சஞ்சாரம் அமையும் பொழுது ஏழரைச் சனியின் ஆதிக்கமும் இணைந்திருப்பதால் இம்மாதம் எதைச் செய்தாலும் அதை ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. இறை வழிபாட்டினை தெசாபுத்தி ரீதியாக தேர்ந்தெடுத்து வழிபடுவதன் மூலம் நல்ல பலன்கள் நாடிவரும் வாய்ப்புக் கிட்டும்.

முதல் சுற்றாக ஏழரைச் சனி நடப்பவர்கள் எதிலும் கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும். அதுமட்டுமல்லாமல் மூன்றாவது சுற்றாக ஏழரைச் சனி நடப்பவர்களும் மிக மிக கவனத்துடன் செயற்பட வேண்டும். இரண்டாவதாக நடைபெறும் பொங்கு சனியின் ஆதிக்கம் நடைபெறுபவர்கள் மட்டுமே நற்பலன்களை அதிகம் பெற முடியும்.

என்ன இருந்தாலும் அஷ்டமத்து கேது அலைச்சலை உருவாக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். மனக்கசப்பு தரும் சம்பவங்களைச் சந்திக்க நேரிடும். மக்கள் சேவையை மகேசன் சேவை என்று செய்தாலும் வீண் பழிகளுக்கு ஆளாக நேரிடும். ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்களைப் போக்கிக் கொள்ள மருத்துவரை நாடிச் செல்வீர்கள். ஆனால் அவரோ உடல் நோய் ஒன்றுமில்லை என்று சொல்வார். வைத்தியரே ஆச்சரியப்படும் அளவிற்கு உடல் நலம் சீரானது போல் காட்சிதரும். ஆனால் வீட்டிற்கு வந்த மறுநிமிடமே தொல்லை உருவாகும்.

எல்லாம் சனியின் ஆதிக்கத்தில் தான். எனவே ஆரோக்கியம் சீராகவும், அருகில் இருப்பவர்களால் சச்சரவுகள் ஏற்படாதிருக்கவும், பணவரவு திருப்தி தரவும் பக்கத்திலிருக்கும் ஆலயங்களை நோக்கி அடியெடுத்து வைப்பது நல்லது. காலை, மதியம், மாலை ஆகிய மூன்று நேரங்களிலும் வழிபாடு செய்வதன் மூலம் எண்ணங்கள் ஈடேறுவதிலிருந்த தடைகள் அகலும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

**கிரகங்களின் வக்ர இயக்கம்!**

இம்மாதம் மூன்று கிரகங்கள் வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றன. மாதத் தொடக்கத்திலேயே 2, 9-க்கு அதிபதி சுக்ரன் வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக பண நெருக்கடி, கொஞ்சம் அதிகரிக்கலாம். பாக்கிகள் வசூலாகவில்லை என்று கவலைப்படுவீர்கள். தந்தை வழி உறவில் திருப்தி ஏற்படாது. அதன் பிறகு புதன் வக்ரம் பெறுகிறார். எனவே, ஜனவரி 28-க்கு மேல் தொல்லைகள் உருவாகலாம்.

பங்குதாரர்கள் விலகுவதாகச் சொல்லி பயமுறுத்துவர். மாமன், மைத்துனர் வழியில் மனக்கசப்பு தரும் தகவல் வந்து சேரலாம். உறவினர்களுக்காக ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகும். அதன் பிறகு குருவின் வக்ரத்தைப் பொறுத்தவரை ஓரளவு நன்மையே செய்யும். குரு உங்கள் ராசிக்கு 4, 7-க்கு அதிபதியாவதால் என்றைக்கோ குறைந்த விலைக்கு வாங்கிப் போட்ட இடம் இப்பொழுது அதிக விலைக்கு விற்று மகிழ்ச்சியைக் கொடுக்கும். பயணங்களால் பலன் உண்டு. அஞ்சல் வழியில் ஆச்சரியப் படத்தக்க தகவல் வந்து சேரும். வாழ்க்கை துணை வழியில் இருந்த சச்சரவுகள் அகலும. விலகிச்சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். புதிய பொறுப்புகளும், பதவிகளும் ஒரு சிலருக்கு வந்து சேரலாம்.

இம்மாதம் திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபட்டு வருவது நல்லது. மேலும் புதன் வக்ர இயக்கத்தில் இருப்பதால் திருமால் வழிபாட்டை மேற்கொள்வதோடு அதற்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்கு சென்று வழிபாடு செய்து வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் எவ்வளவுதான் சிக்கனமாக இருந்தாலும் செலவு நடைகள் கூடுதலாகவே இருக்கும். கைமாற்றாக வாங்கிய தொகையைக்கொடுக்க முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை. கணவன்-மனைவிக்குள் கனிவுகூட விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. குடும்ப உறுப்பினர்களை அனுசரிப்பதன் மூலமே ஆதாயத்தை இம்மாதம்பெறமுடியும். குரு வக்ரம் மட்டும் உங்களுக்கு கூடுதல் நன்மையை வழங்கும் விதத்தில் இருக்கிறது. மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும் சூழ்நிலையை குரு பார்வை அமைத்துக் கொடுக்கும் என்பதால் வியாழன் தோறும் விரதமிருந்து குருவை வழிபட்டு வருவது நல்லது. இடமாற்றம், வீடு மாற்றம் பற்றிய இனிய செய்தி சிலருக்கு வந்து சேரும்.


(தொடரும்)

## இம்மாதம் எதைச் செய்தாலும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வதே நல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு நாடுகளின் தலைவர்களை உளவு பார்க்க வேண்டாம்

## அமெ. உளவு அமைப்புகளுக்கு ஒபாமா உத்தரவு



பலவேறு நாடுகளின் இணையத தளம் மற்றும் தொலைபேசி உரையாடல் பதிவுகளை அமெரிக்க உளவு அமைப்புகள் கண்காணித்து வருகின்றன.

**(அமெரிக்கா) நட்பு நாடுகளின் தலைவர்களை வேவு பார்க்க வேண்டாமென அமெரிக்க உளவு அமைப்புகளுக்கு ஜனாதிபதி பராக் ஒபாமா உத்தரவிட்டுள்ளார்.**

இத்திட்டம் குறித்து கடந்த ஒரு மாத காலமாக பரிசீலனை நடைபெற்று வந்த நிலையில், வோஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா நேற்றுமுன்தினம் கருத்து வெளியிட்டார்.

உலக அளவில் நமது கண்காணிப்பு மற்றும் வேவு பார்க்கும் நடவடிக்கைகள் கவனம் பெற்றன. இதை மனதிற் கொண்டு, தேசியப் பாதுகாப்பு நோக்கம் இல்லாத பட்சத்தில் நமது தோழமை நாடுகளின் தலைவர்களை வேவு பார்க்கக் கூடாது என்று உளவு மற்றும் பாதுகாப்பு அமைப்புகளிடம் தெரிவித்துள்ளேன்.

எனினும், உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நாட்டு அரசுகளின் நோக்கங்கள் பற்றிய தகவல்களை நமது உளவு அமைப்புகள் தொடர்ந்து திரட்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறேன் என்றார்.

முன்னதாக, ஜேர்மனி, பிரான்ஸ், பிரேசில், இந்தியா உள்ளிட்ட நெருங்கிய நட்பு நாடுகளையே அமெரிக்கா கண்காணிப்பதை சி.ஐ.ஏ. முன்னாள் ஊழியர் எட்வர்டு ஸ்னோடென் ஆவணப்பூர்வமாக அம்பலப்படுத்தினார்.

இது சம்பந்தப்பட்ட நாடுகளில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (2)

# செவ்வாய்க்கிரகத்தில் தாவர இனங்களை பயிர் செய்யலாம்

## விஞ்ஞானிகள் தகவல்



(லண்டன்)

செவ்வாய்க்கிரகத்தில் பல்வேறு தாவர இனங்களை பயிர் செய்யலாம்.குறிப்பாக உணவு தானியங்களை பயிர் செய்யலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

டச்சு பல்கலை கழகத்தை சேர்ந்த சுற்றுசூழல் விஞ்ஞானி விஜ்ஜர் வேம்லிங் இத்தகவலை வெளியிட்டுள்ளார். அவர் கூறி இருப்பதாவது,

செவ்வாய் மற்றும் நிலவில் தாவரங்களை வளர்க்க முடியும் என்ற ஆராய்ச்சிக்காக நாசா வழங்கிய செவ்வாய் மற்றும் நிலாவின் செயற்கை மண்ணில் 14 தாவர இனங்களை பயிரிட்டு சோதனை நடைபெற்றது. இந்த சோதனை 50 நாட்கள் நடைபெற்றது.

ஆச்சரியப்படத்தக்க வகையில் சில தானியங்கள் 24 மணி நேரத்தில் வளர்ந்து இருந்தது.சில இனங்கள் பூத்து குலுங்கின. தக்காளி மற்றும் கரட் இனங்கள் வளர்ந்து இருந்தன. சில விதைகள் முளைவிட்டு இருந்தன. மொத்தம் 840 பானைகளில் 4ஆயிரத்து200 விதைகள் பயிரிடப்பட்டன. இது அரிசோனாவில் இருந்து கொண்டுவரப்பட்ட எரிமலை மண்ணிலும் சோதனை நடத்தப்பட்டது என்றார். (2)

# பெண் பொலிஸ் அதிகாரி ஆப்கானில் நியமனம்



ஆப்கானிஸ்தானில் முதன் முறையாக பெண் ஒருவர் பொலிஸ் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கு மிக கடுமையான கட்டுப்பாடுகளை தலிபான்கள் விதித்துள்ளனர்.

இன்றளவும் தலிபான்களின் ஆதிக்கம் அதிகம் இருப்பதால் பெண்கள் சுதந்திரமாக இருப்பதில் சிக்கல் நீடிக்கிறது.

இந்நிலையில் ஆப்கானிஸ்தான் அரசு முதல் முறையாக பெண் ஒருவரை பொலிஸ் உயர் அதிகாரியாக நியமித்துள்ளது.

கர்னல் ஜமீலா பயாஜ்(வயது 50) என்பவர் காபூலில் உள்ள தலைமை பொலிஸ் நிலையத்தில் உயர் அதிகாரியாக பணியமர்த்தப்பட்டுள்ளார்.

இது ஆப்கான் மட்டுமின்றி, உலக நாடுகளையே வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

ஆப்கான் அரசின் இந்த செயல் நாட்டில் பெண் சுதந்திரம் மற்றும் அவர்களின் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் என உலக நாடுகளின் தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (2)



டில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சி தலைவர் சோனியா, துணைத் தலைவர் ராகுல் மற்றும் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோருக்கு ஆளுயர மாலை அணிவிக்கப்பட்டதைப் படத்தில் காணலாம்

# அவுஸ்திரேலிய சிறையில் வாடும் ஈழத்தமிழர்கள் விடுவிக்கப்பட வேண்டும்

## மன்மோகனுக்கு வைகோ கடிதம்



அவுஸ்திரேலியச் சிறையில் வாடும் ஈழத்தமிழர்களை பாதுகாக்க ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அவசரத் தொலைநகல் கடிதம் அனுப்பியுள்ளார்.

வைகோ அனுப்பியுள்ள கடிதத்தல் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு, இலங்கை அரசு நடத்திய இனப்படுகொலைத் தாக்குதலின் போது, மரணபயத்தால் தங்கள் உயிர்களைப் பாதுகாக்க, ஈழத்தமிழர்கள் உலகின் பல நாடுகளுக்கு அடைக்கலம் தேடிச் சென்றனர்.

இப்படிப் பயணித்தபோது படகுகள் கவிழ்ந்து பலர் கடலுள் மூழ்கி மடிந்தனர். இலங்கையில் இருந்து 46 ஈழத்தமிழர்கள், அடைக்கலம் தேடி அவுஸ்திரேலியாவுக்குச் சென்ற போது, அவுஸ்திரேலிய அரசுப் பாதுகாப்பு உளவு நிறுவனம், துளி அளவும் இரக்கம் இன்றி, அடைக்கலம் தேடி வந்த ஈழத் தமிழர்களைச் சிறையில் அடைக்கச் செய்தது.

அனைத்து உலக ஒப்பந்தங்களின்படி, தமிழ் அகதிகளைப் பாதுகாக்க வேண்டிய கடமை அவுஸ்திரேலிய அரசுக்கு உண்டு. அதற்கு மாறாக, கடந்த நான்கு ஆண்டுகளாகச் சிறையில் அடைத்து வைத்து இருப்பதால், அவர்கள் தாங்க முடியாத மனத் துன்பத்திற்கும், அழுத்தத்திற்கும் ஆளாகியுள்ளனர்.

அதனால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஈழத்தமிழ் அகதி தற்கொலை செய்து கொண்டார்.

இலங்கை அரசாங்கத்தைத் திருப்திப்படுத்துவதற்காக, அவுஸ்திரேலிய அரசு, தமிழ் அகதிகளை இலங்கைக்கு அனுப்ப முடிவு செய்து ள்ளது. அப்படி அவர்கள் அனுப்பப் பட்டால், அங்கு சித்திரவதைக்கு உள்ளாகிக் கொல்லப்படுவார்கள்.

எனவே, தற்போது அவுஸ்திரேலியாவில் உள்ள 46 தமிழ் அகதிகளையும் அங்கிருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்ப விடாமல் தடுத்து, அவர்கள் உயிர்களைப் பாதுகாக்க உரிய தேவையான நடவடிக்கைகளை, இந்தியப் பிரதமர், தூதரக உறவுகள் மூலமாக உடனடியாக மேற்கொள்ள வேண்டுகிறேன்.

சிறையில் அடைக்கப்பட்டு உள்ள தமிழ் அகதிகளை விடுதலை செய்து, அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து அவுஸ்திரேலிய அரசு மனிதாபிமானத்தைக் கடைப்பிடிக்கவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (2)

## சிரியா, ஆப்கான் நிலவரம்

# ஒபாமாவும் கமரூனும் தொலைபேசி உரையாடல்

(வோஷிங்டன்)

சிரியா உள்நாட்டுப் போர், ஆப்கானிஸ்தான்-பாகிஸ்தான் பகுதியில் பயங்கரவாதம் ஆகியவை குறித்து பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனுடன் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா விவாதித்துள்ளார்.

இதுகுறித்து வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப் பட்டுள்ளதாவது,

பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனை ஜனாதிபதி ஒபாமா தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டு உரையாடினார்.

ஆப்கா னிஸதானில் அமைதியும், நிலைத்தன்மையும் ஏற்படுத்துவதற்காக கமரூன் எடுத்து வரும் முயற்சிகளுக்கு ஒபாமா ஆதரவு தெரிவித்துள்ளார்.


சிரியாவில் உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் செய்வது குறித்தும், சிரியாவின் ரசாயன ஆயுதங்களை அழிப்பதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர்.

என்.எஸ்.ஏ. அமைப்பில் ஒபாமா சில மாற்றங்களை செய்யவுள்ளார்.

இந்த விவகாரம் குறித்தும் அவர் கமரூனிடம் எடுத்துரைத்தார் என்று வெள்ளை மாளிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கான் பகுதியில் அமைதியை ஏற்படுத்துவதற்காக அந்நாட்டு ஜனாதிபதி ஹமீத் கர்சாய் மற்றும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஆகியோருடன் கமரூன் முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைக் கலசம்

## நீயில்லாத பொழுதுகள்


காற்று இல்லாத பிரபஞ்சம்
மீண்டும் புதுப்பித்து செல்கிறது
இன்னும் நான் மறந்து போகாத
உந்தன் அழகிய நினைவுகளை
காலப் பெருவெளியில்
இழுத்துக் கட்டவும்
தடுத்து நிறுத்தவும் முடியாமல்
தினம் கரைந்து போகிறது
உனக்கான காத்திருப்பின் தருணங்கள்...
உனக்கான காத்திருப்பின்
இடைவெளிகளில் கரைந்து போகும்
தனிமையைக்கூட சில
நேரங்களில் சுகமாகத்தான்
உணர்கிறது இந்த உள்ளம்

**கங்கா. பா**
**வண்ணார்பண்ணை**

## இதயத்தின் இறுதிமடல்

என் அன்பு மகனே!
உனக்கு நான் வரையும்
இறுதிக் காகிதம் இது
பிரித்து எறிந்து விடாதே!
அதைப் பிரித்துப் படிக்கும் முன்னர்
உனக்கு நான்
பாரமென்று என்னை
தூக்கி எறிந்து விட்டாய்!- ஆனால்
ஒரு நொடி யோசித்துப்பார்-நீ
எனக்குப் பாரம் என்று
நான் உனைத் தூக்கி
எறிந்திருந்தால்
உன் பிறப்பின் அர்த்தத்தை
ஒரு நொடி யோசித்துப்பார்
இது உன் மனதைச் சுட்டால்
என் உடலை மட்டும்
வந்துபார்- என்
அன்பு மகனே...!


**கிரு.செந்தூரன்**
**பருத்தித்துறை**



## அறுபதிலும் தேடுகிறேன்

உடல் தந்தாய்
உயிர் தந்தாய்
உயிர் வாழ
உணவு தந்தாய்
அன்பு வழிக்கு
ஆவன சமைத்தாய்
காலமெல்லாம்
எனைக் காக்க
கல்வி தந்தாய்
இன்ப வாழ்வுக்கு
தடைகளைத்தாண்டி
படிக்கல்லானாய்
அனைத்துமிருந்தும்
எதனையும் தேடவில்லை
அறுபதிலும்
என் தாயவளை
தேடுகிறேன்
தினம் தினம்

**சி.கலாமணி**
**மண்டைதீவு**



## இமயம் தொட...

கல்லையும் மண்ணையும்
வேரால் துளைப்பதால்தான்
மரம் நீர் பெறுகின்றது,
நிலை பெறுகின்றது
மரம்தான் நீ!
உன் வேரை
ஆழ ஊன்றி நிலை பெறு
அதன்பின் அகன்று பரப்பிடு
உன் விழுதுகளை

**மாவை.நா. கஜேந்திரன்**

## விடியலை நோக்கி

தெளிந்த நீர்த்தடாகத்தின்
காலைக் கதிரவனொளி பட்டு
குதூகலிக்கும் செந்தாமரையிதழே!
விண்ணிலிருந்து வித்தை காட்டி
மண்ணிலுள்ள மானிடரை
மகிழ்ந்து நெகிழ வைக்கும் வானவில்லே!
மலைத்தொடரிடையில்
அந்தி வானத்தில்
சித்திரையில் சிவந்த பௌர்ணமியே!
கார்மேகம் புடை சூழ்ந்து
பொழிந்த மாரி வெள்ளத்து நீர்க்குமிழே!
கண்ணிமை மூடும் மின்னலே!
வங்கத்து விரிகுடாவில் சங்கமித்து
புல்நுனியில் படர்ந்த
பனித்துளியோடு உரசி
காதோரம் செய்தி சொலுஇளந்தென்றலே
எம் விடுதலையடைந்தீர்களா?
தமிழர் விடிவைக் கண்டீர்களா?

**கொட்டடி கோமகன்**

K-N



## பரதேசி

பளிச்சிடும் பளிங்கற்
கற்களின் பாக்கியம்
புரியட்டும் பாரினில்
வாழும் பரதேசிகளுக்கு
ஊன்றி எழுது
உன் எழுதுகோலால்
உனது தலை எழுத்தை
ஊரறிய உலகறிய
ஓங்கட்டும்

யு.சோபியா
விசுவமடு

## பாசம்

வகுப்பறையிலே மாணவர்களுக்கு
பரீட்சை நடக்கிறது
மாணவர்கள் எல்லோரும்
சித்தியடைகின்றனர்- ஆதலால்
ஆசிரியர் பாசத்தை
சந்தோசத்தை பொழிகிறார்

ஜெ.தர்சிந்தன்
மயிலங்காடு

## நாளைய வாழ்வில்

மாணாக்கர்களே!
அயராது முயற்சியுங்கள்
நேற்றைய வாழ்க்கைதான்
அடிமையாய் முடிந்துவிட்டது
நாளைய உங்கள் வாழ்வானது
ஆட்சியுடன் தொடங்கட்டும்
இவ்வுலகில்

சி.டிலெக்ஷன்
நெல்லியடி ம.க

# மௌனத்தின் தேடல் – 187

## நாளை சிரியுங்கள்

ஒன்றும் அறியாத
என்றுமே அழியாத
தமிழ் வேங்கைகளே!
உங்களின் சுதந்திரம்
உங்களிடம் இல்லையென
அறியாமல் சிரிக்கிறீர்களே!!
அறிந்து சிரியுங்கள்
சுதந்திரத்தை உங்கள்
கையில் வைத்துக்கொண்டு
நாளை...

த.மோகனரூபன்
சுழிபுரம்

## உங்கள் கையில்

இனிவரும் காலம்
உங்கள் கையில் -அதன்
அர்த்தம் புரிகின்றது
உங்கள் புன்னகையில்
புதுயுகம் படைக்கும்
பிள்ளைகளே...!
உங்கள் கல்வியைத்
தொடருங்கள்
எதிர்காலம் உங்கள்
கையில்...!

கிரு.செந்தூரன்
பருத்தித்துறை

## யுகம்

இறந்த கால
நினைவுகளை மறந்து
புதிய கணனி
யுகத்திற்கு
பயணிப்போமா

இரா.ஜெ.துஷ்யந்தி
அளவாடையூர்

## நியதி

சாரீரம் இல்லாமல்
சங்கீதம் இல்லை
நல்ல ஆசிரியர்
இல்லாத வகுப்பறையும்
வகுப்பறை அல்ல
இதுவே வாழ்க்கையின்
நியதி

மு.தர்சிகா
மயிலங்காடு

## தலைவா

நாளைய தலைவனே!
ஏழையின் சிரிப்பில்
இறைவன் தெரிகிறான்
உங்களின் சிரிப்பில்
நாளைய உலகம்
தெரிகின்றது

யாழ் நிலவன்
துன்னாலை

## சிறகொடிந்த பறவைகள்

நாட்டின்
போர்ச் சூழ்நிலையில்
பெற்றோர்
கல்வியை இழந்த
மாணவர்களாகிய
எங்களுக்கு
ஆண்டவன்
வழிகாட்டுவானாக

மாதகலூர்
து.ஜெயாவதி

## ஞாபகம்

குளிப்பறையில் பாடும் பாடலும்
காதலர்கள் பாடும் பாடலும்
ஞாபகம் இருக்கிறது- ஆனால்
வகுப்பறையில் கற்பிக்கும்
பாடங்களோ ஞாபகம்
இருப்பதில்லை

மயிலிட்டியூர்
ம.குணாளினி

## கல்விச் செல்வம்

செல்வத்தில் சிறந்த செல்வம்
கல்விச் செல்வம்
அதை அடையும் நீங்கள்
அதிலும் செல்வம்
இன்று நீங்கள்
சிரிக்கும் செல்வம்
பட்டத்தின் பின்
தெருவில் விட்டுவிடும்
இந்நாட்டு செல்வம்

நா. தளையசிங்கம்
கொக்குவில்

## எதற்காய்

கைகளிலே பாடப்புத்தகம்-ஆனால்
உங்கள் கவனமோ வேறு திசையில்
எதற்காக முகத்திலே இந்த ஆனந்த சிரிப்பு
கலை நிகழ்ச்சி நடக்கின்றதா இல்லை
களியாட்ட நிகழ்ச்சியா?புரியவில்லையே

யோ.காண்டீபன்
மானிப்பாய்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –188



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் வியாசர் பதிலுக்கான கேள்விகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 23.01.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.


-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்டக் காரியாலயத்தின் பொங்கல் விழாவும் கலைவிழாவும் அண்மையில் இடம்பெற்ற போது.... (படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)




கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் முழுநிலா அறிவோர் ஒன்றுகூடல் கரைச்சி பிரதேசசபை வளாகத்தில் இடம்பெற்ற போது கிளி.இலங்கை வங்கி மேலாளர் கு.சிவஞானசுந்தரம் "தமிழ் வளர்ச்சி" எனும் தலைப்பில் உரை யாற்றுவதையும் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்

(படம் :- பூநகரி செய்தியாளர்)




சுன்னாகம் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாமொன்று அண்மையில் நடைபெற்றபோது...

(படம் :- மானிப்பாய் செய்தியாளர்)



பொங்கல் தினத்தை முன்னிட்டு இளவாலை வாலிபர் சங்கத்தினரால் தமிழர் பாரம்பரிய போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் முட்டி உடைத்தல், கமுகு மரம் ஏறுதல் போன்ற விளையாட்டுக்கள் இடம் பெறுவதை படங்களில் காணலாம்

(படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)



## நிகழ்வின் நிழல்கள்



யாழ்ப்பாணத்தில் 5 ஆவது தடவையாக சர்வ தேச வர்த்தகக் கண்காட்சி நேற்று முன் தினம் முதல் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. இதன் ஆரம்ப நாள் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நாடாவெட்டி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதனையும், காட்சிப் படுத்தப்பட்டுள்ள பொருட்களின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம்

(படங்கள் :-எஸ்.ஆர்.கரன்)



வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தின் கால்கோள் விழா பாடசாலை அதிபர் அருட் சகோதரி திரேசம்மா சில்வா தலைமையில் நடைபெற்ற போது.. (படங்கள் :- பூந்தோட்டச் செய்தியாளர்)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகம் கடந்த தமிழ் என்ற தலைப்பில் தமிழறிஞர் மாநாடு

தமிழகத்தில் இயங்கும் தமிழ் கலாசாரத்துக்கான நிலையம் மூன்று நாட்கள் சர்வதேச மாநாட்டை நடத்துகிறது.

நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை வரை இம் மாநாடு நடத்தப்படவுள்ளது. தாயகம் கடந்த தமிழ் என்ற தலைப்பில் குறித்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் உலகளாவிய ரீதியில் செயற்படும் 35 தமிழ் அறிஞர்கள் பங்கேற்கின்றனர் என்று தமிழ் கலாசாரத்துக்கான நிலையத்தின் நிறுவுனர் நல்லா ஜி. பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இம் மாநாட்டில் மலேசியா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் சீனா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்து தமிழ் அறிஞர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இம் மாநாட்டின் போது 7 அமர்வுகள் இடம்பெறவுள்ளன. இதில் சர்வதேச ரீதியாக தமிழ் இலக்கியம், ஊடகம் தொழில்நுட்பம் மற்றும் கல்வி ஆகிய முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளன என்று மாநாட்டு ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

# விசா ஒழுங்குகளை மீறி செயற்படக் கூடாது

## தனது பிரஜைகளுக்கு ஆஸி.எச்சரிக்கை

இலங்கைக்கு செல்லும் அவுஸ்திரேலியர்கள் அந்நாட்டின் விசா ஒழுங்குகளுக்கு அப்பால் செயற்படக்கூடாது என்று அவுஸ்திரேலிய அரசாங்கம் எச்சரித்துள்ளது.

அவ்வாறான நடவடிக்கையின் போது அவுஸ்திரேலியர்கள் நாடு கடத்தப்படும் நிலை ஏற்படும் என்றும் அந்த நாட்டு அரசாங்கம் கூறியுள்ளது. இது தொடர்பில் அவுஸ்திரேலிய அரசாங்கம் உயர் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அத்துடன் அந்த அறிக்கையில் இலங்கையின் பல பகுதிகளிலும் டெங்கு தொற்று ஏற்பட்டுள்ளமையையும் அவுஸ்திரேலிய அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பாதுகாப்பு காரணங்களுக்காக இலங்கை செல்லும் அவுஸ்திரேலியர்கள் தமது பதிவுகளை அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சுடன் பகிர்ந்து கொள்ளுமாறும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அறிக்கை ஒன்றில் கோரப்பட்டுள்ளது. (அ-2)

## துஸ்பிரயோகத்திற்குள்ளான

# நூறு சிறுவர்கள் மாதாந்தம் சிகிச்சை பெறுகின்றனர்

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளுக்கு மாதாந்தம் சிகிச்சைக்காக வருகைதரும் நோயாளர்களில் சுமார் 100 சிறுவர்கள் பல்வேறு பாலியல் இம்சைகளுக்கு உள்ளாகின்றமை அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இவர்களில் அதிகமானோர் 15 வயதுக்கு குறைந்தவர்கள் என்றும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

குறைந்த வயதிலேயே பெண் பிள்ளைகள் கர்ப்பமாகின்றமை தொடர்பிலும் தகவல்கள் கிடைத்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இத்தகைய பெண் பிள்ளைகளின் தாய்மார் பெரும்பாலும் வெளிநாடு சென்றிருப்பதாக விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அமைச்சு கூறியுள்ளது.

எனவே பெற்றோர் தமது பிள்ளைகள் குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமெனவும் சுகாதார அமைச்சு மேலும் வலியுறுத்தியுள்ளது. (அ-2)

# பிரிவுத்துயர் பகிர்வு



திருமதி. மீனாம்பிகை முருகேசு

காரைநகர் அல்வின் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மீனாம்பிகை முருகேசு 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.



திருமதி. பத்மராணி நாகலிங்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மராணி நாகலிங்கம் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியை இன்று பிற்பகல்2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.



திருமதி. சிவகாமியம்மா கந்தசாமி

தொண்டமானாற்றைப் பிறப்பிடமாகவும் , அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகாமியம்மா கந்தசாமி17 ஆம் திகதி வெள்ளிக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22 ஆம் திகதி புதன் கிழமை East Chapel Rookwood Cemetery, Hawthorne Ave, Rookwood NSW 2141, Sydney, Australia என்னும் முகவரியில் நடைபெறும்.



சசிகலா செல்வரெத்தினம்

5ஆம் வட்டாரம், மண்கும்பானைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சசிகலா செல்வரெத்தினம் 15 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியை இன்று காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று சாட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



சின்னத்தம்பி பத்மநாதன் (J.P)

(இளைப்பாறிய பொறியியலாளர், உள்ளூராட்சித் திணைக்களம், போர் நிறுத்த கண்காணிப்புக்குழு முன்னாள் உறுப்பினர்)

மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பத்மநாதன் 15 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று நண்பகல் 12 மணிக்கு சின்னத்தம்பி அவின்யூ, மானிப்பாய் தெற்கு மானிப்பாய் என்னும் முகவரியில் நடைபெறும்.



தம்பையா குணசிங்கம்

புன்னாலைக்கட்டுவன் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா குணசிங்கம் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று புன்னாலைக்கட்டுவன்இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



திருமதி. ஞானபூபதி தெய்வேந்திரம்

உடுவில் தெற்கு புதுமடம் மானிப்பாயை பிறப்பிடமாகவும் இந்தியா திருச்சி சுந்தர் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானபூபதி தெய்வேந்திரம் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியை இன்று பிற்பகல் 3 மணிக்கு காவேரிப்பாளம் ஓயமனரி என்னும் முகவரியில் நடைபெறும்.



திருமதி. இலட்சுமி பொன்னம்பலம்

கேணியடி லேன் கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இலட்சுமி பொன்னம்பலம் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

# இலங்கை இராணுவத்துக்கு பிரிட்டன் பயிற்சி வழங்கியது

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு பிரதேசங்களில் 1980களின்முற்பகுதியில்விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தீவிரமடைந்திருந்த காலத்தில் அவற்றை முறியடிக்கும் முயற்சிகளில் இலங்கை அரசாங்கம் இறங் கியிருந்தது.

அந்த சந்தர்ப்பத்தில் பிரிட்டனிலிருந்து இயங்கிய தனியார் இராணுவ பயிற்சி நிறுவனமொன்று இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி அளிக்க அரசாங்கத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என பாதுகாப்பு ஆய்வாளர் தெரிவித்தார்.

பிரித்தானியா இந்த இராணுவ பயிற்சியை இலங்கை இராணுவத்துக்கு கொடுக்க அனுமதிக்கக் கூடாது என்று அப்போதைய பிரதமர் மார்கிரட் தாட்சரிடம் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி கோரியிருந்ததாகவும் பிரிட்டிஷ் அரச ஆவணத்தின் மூலம் தெரியவந்துள்ளது.

சீக்கியர்களின் பொற்கோவில் உள்ளே நுழைந்து இராணுவத்தினர் தாக்குதல் நடத்துவதற்கு சில மாதங்களுக்கு முன்னதாக இந்திரா காந்தி பிரிட்டனிடம் இலங்கை பற்றி பேசியுள்ளதாகவே பிரிட்டனின் த கார்டியன் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை பனிப்போர் காலத்தில் இந்தியாவுக்கு அழுத்தம் கொடுக்க நினைத்த அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட கூட்டாளி நாடுகள் இலங்கைக்கு இராணுவப் பயிற்சி வழங்க முன்வந்ததாக இந்திய இராணுவத்தின் முன்னாள் அதிகாரியும் இலங்கை பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பான பகுப்பாய்வாளருமான கேர்ணல் ஹரிஹரன் தெரிவித்தார்.

அக்காலப் பகுதியில் இந்தியா சோவியத் ஒன்றியத்தின் கூட்டாளியாகவே அறியப்பட்டது.

பிரிட்டனின் முன்னாள் ஸ்ஹஸ் அதிகாரிகளின் பயிற்சி ... 1987இற்கு முன்னதாகவே இலங்கையில் சிறப்பு அதிரடிப்படை என்ற தாக்குதல் படையணி உருவாக்கப்பட்டதாகவும் கர்ணல் ஹரிஹரன் சுட்டிக்காட்டினார்.

இந்த அதிரடிப்படையினரே இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தின்போது முக்கிய தாக்குதல் அணியாக செயற்பட்டுள்ளதாகவும் ஹரிஹரன் தெரிவித்தார். (ஏ-1)

# இல்லமெய்வல்லுநர் போட்டி

(பொற்பதி)

கேவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் இவ்வாண்டிற்கான இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இப் போட்டிகள் பாடசாலை அதிபர் ந.கேதீஸ்வரா தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்வி அலுவலர் க.பொன்னையா, சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் அதிபர் வதின் மதிராசா, வடமராட்சி பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளர் ஜ.சிறிரங்கேஸ்வரன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9-64)

# பிரதமருக்கு எதிராக வழக்கு ஹெல உறுமய அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக நாட்டின் பிரதமருக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சி பிரதமர் டி.எம். ஜயரட்னவிற்கு எதிராக வழக்குத் தொடரத் தீர்மானித்துள்ளது. பௌத்த பிக்குகளை அவமரியாதை செய்ததாக பிரதமர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் பிரதமருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

போதைப் பொருள் அடங்கிய கொள்கலனை விடுவிப்பதற்கு பிரதமர் அலுவலகம் சுங்கப் பிரிவினருக்கு கடிதம் அனுப்பி வைத்திருந்ததாக ஜாதிக ஹெல உறுமய குற்றம் சுமத்தியுள்ளது.

எனினும், காவியுடை தரித்த சிலர் அநாகரீகமாக செயற்பட்டு வருவதாக பிரதமர் பகிரங்கமாக குற்றம் சுமத்தியிருந்தார்.

இதனால் பௌத்த பிக்குகள் இழிவுபடுத்தப்பட்டதாகவும் இரண்டு வாரங்களுக்குள் பிரதமர் பகிரங்கமாக மன்னிப்பு கோர வேண்டும் எனவும் ஜாதிக ஹெல உறுமய கோரியிருந்தது.

இந்த இரண்டு வார காலம் முடிவடைந்துள்ளதாகவும் இதனால் வழக்குத் தொடரப்படவுள்ளதாகவும் ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிவித்துள்ளது.

பிரதமருக்கு எதிராக வழக்குத் தொடர்வது குறித்து செய்தியாளர் சந்திப்பொன்றில் அறிவிக்கப்படும் என கட்சி குறிப்பிட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

பூநகரி மண், கண்டாவளை மண், சல்லி வகைகள், டஸ்ட் வகைகள், அரிந்த கொன்கிறீட் கல் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 0712890494 (4968)


# இலங்கைக்கு ஆதரவு; பாகிஸ்தான் உறுதி

(கொழும்பு)

சர்வதேச அளவில் இலங்கைக்கு பூரண ஆதரவளிக்கப்படும் என பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் மிகவும் நெருக்கமான உறவு காணப்படுகின்றது.

உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள இரு நாடுகளும் அரசியல் ரீதியாக ஆர்வம் காட்டி வருகின்றன. 2016ஆம் ஆண்டளவில் சீபா உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு தேவையான முனைப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினை சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# ஒழுக்கக் கேடான பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை- பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

ஒழுக்க மீறல்களில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸமா அதிபர் என்.கே. இலங்ககோன் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களை தடுத்து மக்களுக்கு அச்சமின்றி வாழக்கூடிய பின்னணியை உருவாக்க பொலிஸார் அர்ப்பணிப்புடன் செயற் படுவார்கள்.

கடந்த ஆண்டில் சிறந்த முறையில் சேவையாற்றிய 367 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களுடன் 14 பொதுமக்களுக்கும் பணப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதற்காக 74,76,300 ரூபா செலவிடப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இவ்வாறு பொலிஸாரை ஊக்குவிப்பதற்காக ஆயிரத்து 400 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக இவ்வாறு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஊக்குவிக் கப்படுவார்கள் என அவர் தெரிவித் துள்ளார். (அ-2)


## தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை

யாழில் பல காலமாக திறமையாக இயங்கி வந்த மேற்படி வைத் தியசாலை மீண்டும் விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. சேவை மனப் பான்மையுடையவர்கள் பின்வரும் பதவிகளுக்கு சுய விபரத்துடன் விண்ணப்பிக்கலாம். வைத்திய உத்தியோகத்தர்(MBBS/RMO), தாதி உத்தியோகத்தர், மருந்தாளர்

கௌரவ வைத்திய பணிப்பாளர்,
335,பலாலி வீதி, திருநெல்வேலி
யாழ்ப்பாணம். தொ.இல.021 221 9332 (4965)

## பணியாளர் தேவை

வவுனியாவில் உள்ள பிரபல அரிசி ஆலை மற்றும் பலசரக்கு (மொத்த,சில்லறை) கடைக்கு பணியாளர்கள் தேவை.

- அல்லர் பாஸ் (அரிசி)
- பொயிலர் பாஸ்
- கூலி வேலையாட்கள்
- மேற்பார்வையாளர்கள்
- பில் இலிகிதர் (கணனி)
- கணக்காளர்
- விற்பனை பிரதிநிதிகள் தேவை...

தொடர்பு இல: 077-7849207
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி
S.SIVAKUMARAN
NO:150, HORAWAPOTHANA ROAD,
VAVUNIYA. (4867)

## வேலைவாய்ப்பு

இன்றே பதிவுக்கு முந்துங்கள். கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/கோடியல்/சோஸ்/சோயா/நூடில்ஸ்/டயர்/கிளவுஸ்/Pvc/பிளாஸ்டிக்/தேங்காய் பால்மா/கோழி இறைச்சி/ Cargills / (Keels Delivery) பிரிவுக்கு +உற்பத்தி+ லேபல்+ பொதியிடல்+ தரம்பிரித்தல்+ களஞ்சிய பிரிவுக்கு 18-50 ஆண்- பெண் தேவை. கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் உணவு+ தங்குமிட வசதிகள் குறைந்த விலைகளில். சம்பளம் 18000/- 32000/- வருகை தரும் நாளிலே வேலை வாய்ப்பு.

தொடர்பு:- 0778430179 (சி/6168)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532

## தொழில் வாய்ப்பு

மலர்ந்திருக்கும் பிரகாசமான புத்தாண்டில் திறமையுள்ள உங்களுக்கு தொழில் வாய்ப்பு துறைமுகம் (தனியார்) சாதாரண ஊழியர்கள், தச்சு, பெயின்டிங், வெல்டர் மற்றும் விமான நிலையத்தில் (தனியார்) சுத்திகரிப்பாளர்/ கேட்டரீஸ்/ லொன்றி பிரிவுக்கு 18-45 ஆண்- பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் 18000/- 32000/- உணவு தங்குமிடம் குறைந்த விலையில்.

தொடர்பு:- 0774312176 (சி/6170)

## காணி விற்பனைக்கு

பிரதான வீதியில் நெல்லியடி திருமகள் ஒழுங்கையில் (மூன்றாவது காணி) 64' நீளம் 40'அகலம் லின்டர் மட்டத்தில் கட்டப்பட்ட கட்டடம் (4 அறைகள் , 2 களஞ்சிய அறைகள், Toilet-1, குளியல் அறை, குசினி, Hall, கொண்டது) சுற்றிவர மதில், கேற், நல்ல குடிதண்ணீர் கிணறு கொண்ட 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு-பாஸ்கரன், 021 226 2119 (சி/6258)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழகத்தில் 10.01.2014 இல் கல்விமாணி (M.Ed) பட்டம் பெற்ற



எமது பாடசாலையின் முதல்வர் திருவாளர். ந.கந்தவனச்செல்வன் (SLPS II) அவர்களையும்



எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி. ம.சத்தியசீலன் (SLTS 2-II) அவர்களையும்

உளமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு இருவரும் மேலும் பல பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடன் வாழவும் தொடர்ந்தும் அவர்களின் சேவை கல்விச் சமூகத்திற்கு கிடைக்கவும் இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கும்

பாடசாலைச் சமூகம், யா/ கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை (4970)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 1<br>கி.பா: 29 ¼ செவ் 2 இல்<br>உயரம்: 168 cm<br>தகைமை/தொழில்: A/L / மொத்த வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: PR உள்ள பெண்<br>தொ.இ: B/979 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: 48உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டு மணமகன்<br>தொ.இ: G/1376 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 32 செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L / உயர் அரச தொழில்<br>தொ.இ: B/981 | பிறப்பு: 1982 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: 33 ¾ செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L / தனியார் நிறுவன வேலை<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு கூடுதல் விருப்பம்<br>தொ.இ: G/1377 |
| பிறப்பு: 1964 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>கி.பா: 18 ¼<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / கோவில் வேலை, கமம்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் மிக முக்கியம்<br>தொ.இ: B/984 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 63 ¼உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc, Bio Chemistry Special / ஆராய்ச்சி துறை<br>தொ.இ: G/1381 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: 46 சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: அச்சக உரிமையாளர்<br>தொ.இ: B/985 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 19 ½ செவ் 4 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L, BSc Following<br>தொ.இ: G/1388 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
[illegible] காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
([illegible])

கிளிநொச்சியில்

## பணிநிலை வெற்றிடம்

- * நிர்வாக உத்தியோகத்தர் (Administration Officer) (கணினி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது)
- * வரவேற்பாளர் (Receptionist) (சரளமாக உரையாடக் கூடியவர்கள்)
- * கணினி வடிவமைப்பாளர் (Adobe Photoshop / Corel DRAW )
- * கணினி ரைப்பிங் (பெண்கள்)
- * வெளிக்கள உத்தியோகத்தர் (Field Officer)

நேர்முகத்தேர்வு 20.01.2014 (திங்கட்கிழமை)
நேரம் : மு.ப 09.00 மணி - பி.ப. 02.00 மணிவரை

(அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சுயவிபரக்கோவையுடன் சமூகமளிக்கவும்) (சி/6268)

ANDRA PRINTERS 470/ 2, ஏ9, வீதி, கிளிநொச்சி.
0772209527, 0776622981 / 021 7201275


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாக திட்டமிட்டால் முதல் முயற்சியிலேயே பாதித்தூரத்தை நிச்சயம் அடைந்துவிட லாம். – என்.ஹில்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# உள்ளகப்பாதுகாப்பை அலட்சியம் செய்யாதீர்கள்

வடபகுதியில் இருக்கக் கூடிய சிறிய காவலரண்களை அகற்றுவதில் மும்முரமான செயற்பாடுகள் நடந்தவண்ணம் உள்ளன.

தமிழர் பகுதியில் இருக்கக் கூடிய படை முகாம்களை அகற்றவேண்டும் என்ற கோரிக்கைக்கு சந்திகளில் உள்ள சிறிய காவலரண்களை அகற்றி நிலைமையை சமாளிக்கும் முயற்சிகள் நடந்தவண்ணமுள்ளன.

எதுவாயினும் சந்திகளில் இருக்கின்ற காவலரண்களை அகற்றுகின்ற போது, அதற்குப் பதிலீடான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியம்.

உதாரணமாக கண்டிவீதி – செம்மணி வீதி சந்திக்கும் செம்மணிச் சந்தியில் இருந்த இராணுவ காவலரண் அகற்றப்பட்டுள்ளது.

பொதுவில் செம்மணி வீதியால் இரவு நேரத்தில் மேற்கொள்ளும் பயணம் என்பது பாதுகாப்பற்ற அல்லது மனப்பயத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பதென்பது உண்மை.

அதிலும் தற்போது இருக்கக் கூடிய சூழ்நிலையில் ஆட்கள் நடமாட்டமுள்ள இடங்களில், பட்டப்பகல் வேளையில் கூட நடமாடுவதே ஆபத்தானதாக இருக்கின்றது.

கௌரவமான தோற்றத்தில், மோட்டார் சைக்கிள்களில் வந்து பெண்களின் கழுத்தில் கிடப்பதை அறுத்துக்கொண்டு செல்கின்ற கலாசாரம் இங்கு சர்வசாதாரணமாகிவிட்டது.

நிலைமை இதுவாக இருக்கையில் செம்மணி வீதியால் இரவுப் பயணத்தை மேற்கொள்வதென்பது பயங்கரமானது. இது போன்ற சனம் நடமாட்டமற்ற வீதிப் பயணங்கள் தாராளமாக இங்குள்ளன.

எனவே இராணுவ முகாம் அகற்றப்பட்ட செம்மணிச்சந்தியில் பொலிஸ்காவலரண் அமைப்பது குறித்துச் சிந்திக்க வேண்டும்.

இது போன்று எங்கெங்கு வெளியிடங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் உப பொலிஸ் நிலையங்களை அமைப்பதும் அங்கு தமிழ்ப் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்படுவதும் அவசியமாகும்.

இது தொடர்பில் வடக்குமாகாண அரசுக்கும் வடபகுதியில் இருக்கக் கூடிய பொலிஸ் தலைமைக்கும் இடையில் புரிந்துணர்வும் காலத்துக்குக்காலம் சந்தித்துக் கலந்துரையாடும் ஏற்பாடுகளும் செய்யப்படவேண்டும்.

ஏனெனில் வடபகுதியில் மக்கள் நடமாட முடியாதளவில், சட்டம் ஒழுங்கு சீர்குலையும் ஆபத்துள்ளது.

இந்த ஆபத்து திட்டமிடப்பட்டதாக அல்லது கட்டுப்பாட்டின் பிடியிலிருந்து விடுபட்டு ஆரோக்கியமான வழிகாட்டல் கிடைக்கப்பெறாத இளம் சமூகத்தின் நெறிகெட்ட சூழமைவால் ஏற்படவாய்ப்புண்டு.

எனவே தமிழ் மக்களின் உரிமை என்று ஒரு பக்கத்தில் கவனம் கொள்ளும் அதேநேரம் அதன் மறுபக்கத்தில் வடபகுதியில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டி களவு, கொள்ளை, அட்டுழியம், அடாவடித்தனம், போதைப் பாவனை போன்ற நாசகாரங்களை வேரறுக்க வேண்டும்.

இது தொடர்பில் கவனம் செலுத்தாமல் தனித்து உரிமையென்ற கோசத்தோடு மட்டும் நின்றால், உரிமை கிடைக்கும்போது பல்வேறு குழப்பங்களை உடைய ஒரு சமூகச் சூழ்நிலை எங்கள் மண்ணில் தாண்டவமாடும். ஆகையால் வடக்கு மாகாண அரசு உள்ளகப் பாதுகாப்புப்பற்றி அதீத கவனம் செலுத்த வேண்டும்.

# பொதுமக்களை இலக்கு வைத்து படையினர் தாக்கவில்லை

## அடித்துக்கூறுகிறார் அமைச்சர் சமரசிங்க

எதிர்வரும் ஜெனீவா மனிதவுரிமை தொடர்பான மாநாட்டில் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சகல சவால்களையும் எதிர்கொள்ள அரசாங்கம் தயாராகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் பாதுகாப்பு படையினரை பாதுகாக்கும் நடவடிக்கைகளில அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக மனிதவுரிமைகள் துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

எமது பாதுகாப்பு படையினர் பொது மக்களை இலக்குவைத்து எந்ததருணத்திலும் தாக்குதல்களை மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்த அவர், பயங்கரவாதிகளுக்கு எதிராகவே தாக்குதல்களை மேற கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

சிலர் கூறுவது போன்று, 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுவது முற்றிலும் பொய்யான செயலாகும் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படும் குடிசன மதிப்பீடு குறித்த விபரங்கள் ஜெனீவா மாநாட்டின் போது சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டார்.


இதனிடையே, வடக்கு கிழக்கு உட்பட இலங்கையின் சகல பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்படும் உரிய முறையிலான விபர சேகரிப்பு மூலம் மரணித்தவர்கள போன்ற விபரங்களை அறிய முடியும்.

இந்த விபரங்களுடனேயே ஜெனீவாவிற்கு எதிர்வரும் மார்ச் மாதம் செல்லவுள்ளதாகவும் தெரிவித்தார்

இதேவேளை, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஷேனுக செனவிரட்ன தமது பணியினை உத்தியோக பூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளார். முதலாவது பெண செயலாளராக இவர் இந்த பதவியை ஏற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுதவிர, ஜெனீவாவின் நிரந்தர பிரதிநிதியாக இருந்த பேராசிரியர் ஜயதிலகக ஓய்வு பெற்ற நிலையில் ஷேனுகா செனவிரட்ன அந்த பதவியையும் ஏற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



## பட்டது பட்டேற்றும்

துட்டச் சமணர்கள்தம்
துடுக்கை யடக்கினவன்– தங்கம்
மட்டில்லாத் தெய்வமடி

நன்மையுந் தீமையும்
நாமல்ல வென்று கண்டால்– தங்கம்
மயக்க மொழியுமெடி

# தலைமைத்துவ பயிற்சி இன்று ஆரம்பம்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சியின் மூன்றாம்கட்டம் இன்று ஆரம்பமாகியுள்ளதாக உயர்கல்வி அமைச்சு குறிபபிட்டுள்ளது.

நாடு முழுவதும் அமைந்துள்ள 21 நிலையங்களில் தலைமைத்துவ பயிற்சிகள் நடைபெறவுள்ளதாக அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

பயிற்சிகளில் கலந்துகொண்டபின்னர் மாணவர்கள் பல்கலைக் கழகங்களில் தங்களை பதிவுசெய்து கொள்ள முடியும் என்றும் உயர்கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (அ-2)

# புனித திருமுழுக்கு யோவானின் எடுத்துக்காட்டை பின்பற்றுவோம்

இன்று நமக்குத்தரப்படும் வேதாகமப் பகுதியில்வரும் இந்த திருமுழுக்கு யோவானை நோக்கினால் அவர் ஒரு புனிதர். இவரது பிறப்பை ஜூன்மாதம் 24 ஆம் திகதியும், அவரின் மறைசாட்சிய மரணத்தை ஒகஸ்ட் மாதம் 29ஆம் திகதியும் சிறப்பிக்கின்றோம்.

கத்தோலிக்க திருச்சபையின் உரோமன் நாட்காட்டியில், ஒருவரின் பிறப்பும் இறப்பும் சிறப்பிக்கப்படுவது இப்புனிதருக்கு மட்டுமே. பைபிளில் லூக்கா எழுதியபகுதியில், திருமுழுக்கு யோவானின் பிறப்பு, அவர் மேற்கொண்ட பாலைவனவாழ்வு, அவரது போதனை ஆகியவைகளையும், மாற்கு எழுதியபகுதியில், அவரின் மரணம் குறிக்கும் பகுதியையும் வாசிக்கின்றோம்.

அன்று திபேரியு சீசர் ஆட்சி செய்து

## பரமபிதா காட்டிய பாதை

வந்த காலத்தில் மக்களை நோக்கி, மனம திரும்ப அழைப்பு விடுத்து போதித்த திருமுழுக்கு யோவான், அதோடு நிறுத்தி விடவில்லை. "இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர்" என இயேசுவைக் குறித்து சாட்சியம் பகர்கிறார். இறுதியாக, இறைவனுக்கு விசுவாசமாக இருப்பதற்கு, தன் இரத்தம் சிந்துதல் மூலம் சாட்சியம் வழங்கினார். உண்மை மீதான அன்பின் சாட்சியமாக இது இருக்கிறது.

திருமுழுக்கு யோவான் இயேசுவை எதற்காக ஆட்டுக்குட்டியோடு ஒப்பிட வேண்டும்? கால்நடைகள் மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த அக்கால மக்கள் நடுவே "ஆட்டுக்குட்டி" என்பதற்கு "அன்பார்ந்த குழந்தை" என்று ஒரு பொருளும் உண்டு. நம் "செல்லப் பிள்ளை" என்பது இதைப் போன்றதுதான்.

இயேசு உண்மையிலேயே கடவுளின் அன்பார்ந்த மகன் என்பது இதனால் [illegible] யூதர்கள் நடுவே [illegible] பயன்பட்ட சிறந்த பலிப்பொருள் என்று "ஆட்டுக்குட்டிக்கு" இன்னொரு சிறப்புப் பொருளும் உண்டு. இயேசு இப்பெயரால் அழைக்கப்படுவது அவர் தம்மையே கடவுளுக்குப் பலியாக ஒப்புக்கொடுப்பார் என்பதைக் குறிக்கிறது.

எனவே ஆட்டுக்குட்டியைப் பற்றி பழைய ஏற்பாட்டின் பார்வை நமக்கு தெரிய வேண்டும். ஆட்டுக்குட்டி என்பது இஸ்ரயேல் மக்களின் வாழ்க்கையில் பாவம் போக்கும் பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்ட விலங்கு. இஸ்ரயேல் மக்களுடைய பாவம் போக்கும் பலியாக அன்றாடம் இது பலியிடப்பட்டது. அதே போல் "வெட்டுவதற்குக் கொண்டு செல்லப்பட்ட சாந்தமான செம்மறிபோல் இருந்தேன்." "அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட ஆட்டுக்குட்டி போலும் அவர் தம் வாயைத்திறவாதிருந்தார்."என்று இறைவாக்கினர்கள் எரேமியாவும் எசாயாவும் மெசியாவை (இயேசுவை) ஆட்டுக்குட்டியோடு ஒப்பிட்டு இயேசுபிறப்பதற்கு பலவருடங்களுக்கு முன்பே இறைவாக்கு உரைத்ததை நாம் வேதாகமப் பகுதியில் படிக்கிறோம்.

இந்த திருமுழுக்கு யோவானின் தந்தை செக்கரியா,கடவுளின் திருமுன் குருததுவப்பணி செய்துவந்தவர். எனவே, தந்தையூடாக இறைவார்த்தையை திருமுழுக்குயோவான் நன்கு அறிந்து வைத்திருந்தார் என்பதில் சந்தேகமில்லை. அந்த இறைவார்த்தை சொல்லும் ஆட்டுக குட்டி இயேசுதான் என்று அன்று அறிந்து கொள்கிறார். அந்த நம்பிக்கையை இன்று வெளிப்படுத்துகிறார். திருமுழுக்கு யோவானுக்கு இயேசுவை அறிமுகம் செய்யும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

அவர் இயேசுவை இவர் ஒரு பலிகடா. அப்பாவி. எதார்த்தவாதி. பிறருக்காக எதையும் இழப்பதற்கு தயாராக இருப்பார். அடுத்தவன் வாழவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். தன் நேரம், [illegible], உழைப்பு அனைத்தையும் பொதுப் பணிக்கென செலவிடுவார். இது போனற அனைத்தையும் உள்ளடக்கி, அவர ஒரு ஆட்டுக்குட்டி என்று ஒரே வார்த்தையல் சொல்லி முடித்து விட்டார்.



இயேசுயார்என்பதை மக்களுக்கு அறிவிக்கும் விதத்தில் சான்று பகர்ந்த வர்கள பலர் இருந்தனர். அவ்வாறு சான்று பகர்ந்தவர்களில் மிகச் சிறந்தவர் திருமுழுக்கு யோவான் என்றால் மிகையாகாது.

இந்த திருமுழுக்கு யோவான், செபத்தின் மனிதர் மட்டுமல்ல, இறைவனுடனா நாம் கொள்ளும் உறவுக்கு வழி காட்டியாகவும் விளங்குகிறார்.

இயேசு செபிக்கக் கற்றுக்கொடுக்கும் முன்னர், அவருடைய சீடர்களுள் ஒருவர் "ஆண்டவரே, யோவான் தன் சீடரு க்கு இறைவனிடம் வேண்டக் கற்றுக்கொடுததது போல் எங்களுக்கும் கற்றுக் கொடும்' என இயேசுவை நோக்கி

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

வேணடியதை வேதாகமப் பகுதியில் படிக்கின்றோம்.

செபம் என்பது நேரத்தை வீணடிப்பது அல்ல, அதற்கு நேர்எதிரானது. ஏனெனில், செபத்தின் வழியாகவே நாம், அன்பான, அமைதியான ஒரு வாழ்வைப் பெறுவதற்கும், துன்பங்களை மேற்கொள்வதற்கும், துணிவுடன் சாட்சியம் பகர்வதற்கும் தேவையான பலத்தை இறைவனிடமிருந்து பெறுகிறோம்.

"எனக்குப் பின்வரும் இவர் என்னை விட முன்னிடம் பெற்றவர்" என்று இயேசுவை சான்று பகர்ந்தார். நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் இயேசு நுழைந்து, அதன்வழி அவரைக் குறித்து இவ்வுலகிற்கு நாம் பறைசாற்ற உதவும் பொருட்டு புனித திருமுழுக்கு யோவானின் எடுத்துக் காட் டைப் பின்பற்றுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளந்தென்றல் வி.கழகத்தின் கிரிக்கெட், கரப்பந்து; கலைமகள், புதிய பாரதி அணிகள் சம்பியன்





இளந்தென்றல் விளையாட்டுக் கழகம் தைப் பொங்கல் திருநாளை முன்னிட்டு நடத்தப்பட்ட மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி மற்றும் கரப்பந்தாட்ட போட்டியும் கடந்த 13ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரையுமான மூன்று நாட்கள் அம்பாள் குளம் இளந் தென்றல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 19 கிரிக்கெட் அணிகளும் 10 கரப்பந்தாட்ட அணிகளும் இப் போட்டியில் பங்குபற்றின. மென்பந்து கிரிக்கெட் இறுதிப் போட்டியில் உதயசூரியன் அணியை எதிர்த்து களமிறங்கிய கலைமகள் விளையாட்டுக் கழக அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. இதில் முதலில் களம் இறங்கிய உதயசூரியன் அணி 8.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 54 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. அவ்வணி சார்பாக அதிகூடிய ஓட்டங்களை தங்கராசா (35 ஓட்டங்கள்) பெற்றார்.


பந்துவீச்சில் கலைமகள் அணி சார்பாக சுரேந்திரன் 15 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கலைமகள் அணி 55 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. அவ்வணி சார்பாக சசி 15 ஓட்டங்களையும் பிரசாத் ஆட்டம் இழக்காமல் 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக சுரேந்திரனும் தொடர் ஆட்டநாயகனாக தங்கராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

கரப்பந்தாட்ட போட்டியில் இறுதிப் போட்டிக்கு இளந்தென்றல் அணியும் புதிய பாரதி அணியும் மோதின. இதில் 1:3 ஆட்டக்கணக்கில் புதிய பாரதி அணி வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது. (கு)

# வயாவிளான் ம.ம.வித்தியின் மரதன், சைக்கிள் ஓட்ட முடிவுகள்



யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் 2014ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுபோட்டியின் முன்னோடி நிகழ்வான மரதன். சைக்கிள் ஓட்டப்போட்டிகள் கடந்த புதன்கிழமை பலாலி வீதியில் இடம்பெற்றது.

மரதன். சைக்கிள் ஓட்டம் காலை 6 மணியளவில் நடைபெற்றது. அதில் வெற்றி பெற்ற முதல் 10 மாணவர் விபரம் வருமாறு;

21 வயதின் கீழ் ஆண்கள் மரதன

1. க.விதுஷன் 2. க.கரன் 3.த.லினோஜன் 4. சி.லக்ஷ்யன் 5.ம.பிருந்தன் 6. சி.வானுயன் 7.ப.மோசைதேவபிரியன் 8.க.உஷாந 9. ம.வனிஸ்ரன் 10. இ.தனுஷன்.

21 வயதின் கீழ் பெண்கள் மரதன

1. செ.தக்ஷாயினி 2. தெ.லக்சனா 3. உ.சிந்துயா 4. கு.பர்மிளா 5. ர.சரண்யா 6.ஜெ.கிருஷ்ணவேணி 7.இ.குயிலினி 8. சா.சிந்துஜா 9. ச.சங்கவி 10.லா.விந்தியா.

இளையோருக்கான மரதன் ஓட்டம் (ஆண்கள்)

1. உ.கரிஷ் 2. செ.கபிசனன் 3.ர.லக்சன் 4.ச.பிரதீபன் 5. பூ.நேசபாலகன் 6. க.கஜலக்ஷன் 7. க.வவுரதன் 8.க.பிரதீப் 9.இ.அடம்ஸ் 10.ஜெ.ஜெலக்ஷன்.

சைக்கிளோட்டம் (பெண்கள்)

1. பா.ஜென்சிகா 2. உ.சுபத்திரா 3.கு.தீபாயினி 4. செ.வித்தகி 5.அ.தனஜா 6. தி.லாவண்யா 7.க.டக்சிகா 8. தே.மதுசாந்தினி 9. பா.மதுசியா 10.கு.பரிமளா.


(க-23)

# தேசிய ரீதியான உதைபந்து; சென்.பற்றிக்ஸ் சம்பியன்

அகில இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான 18 வயதுப் பிரிவுக்குரிய உதைபந்தாட்டப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி பிரிவு III இல் சம்பியன் கிண்ணத்தை வென்றது. கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் நடைபெற்ற மாவட்ட மட்ட லீக் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை தோற்கடித்து இறுதிச் சுற்றுப் போட்டிக்கு தெரிவாகியது.



இவ் வருடம் ஜனவரி மாதம் 11,12,13 ஆம் திகதிகளில் அநுராதபுரத்தில் நடைபெற்ற இறுதிச் சுற்றில் முதல் ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, வத்தளை சென்.அன்ரனீஸ் கல்லூரியை 3:1 என்ற கோல் கணக்கில் வென்று இரண்டாவது போட்டியில் களுத்துறை மகா வித்தியாலயத்தை 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.



காலிறுதிப் போட்டியில் பிற்றிபன சென்.மேரிஸ் கல்லூரியை 3:0 என்ற கோல் கணக்கிலும் வென்று அரையிறுதியில் ராஜகிரிய ஜனாதிபதி கல்லூரியை 2:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்றது.

இறுதிப் போட்டியில் திருகோணமலை சென்.ஜோசப் கல்லூரியை 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சென்.பற்றிக்ஸ் கல்லூரி சம்பியன் கிண்ணத்தை பெற்றுக் கொண்டது.


இப்போட்டியில் சிறந்த கோல் காப்பாளருக்கான விருதையும், ஆட்டநாயகன் விருதையும், சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த யேசுதாசன் ஜெயபிரகாஸ், அன்ரனிதாஸ் அன்ரனி ஜெனற் ஆகியோர் முறையே பெற்றுக் கொண்டனர்.

இவ் அணியை வேதநாயகம் பயிற்றுனராகவும் ஆசிரியர் பி.பெஞ்சலோ பொறுப்பாசிரியராகவும் வழிநடத்தினர்.

(கு)

# உலக கிண்ண அணி அறிவிப்பு; ஷேவாக், கம்பீர் நீக்கம்

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



உலக கிண்ணத் தொடருக்கான இருபது- 20 போட்டியின் இந்திய உத்தேச அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.சி.சி. சார்பில் உலக கிண்ண இருபது- 20 தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் 16ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி வரை வங்கதேசத்தில் நடைபெற உள்ளது.

இதற்கான 30 வீரர்கள் கொண்ட உத்தேச இந்திய அணி நேற்று முன் தினம் அறிவிக்கப்பட்டது.


வழக்கம் போல் மூத்த வீரர்களான ஷேவாக். கம்பீர் இருவரும் சேர்க்கப் படவில்லை.

டில்லி அணியின் சகலதுறை ஆட்டககாரர் ரஜத் பாட்யாவுக்கு வாய்ப்பு தரப்பட்டுள்ளது. அவர் இதுவரை 104 இருபது- 20 போட்டிகளில் விளையாடி 859 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

அடுத்து கேரளாவைச் சேர்ந்த சஞ்சு சாமசனுக்கு இடம் கிடைத்துள்ளது.இவர் ஐ.பி. எல்.லில் ராஜஸ்தான் அணிக்காக சிறப்பாக விளையாடியவர். ஆசிய கிண்ணத்தின் இறுதி போட்டியில்(19 வயது) சதம் கடந்து அணியின் வெற்றிக்கு கைகொடுத்தவருமாவார்.

அடுத்து இளம் இந்திய அணியின் அணித தலைவரான உன்முக்த் சந்த்தும் ஐதராபாத் வீரர் கரண் சர்மாவும் சேர்க்கப்பட்டனர்.

(க)



உத்தேச அணி விபரம்:
டோனி, ஷிகர் தவான், ரோகித் சர்மா, கோலி, ரெய்னா, ரகானே, ராயுடு, தினேஷ் கார்த்திக், ஜடேஜா, அஷ்வின், புவனேஷ்வர் குமார், முகமட் ஷமி, இஷாந்த், வினய் குமார், ஸ்டுவர்ட் பின்னி, மோகித் சர்மா, கேதர் ஜாதவ், யுவராஜ் சிங், அமித் மிஸ்ரா, ரஜத் பாட்யா, சஞ்சு சாம்சன், ஈஷ்வர் பாண்டே, உமேஷ் யாதவ், உன்முக்த் சந்த், மன்டீப் சிங், ஹர்பஜன் சிங், வருண் ஆரோன், நதீம், பார்த்திவ் படேல், கரண் சர்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ முற்றுகைக்கு பின்...

கடந்த 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை வடக்கில் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணை கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் ஸ்கந்தபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆரம்பமானது.

காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கபபட்ட ஆணைக்குழுவின்தலைவர் மக்வெல் பராக்ரம பரனஹம ஆணைக் குழுவின் ஆணையாளர்களான சுரண்யனா வித்யவத்னே, மனோராமநாதன் ஆகியோர் முன்னிலையில் இந்த விசாரணை ஆரம்பமானது.

இதன்போதே காணாமல் போனவர்களின் உறவினர்கள் மேற்கண்டவாறு ஆணைக்குழுவிடம் முறையிட்டனர்.

### விசாரணை ஆரம்பம்

யுத்தகாலத்தில் வடக்கில் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணை நேற்றுக்காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகி மாலை 6 மணி வரை இடம்பெற்றது.

விசாரணைக்கு வருமாறு ஆணைக்குழுவினால் அழைப்பு விடுக்கப்பட்ட 35 பேரிடம் நேற்று முதற்கட்டமாக 27 பேரிடம் மட்டுமே வசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இதில் கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட ஸ்கந்தபுரம், அக்கராயன் குளம், கண்ணகைபுரம்ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்டவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

### புலிகள் மீது புகார்

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இந்த விசாரணைக்குழுவிற்கு சாட்சியமளித்தவர்களில் அதிகளவானோரில் குறிப்பிட்டசிலர் தமிழ்ழ விடுதலைப்புலிகள் தமது உறவினர்களைவீட்டில் வந்து தமது அமைப்பில் இணைத்துக்கொண்டதாகவும் இதில் சிலர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவித்தனர்.

### உறவுகளை மீட்டுத்தாருங்கள

அரசாங்கத்தின் உதவிகள் நட்டஈடுகள் எதுவும் எமக்குத்தேவையில்லை. காணாமல்போன உறவினர்களை மீட்டுத்தந்தாலே போதும். கடந்த ஐந்து வருடங்களாக எமது உறவினர்களைத்தேடி அலைகின்றோம். காலத்திற்கு காலம் ஒவ்வொரு விசாரணைக்குழுக்களை அமைத்து கொண்டிருக்கும் இந்த அரசாங்கம் எப்போது எமது உறவுகளை மீட்டத்தரப்போகின்றது என ஆதங்கத்துடன் கேள்வி எழுப்பினர்.

### மாற்றம்

காணாமல்போன உறவினர்களைத்தான் நாம் தேடுகின்றோம். நாம் ஒன்றும் குற்றவாளிகளல்ல எம்மிடம் விசாரணை செய்வதற்கு. விசாரணை என்ற சொற்பதத்தை மாற்ற வேண்டும் என்ற உறவினர்களின் கோரிக்கையை ஏற்ற ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை என்ற சொல்லுக்கு பதிலாக விசாரித்தல் அல்லது பரிசீலனை செய்தல் என மாற்றம் செய்தனர்.

### உயிரோடுதான் உள்ளனர்

காணாமல் போன உங்கள் உறவனர்கள் உயிரோடுதான் உள்ளனர் என்று நீங்கள் நம்புகின்றீர்களா என ஆணைக்குழுவின் தலைவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த உறவினர்கள் ஆம் எமது பிள்ளைகள் (உறவினர்கள்) உயிரோடுதான் உள்ளனர்.100 நூறுவீதம் எமக்கு நம்பிக்கையுள்ளது. எமது உறவினர்கள் உயிரோடுதான் உள்ளனர்' எனத் தெரிவித்தனர்.

### 18 வயதுக்குட்பட்டவர்கள்

காணாமல்போனவர்கள் தொடர்பாக இடம்பெற்ற இந்த விசாரணைக்கு சமுகமளித்தவர்கள் பலரில தமது பிள்ளைகள் காணாமல் போனதாகவும் அதிலும் குறிப்பாக 18 வயதற்குட்பட்ட (பெண்பிள்ளைகள் உட்பட) பிள்ளைகளே அதிகம் காணாமல் போனதாகவும் உறவினர்களினால ஆணைக்குழுவிடம் முறையிடப்பட்டது.

### இராணுவ பொக்ஸ்

இறுதிக்கட்டப் போரில் இராணுவம் பொக்ஸ் அடித்து பிடித்த பின்பே தமது உறவினர்கள் காணாமல் போனார்கள் எனவும் தமது உறவினர்களை 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுதத்தின் போதும் அவர்களைக் கண்டதாகவும் இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்பே அவரகள் காணாமல்போனதாகவும் ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்தனர். அத்தோடு இராணுவத்தினர் பிடிக்கும் வரை அவர்களைப் பலர் கண்டுமுள்ளனர். எனவே எமது பிள்ளைகள் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டபின்புதான் காணாமல் போயுள்ளனர் எனக்கூறவேண்டியுள்ளது.

### இராணுவம் தான்

இராணுவக் கட்டுப்பாட்டு பிரிவிற்குள் எனது கணவன் காணாமல் போனதால் இராணுவம் தான் அவரைக்கடத்தியிருக்கலாம் என்று சந்தேகப்படுகின்றேன் என குடும்பப் பெண் ஆணைக்குழுவிடம் தெரிவித்தார்.

### உடல்களை கொடுத்தனரா?

இறுதியுத்தத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களை தமிழீழ விடுதலைப்புலிகள் அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைத்தனரா என காணாமல் போனவர்களின் உறவினர்களிடம் ஆணைக்குழுவினர் கேள்வி எழுப்பியபோது தம்மிடம் கிடைத்த உடல்களை புலிகள் அவர்களின் உறவினர்களிடம் கொடுத்தனர் என உறவினர்கள் பதிலளித்தனர்.

### வருமானத்திற்கு என்ன செய்கிறீர்கள்.

காணாமல் போனோரின் உறவினர்கள் பலர் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பத்தினர். அவர்களுடைய வருமானம் குடும்பத்தலைவர்கள் இல்லாததால் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

இதனைவிட யுத்தத்தின் போது கணவனையும் பிள்ளை களையும் இழந்த நிலையில் (காணாமல் போயுள்ளனர்) பல குடும்பங்கள் உள்ளன.

எனவே நேற்றை விசாரணைக்கு வருகை தந்த காணாமல் போனோரின் உறவினர்களிடம் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவினர் குடும்ப வருமானத்திற்கு என்ன செய்கிறீர்கள் என்ன கேள்வியினை பிரதானமாக எழுப்பியிருந்ததோடு வருமானத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தனர்.

### யாரையும் பாதுகாப்பது நோக்கமல்ல

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு என்பதற்கு அப்பால் சுதந்திரமாகவும நம்பிக்கைக்கு உரியதாகவும் இந்த ஆணைக் குழுவின் விசாரணைகள் இடம்பெறும். யாரையும் பாதுகாப்பது எமது நோக்கமல்ல? குற்றம் செய்தவர்களை சட்டத்தின் முன்நிறுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதோடு மட்டும் நின்றுவிடாது பொறுப்புக்கூறலையும் வலியுறுத்தும்.

### 2009 அதிகம்

நேற்று இடம்பெற்ற இந்த விசாரணையின் போது சமுகமளித்தவர்களில் பலர் தமது உறவினர்கள் கடந்த 2009 ஆம் ஆண்டு தான் காணாமல்போனார்கள் என்று ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்தனர்.

### சம்பிரதாயமல்ல

இந்தவிசாரணை என்பது வெறும் சம்பிரதாய அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதல்ல. யுத்த காலத்தில் காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு அவர்கள் தொடர்பில் பொறுப்புக் கூறும் நோக்குடன் உருவாக்கப்பட்ட ஆணைக் குழு. இதன விசாரணைகள் நம் பகத்தன்மை வாய்ந்தவை. எனவே காணாமல் போனோரின் உறவினர்கள் தயக்கமின்றி சாட்சியமளிக்களாம்.

காணாமல் போனோர் தொடர்பில் விரக்தியடைந்த உறவுகளுக்கு தீர்வினை பெற்றுக்கொடுக்கக் கூடியதாக இவ் விசாரணை அமையும் என ஆணைக்குழுவினர் தெரிவித்தனர்.

### 12 வயது சிறுமி

இறுதியுத்தத்தின்போது முள்ளிவாய்க்கால் பகுதியில் குடும்பத்துடன் படுகாயமடைந்தபோது இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டதாகவும் ஆனால் 12 வயதான தனது மகளை இதுவரை காணவில்லையெனவும் மகளை தான் தேடாத இடம் இல்லையெ னவும் இராணுவத்தினரால்தான் காயப்பட்டவர்கள் அனைவரும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் மாற்றுவலுவுடைய குடும்பப் பெண் ஒருவர் கண்ணீர்மல்க ஆணை குழுவிடம் சாட்சியமளித்தார்.

### எமக்கும் ஆபத்து

காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டால் எமக்கும் ஆபத்து தான் என சிரித்தபடி கூறினார் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குவின் தலைவர்.

ஆனால் என்ன அர்த்தத்தில் அவ்வாறு அவர் கூறினார் என்பது வளங்கப்படுத்தப்படவில்லை எனபது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற விசாரணையின் போது காணா மல்போனவர்களின் உறவினர்கள் கண்ணீர்மல்க தமது உறவினர்களை மீட்டுத்தருமாறு கோரிக்கைவிடுத்ததோடு நாம் உங்களிடம் கொடுப்பது படிவங்கள் அல்ல உறவினர்களின் உயிர்கள் அவர்களை எப்படியாவது மீட்டுத்தாருங்கள் என உருக்கமாகக்கேட்டுக் கொண்டனர். (செ-6)

# இலங்கை..

மைப் பேரவை அமர்வுகள் நடைபெறவுள்ள நிலையில் இலங்கை விவகாரம் குறித்து சர்வதேச நாடுகளுடன் அடிக்கடி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நம்பகமானதும், சுயாதீனமானதுமான விசாரணைகள் நடத்தப்படும் வரையில் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருவதாக கடந்த நவம்பர மாதம் 18-ம் திகதி பிரதமர் டேவிட் கமரூன் பாராளுமன்றில் குறிப்பிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மார்ச் மாதத்திற்கு முன்னதாக சுயாதீன விசாரணைகள் உள்ளக ரீதியில் நடத்தப்படாவிட்டால், இலங்கை மீதான சர்வதேச விசாரணைகளுக்கு மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் அழுத்தம் கொடுக்க நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

# வடக்கிலிருந்து இராணுவம்...

எதிரான யோசனையை திரும்ப பெறுவதற்காக இலங்கையின் தேசிய பாதுகாப்பை காட்டிக்கொடுக்க போவதில்லை என அமெரிக்காவுக்கு பதிலளித்துள்ளதாக அரசாங்கத்தின் உயர்மட்ட தரப்பின் தகவல்கள் தெரிவித்தன.

அமெரிக்காவின் இந்த கோரிக்கைககளுக்கு இணங்கினால் மீண்டும் பிரிவினைவாதத்திற்கு வழி திறக்கப்படும் என அரசாங்கம், அமெரிக்காவிடம் கூறியுள்ளது.

13-வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குதல், வடக்கில் இராணுவம் கைப்பற்றியுள்ள நிலங்களை விடுவித்தல், போர் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகளுக்கு எதிரான சுயாதீன விசாரணை நடத்துதல், அரசசார்பற்ற நிறுவனாங்கள் எவ்விதமான தடைகளும் இன்றி நாட்டில் செயற்பட அனுமதித்தல், கைது செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிச் சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தல் அல்லது மன்னிப்பு வழாங்கி விடுதலை செய்தல் போன்ற விடயங்களை நிறைவேற்ற வேண்டும் என அமெரிக்கா, இலங்கை அரசிடம் தொடர்ச்சியாக கோரிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# புலிகள் வெற்றி பெற்றி...

தெரிவிக்கையில்,

இலங்கையில்நடைபெற்ற இறுதிப் போரில் விடுதலைப் புலிகள் அமைப்பு வெற்றி பெற்றிருந்தால் எந்த சர்வதேச நாடும் போர்க்குற்றங்களை அவர்கள் மீது சுமத்தியிருக்காது. ஜெனிவாவில் யோசனைகளை நிறைவேற்றியிருக்காது. இலங்கையில் மனித உரிமை பற்றி தேட எவரும் வந்திருக்க மாட்டார்கள்.

சர்வதேச நாடுகளின் தலைவர்கள் விடுதலைப் புலிகளுடன் புதிய நாட்டை எப்படி உருவாக்குவது என பது பற்றி வன்னியில் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருப்பார்கள்.

விடுதலைப் புலிப் பயங்கரவாதிகளகொடூரமான முறையில்மக்களை கொலை செய்து, சொத்துக்களை அழித்து கொண்டிருந்த போது மனித உரிமை பற்றி பேச ஸ்ரீபன் ராப் உள்ளிட்ட சர்வதேச பிரதிநிதிகள் எங்கிருந்தனர்?

அரந்தலாவயில் பிக்குமார் வெட்டிக் கொலை செய்யப்பட்ட போதும், காத்தான்குடியில் முஸ்லிம் பள்ளிவாசலில் முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்ட போதும், ஸ்ரீ மஹா போதி, தலதா மாளிகை போன்ற வணக்கஸ்தலங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போதும், கிளைமோர் குண்டு தாக்குதலை நடத்தி கொப்பிட்டிகொல்லவாயில் சாதாரண மக்களை புலிகள் கொலை செய்த போதும் சர்வதேச பிரதிநிதிகள் ஏன் ஒரு வார்த்தையை கூட பேசவில்லை. இந்த சம்பவங்கள் நடந்த போது அவர்கள் எங்கிருந்தனர்?.

விடுதலைப் புலிகள் இன்று இல்லை. அவர்களை போஷித்து வளர்த்த மேற்குலக அமைப்புகள் இன்று களத்தில் குதித்துள்ளன.

மெதுவாக அபிவிருத்தியடைந்து முன்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் நாட்டை மீண்டும் பின்நோக்கி இட்டுச் செல்லவே இவர்கள் முயற்சித்து வருகின்றனர்.

தமிழ் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் சிறிய எதிர்ப்பு மனநிலை இருக்குமாயின், அதனை அதிகப்படுத்த வேண்டும் என்பதே அவர்களின் தேவை. இதன் மூலம் மக்கள் மத்தியில் இருக்கும் ஐக்கியத்தை சிதைப்பதே அவர்களின் நோக்கம்.

ஜெனிவா மனித உரிமை பேரவையில் எதிர்வரும் மார்ச் மாதம் அமெரிக்கா இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற யோசனையை கொணடு வரவுள்ளது.

இலங்கையின் போர்க்குற்றம் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

சர்வதேச விசாரணை என்றால் என்ன? புலிகளை தாக்கியது போர்க் குற்றமா?. புலிகள் மீது தாக்குதல் நடததாது இரு தரப்பும் அங்காங்கே இருந்து கொண்டு புலிகளுடன் நட்பு பாராட்டிக் கொண்டிருந்தால் இப்படியான எந்த குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டிருக்காது.

புலிகளின் போரில் வென்றிருந்தால் போர்க்குற்றம் பற்றி தேடுவதற்கு எதுவும் இருக்காது. வெற்றி பெற்ற அரசாங்கம் இன்று போர்க்குற்றவாளியாக்கப்பட்டுள்ளது.

போரில் வெற்றி பெற்றதன் காரணமாகவே வெற்றி பெற்றவர்களை போர்க்குற்றவாளிகள் என முத்திரை குத்துகின்றனர் என்றார். (செ-11)

யாழ். மண்ணில் இருந்து ஒலிபரப்புச் செய்யப்படும் இணைய வானொலி சுடர் FM இற்கு

அறிவிப்பாளர்கள் தேவை

இரவில் கடமையாற்றுபவர்கள் விரும்பத்தக்கது

அறிவிப்பாளர்:

இனிய குரல் வளம்

நல்ல தமிழ் உச்சரிப்பு தகுதிகள் ஆங்கில மொழித் தேர்ச்சி

கணினி அறிவு

தொடர்புகளுக்கு:

077 055 72 61

077 086 85 42

மின்னஞ்சல் : infor@sudarfm.com

சுடர்fm

www.sudarfm.com

(4942)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

SPEED LANKA EXPRESS Courier

# வெளிநாடுகளுக்கான

## தபால் பொதிகள் சேவை



- வெளிநாடுகளுக்கு விரைவாக பொதிகளை உங்கள் வீட்டில் இருந்தவாறே அனுப்பும் வசதி.
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச் சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

**Speed lanka express cargo**

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net

(C-6265)



## விசேட விமான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு – சென்னை | – 18500 | RTN |
| கொழும்பு – திருச்சி | – 22000 | RTN |
| கொழும்பு – மதுரை | – 20600 | RTN |
| கொழும்பு – லண்டன் | – 70000 | O/W |
| கொழும்பு – டோகா | – 25200 | O/W |
| கொழும்பு – சிங்கபூர் | – 31000 | RTN |
| கொழும்பு – மிலான் | – 97000 | RTN |
| கொழும்பு – சுவிஸ் | – 114000 | RTN |
| கொழும்பு – ஜேர்மன் | – 96500 | RTN |
| கொழும்பு – பிரான்ஸ் | – 91200 | RTN |
| கொழும்பு – இத்தாலி | – 84500 | RTN |
| கொழும்பு – மலேசியா | – 19999 | RTN |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

**Nation Popular Travels & Tours**
#128,Brown Road, Jaffna
**0214 920 920**


## பௌத்த தீவிர...

நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன கோரக்கை விடுத்துள்ளார்.

பொது பல சேனா மற்றும் இராணுவ பலய மற்றும் சிஹல ராவய என்ற இந்த அமைப்புக்கள் இலங்கை அரசாங்கத்தின் ஆதரவுடனேயே இயங்கி வருகின்றன.

எனினும் அதிகாரம் அற்ற பொலிஸ துறையினால் இந்த அமைப்புக்களுக்கு எதிராக செயற்படமுடியாமல் உள்ளது.

இந்தநிலையில் அரசாங்கத் தில் உள்ள அமைச்சர் டியு குணசேகர போன்றவர்கள் மாக்ஸிஸத்தை மறந்து அரசாங்கத்தின் குற்றங்களை மறைக்கும் செயல்களுக்கு துணை போவதாக விக்கிரமபாகு குற்றம் சுமத்தியுள்ளார். (செ-11)


## வீடு வாடகைக்கு

நாவலர் வீதி, அன்னசத்திர லேனில் இரண்டு அறை ஒரு ஹோல் கொண்ட மாடி வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 077 0476 299
077 1634 876

(4976)



## தேவை

கட்டிட நிர்மாணத்துறையில் தேர்ச்சி பெற்றவரா? மேசன்/தச்சு/ வெல்டர்/ பெயின்டர்/ இலற்றீசியன்(1200/=,1500/=) கையுதவியாளர் (800/=,1100/=) தங்குமிடம் உணவு வசதியுண்டு. (கொழும்பை அண்மித்த பிரதேச ங்கள், யாழ், கம்பஹா, கண்டி(18-45 வயது) ஆட்கள் தேவை.

தொடர்பு:- 0775561883

(அ-6262)



## G.C.E (O/L) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே!

## விசேட கட்டணக் கழிவுகள்

பல்கலைக்கழக கல்வி,
வேலைவாய்ப்பு,
வெளிநாட்டில் உயர்கல்வி,
ஏனைய கற்கை நெறிகளை
மேற்கொள்ள காத்திருக்கிறீர்களா?



ஆங்கில அறிவு இல்லாமல் இவை தெவுமே சாத்தியப்படாது.

சர்வதேச தராதரத்திற்கு அமைய நவீன தொழில்நுட்பத்துடன் உங்களுக்காக எமது நிறுவனம் வழங்கும்

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick Learning Course) (1 1/2 Months)

**DIPLOMA IN ENGLISH** (2 Months)

- இப்பாடநெறிகளை பூர்த்தி செய்பவர்கள் City & Guilds இன் English examக்கு தோற்ற முடியும்.
- Birtish Council இனால் நடாத்தப்படும் Cambridge ESOL பரீட்சைகளுக்கும் தோற்ற முடியும்.
- Excellent Teachers' Panel & Individual attention
- எமது நிறுவனம் City & Guilds, British Council அங்கீகாரம் பெற்ற முகவர்கள்

Batch I :20-01-2014
Batch II :25-01-2014
Batch III :27-01-2014
Batch IV :01-02-2014

(C-6257)

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

No.15, Sirambiyady Lane, (Off Stanley Road), Jaffna.
No.3, 6th Lane, Vairavar Kovil Rd, Vairavapuliyankulam,Vavuniya.
Tel: 021-2224550 HotLines:0777222422, 0714299935, 0777730074 Tel :024-3245287



## மாபெரும் புத்தகக் கண்காட்சியும்

## மலிவு விற்பனையும்

**இடம்** நெல்லியடி நவீன சந்தைக்கு முன்னால் நேசன் லங்கா பினான்ஸ் (Nation Lanka Finance)

**காலம்** 16-01-2014 முதல் 20.01.2014 வரை

**இடம்** சிவன் கோவில் அருகில் பிரதான வீதி, பருத்தித்துறை.

**காலம்** காலை 8 மணி முதல் மாலை 7 மணிவரை

இலங்கை இந்திய தமிழ் ஆங்கில வெளியீடுகள் பாடப்பயிற்சி நூல்கள், அனைத்துப் புத்தகங்களையும்10%க்கும் மேற்பட்ட விசேட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்

(4975)

ஏற்பாட்டாளர்கள் : அம்பிகை புத்தக நிலையம்
ஓட்டுமடம் சந்தி, யாழ்ப்பாணம்.
Tel : 0752972851



வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532



## SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

## எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமங்கள் - இலங்கை

**கீழ்வரும் பாவித்த தளபாடங்கள், உபகரணங்களின் விற்பனைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

பாவித்த நல்ல நிலையிலுள்ள மரக்கட்டில்கள், இரும்புக்கட்டில்கள், மெத்தைகள், அலுவலக மேசைகள், LCD தொலைக்காட்சிகள் (Sanyo, Toshiba), CRT தொலைக்காட்சிகள் (Hitachi, LG), மின் விசிறிகள் (Ceilling, Industrial, Pedestrial, Table, Wall) குளிர்சாதனப்பெட்டி (Whirlpool), பிளாஸ்திக் நீர்க்கொள்கலன் (National 1000 Ltr), இரும்பு நீர்க்கொள்கலன் தாங்கி, சமையல் உபகரணங்கள், சலவை இயந்திரம் (LG) மற்றும் பாவித்த மின் சாதனங்கள் மற்றும் பல உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு.

பார்வையிடும், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம், திகதி 22.01.2014 தொடக்கம் 25.01.2014 காலை 8.00 தொடக்கம் மாலை 5.00 வரை.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 27.01.2014**

(4957)

**கீழ்வரும் முகவரியில் பொருட்களை பார்வையிடமுடியும்.**

**எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம்**

இல. 219, நாயன்மார் வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 221 1102, 0773116602



## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.

- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464 ,0212220393

(C-6272)



## நிரந்தர வேலைவாய்ப்பு

'தை பிறந்தால்வழிபிறக்கும்' உங்கள்வாழ்க்கை நிரந்தர தொழில் உடனடியாக அழையுங்கள். எம்மிடம் கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் கோழி இறைச்சி /காமெண்ட்/water bottel தூரிகை/ சொக்லட்/ தேயிலை/ குளிர்பானம்/my cola பென்சில் போன்ற பல தயாரிப்புக்கு + உற்பத்தி உதவியாளர் + லேபல் + பொதியிடல் + தரம் பிரித்தல் பிரிவுக்கு 18-50 ஆண்-பெண் தேவை உணவு & தங்குமிட வசதிகள் குறைந்த விலைகளில். சம்பளம் 20000/=,32000/= (நண்பர்/குழு/ தம்பதியர் ஒரே தொழிற்சாலைகளில் வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்பு. தொடர்பு:- 0775561883

(அ-6260)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org